
www.tamilarangam.net

සරිනිහර්
'SARINIHAR
# சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி
இதழ் 135 நவ. 20 - டிச. 03, 1997 விலை ரூபா 10.00

**மங்களத்தார் மாண்பு!**

எட்டி எட்டிப் பார்த்தும் எட்டாது போனதனால்
வெட்டிப் பழமீது புளிக்குமென்று – வீட்ட கதை
கேட்டிருப்பீர்। கேட்டதுண்டோ கறுப்பென்று மங்களத்தார்
மாட்டே னெனவுரைத்த மாண்பு?!

-ஈழமோகம்





## பட்ஜட் : திறந்த பொருளாதாரக் கொள்ளைத் திட்டம்

## ரோகணவின் இறுதிக் கணங்கள்



## மங்கள: எட்டாப் பழம் புளிக்கும்?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




சரிநிகர்

இரு வாரங்களுக்கு ஒரு முறை

*"சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே"*
-பாரதி

**ஆசிரியர் குழு**

ச. பாலகிருஷ்ணன்
சிவகுமார்
சரவணன்
எம். கே. எம். ஷகீப்
அரவிந்தன்
சி. செ. ராஜா
சிவகுருநாதன்
சேரன்

**வடிவமைப்பு**
ஏ. எம். றஷ்மி

**வெளியிடுபவர்**
ச. பாலகிருஷ்ணன்,
இல. 18/02, அலோ சாலை,
கொழும்பு 03.

**அச்சுப் பதிப்பு**
பிறின்ற் இன்,
இல. 07, கெகிடிய இடம்,
சிறிமல் உயன,
இரத்மலானை.

**ஆண்டுச் சந்தா விபரம்**
இலங்கை ரூபா 300/=
வெளிநாடு US $ 50
(தபாற்செலவு உட்பட)
காசுக் கட்டளை / காசோலை யாவும்
MIRJE என்ற பெயருக்கு எழுதப்படல் வேண்டும்.

எல்லாத்தொடர்புகளுக்கும்
**ஆசிரியர்**
**சரிநிகர்**
**இல. 04, ஜயரத்ன வழி,**
**திம்பிரிகஸ்யாய,**
**கொழும்பு 05.**

தொலைபேசி : 593615, 584380.
தொலை மடல் : 594229.
E-mail : sari@sri.lanka.net

முன்னைய பிரதிகள் வேண்டுவோர் எழுதுக. கைவசம் உள்ள பிரதிகள் அனுப்பி வைக்கப்படும்.

பிரசுரத்துக்கென அனுப்பப்படும் படைப்புகள் திருப்பி அனுப்பப்பட மாட்டாது.

படைப்புக்களை தாளின் ஒரு பக்கத்தில் தட்டச்சுச் செய்தோ அல்லது தெளிவான கையெழுத்தில் பிரதி செய்தோ அனுப்பி வைக்கவும்.


# காரணம் என்ன?

அம்பாறை நீகல் பட மாளிகையில் ஒரு நாள் பயங்கர சன நெரிசல். அதனுள் வெண்ணிற சீருடை, கழுத்துப்பட்டி, பாடசாலைச் சின்னம் பொருந்திய 'பாச்' முதலியவற்றுடன் சுமார் 75 மாணவமாணவிகள்.

மெட்னி, படம் 'உள்ளத்தை அள்ளித்தா!' எதற்கும் பாடசாலை சின்னமான 'பாச்'ஜ்யைப் பார்த்தோம். அதில் காரைதீவு விபுலானந்த மத்திய கல்லூரி என்று பொறிக்கப்பட்டிருந்தது. காரைதீவிலுள்ள இப் பிரபலமான பாடசாலையிலிருந்து 'உள்ளத்தை அள்ளித்தா' படத்திற்கு மாணவிகளைக் கூட்டி வந்ததன் காரணமென்ன? கல்வியூட்டவா?

**- மாணிக்க மடுவான்**

# காணிகளைத் தோண்டும் படையினர்!

மாவீரர்தினத்தையொட்டிய பாதுகாப்பு ஏற்பாடுகள் திருகோணமலையில் பலப்படுத்தப் பட்டுள்ளன. நகருக்குள் வரும் வாகனங்கள் யாவும் கவனமாகச் சோதனையிடப் படுகின்றன. பயணிகளும் - குறிப்பாக இளைஞர், யுவதிகள் யாவரும் அவதானமாக சோதனையிடப் படுகின்றனர்.

மோட்டார் சைக்கிள் உட்பட, சகல வாகனங்களும் காவலரண்களின் நுழைவாயிலுக்கு வெளியே நிறுத்தப்பட்டு, வாகனச் சாரதிகள் இறங்கி வந்து காவலரண்களில் வாகன இலக்கத்தைப் பதிந்த பின்னரே வாகனங்கள் சோதனையிடப்பட்டு உள்ளே அனுமதிக்கப் படுகின்றன.

இதேபோல் இராணுவக் கட்டுப்பாடு தளர்வான பகுதிகளில் குடியிருபபவர்கள் தங்கள் தேவைக்காக எடுத்துச் செல்லும் உணவுப் பொருட்கள் விடயத்திலும், பாதுகாப்புத் துறையினரின் கவனம் திரும்பியுள்ளது. அரிசி, சீனி முதலிய பொருட்கள் கூட, குறைந்தளவில் எடுத்துச் செல்லவே அனுமதிக்கப்படுகின்றது.

நகருக்குள்ளும் சோதனைகள் பலமாக உள்ளன. உட்துறை வீதியில் ஈ.என்.டி.எல்.எப். அலுவலகங்களில் ஒன்றாக இருந்த இடம் ஒன்று கடந்த வாரம் அங்குலம் அங்குலமாக பரிசோதிக்கப்பட்டிருக்கிறது. ஆயுதங்கள், மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் அந்தக் காணி பாதுகாப்புத்துறையினரால் பல இடங்களிலும் தோண்டப்பட்டது. எனினும், எதுவும் அகப்பட்டதாகத் தெரியவில்லை.

சுற்றிவளைப்புக்கள், திடீர் வீதி மறிப்புகள் என்பன தாராளமாகவே இடம்பெறுகின்றன.

**-விவேகி**

# அமைச்சரின் உத்தரவு! மூச்!

கல்முனையில் தமிழர் கலாசார மண்டபமொன்றை அமைக்க த.வி.கூட்டணி பிரமுகர் மு. மயில்வாகனம் முழு முயற்சியை மேற்கொண்டார்.

அதன் பலனாக கடந்த ஆண்டு பத்து லட்ச ரூபா நிதியை த.வி. கூட்டணி எம்.பி. கலாநிதி நீலன் திருச்செல்வம் ஒதுக்கியிருந்தார். ஆனால் கல்முனை வாழ் கூட்டணி பிரமுகர்களால் அரச தரிசு நிலமொன்றைப் பெறமுடியாமல் போனது துரதிருஷ்டமே. வந்த பணம் நாளடைவில் வேறு நோக்கங்களுக்குப் பயன்படுத்தப் பட்டு முடிவடைந்தது.

அதன் தொடர்ச்சியாக இந்த வருடம் ஒருவாறு ஓடித்திரிந்து மாகாண காணி ஆணையாளர் கே.பரமேஸ்வரனின் அனுமதி பெற்று 'கல்லடிக்குளம்' என்ற பகுதியில் ஒரு ஏக்கர் காணியைப் பெற்றனர்.

பின்பு கடந்த 22.09.1997இல் அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. அதே கலாசார மண்டபத்தைக் கட்ட நீலன் எம்.பி. மேலும் 5 லட்ச ரூபாவை ஒதுக்கியிருந்தார்.

அடிக்கல் நட பிரதேச செயலாளர் பளீலை அழைத்தனர். ஆனால் என்ன ஆச்சரியம்? அடிக்கல் நட்டு இரு நாட்களுக்குள் நடவடிக்கைகளை நிறுத்துமாறு அதே பிரதேச செயலாளர் உத்தரவு பிறப்பித்தார். அது தான் பரவாயில்லை என்று பார்த்தால் வைத்த அடிக்கல்லைப் பிடுங்கி எறிந்து அட்டகாசம் வேறு பண்ணப் பட்டிருக்கிறது. ஆனால் இது அப்பகுதிச் செய்தியாளர்களுக்கு ஏனோ தெரியாமல் போய் விட்டது.

புதிய கல்முனை நகர அபிவிருத்தித் திட்டத்துள் இக்கலாசார மண்டபம் அமைந்தது விட்டதென்று கூறி அமைச்சர் தான் நிறுத்த உத்தரவைப் பிறப்பித்திருந்தாராம்.

அதன் பின்பு கொழும்பிற்குச் சென்று பேசவென ஒரு கூட்டம் கல்முனையிலிருந்து புறப்பட்டது. ஏனென்று கேட்கிறீர்களா? சரி, கொழும்பில் கூட்டணியினர் அமைச்சருடன் இரு நாட்கள் பேசினார்கள். அமைச்சர் தனது நிலையிலிருந்து மாறவில்லை. அந்த இடத்தில் கட்ட முடியாது 50 யார் தள்ளி கட்டுங்கள்! என்று ஒரே முடிவாகக் கூறிவிட்டார். வேறு வழியின்றி கூட்டணியினர் கேட்டு விட்டுத் திரும்பினராம்.

**-நேசன்**

# மிஞ்சுமா?

கல்முனைப் பிராந்தியத்தில் நெதர்லாந்து உதவித்திட்டம் மற்றும் கல்வி அபிவிருத்தித் திட்டம் முதலியவற்றில் நடைபெற்று வரும் கட்டிட ஒப்பந்தத்தில் பலருக்கு பங்குள்ளதாம்.

மேலதிகாரி ஒரு வீதத்தைக் கேட்கிறாராம். இணைப்பாளர் ஒரு வீதத்தைக் கேட்கிறாராம். 15ம் கொலனி அதிபர் ஒருவர் 20,000/= கேட்டிருக்கிறாராம்.

கட்டிட ஒப்பந்தக்காரர் எங்கு போவார்? எல்லாவற்றுக்கும் மேலாக அவர்களின் தலைவர் தலையீடு ஒரு பக்கம்.

சரி அத்திவாரமாவது மிஞ்சுமா?

# தேசியக் கொடியை ஏற்று!

அண்மையில் புன்னாலைக் கட்டுவன் பகுதியிலுள்ள பாடசாலை அதிபர்களை அழைத்த புன்னாலைக்கட்டுவன் பகுதிக்கு பொறுப்பான இராணுவ அதிகாரி பாடசாலைகளில் தினமும் காலை வேளையில் பிரார்த்தனையின் போது தேசியக்கொடி ஏற்றப்பட வேண்டும் என உத்தரவிட்டுள்ளார்.

**-பரமர்**

# போயாக் கதை!

இரண்டாவது தடவையாகவும் ஒரு போயா தினத்தில் கொழும்பில் புலிகள் தங்கள் கைவரிசையைக் காட்டியிருக்கிறார்கள்.

பலத்த பாதுகாப்புகளுக்கு மத்தியில் களனிதிஸ்ஸ மின் நிலைய எண்ணைத் தாங்கிகளுக்கு அவர்கள் குண்டுவைத்து விட்டுச் சென்றிருக்கிறார்கள்.

இம்முறை தற்கொலைப் போராளி களோ, தாக்குதல் குழுக்களோ யார் பங்கு பற்றினார்கள் என்று தெரியாத விதத்தில் அவர்கள் குண்டு வைத்து விட்டுச் சென்றிருக்கிறார்கள். உயிரிழப்பு எதுவுமற்ற நடவடிக்கை,

சென்ற வாரம் பத்திரிகைகளைப் படிக்கும் ஒருவருக்கு எழுந்திருக்கக்கூடிய எண்ணங்கள் இவை.

அந்தளவுக்கு பத்திரிகைகள் எல்லாம் நான் முந்தி நீ முந்தி என்று போட்டிபோட்டுக்கொண்டு எழுதியிருக்கின்றன. அதிலும், வீரகேசரியின் கட்டுரையாளர்கள் எழுதியிருப்பதைப் பார்த்தால், அவர்களை கூட்டிக் கொண்டு போய் பார்க்க வைத்து விட்டுத் தான் புலிகள் குண்டுகளைப் பொருத்தியிருக்கிறார்களோ என்று தோன்றுமளவுக்கு 'கதை அளந்திருக்கிறார்கள்.

எப்படி வந்தார்கள், எப்படி குறட்டை எடுத்து கம்பியை வெட்டினார்கள், அதன்பிறகு எப்படி ஊர்ந்து தாங்கியண்டை போய் குண்டைப் பொருத்தினார் கள், என்றெல்லாம் விலாவாரி யாக நேர்முக வர்ணனை செய்திருக்கிறார்கள் வீரகேசரியின் கட்டுரையாளர்கள்.

இவ்வளவையும் யாருக்கும் தெரியாமல் கனகச்சிதமாக செய்த புலிகளுக்கு திடீரென உயிர்ப்பயம் வந்துவிடவே அவசர அவசரமாக கொண்டுவந்த பிரபாகரனின் படம் போட்ட பையையும் விட்டுவிட்டு ஓடியிருக்கிறார்கள்... பி.டி. சாமியின் மர்ம நாவல்களில் வரும் இறுதி அத்தியாயத்தை - துப்புத் துலக்குபவர் தமது கண்டுபிடிப்பை விளக்கும் பகுதி - மிஞ்சி விடுகிற கற்பனை வளத்துடன் அவர்களது செய்திக் கட்டுரை எழுதப்பட்டிருக்கிறது... தினமுரசு நாரதரையும் மிஞ்சிவிடும் விதத்தில்...!

ஆங்கில சிங்களப் பத்திரிகை களுக்கோ என்றால், பாதுகாப்பு நடவடிக்கையின் பலவீனம் பற்றிய கோபம்.

கூடவே செய்தி சேகரிக்கப்போன பத்திரிகையாளர்கள் மற்றும் தொடர்புசாதனவியலாளர்களை அங்கே போக விடாமல் தடை செய்து களேபரம் செய்த பொலிசார் மீதும் கோபத்துடன் பொழிந்து தள்ளியிருக்கிறார்கள். ரி.என்.எல் ஒளிபரப்பு சேவை இதை, அரசாங்கத்தின் திட்டமிட்ட ஒரு மூடிமறைக்கும் செயல் என்று கண்டனமும் செய்தது.

எப்படியோ எல்லோரதும் பேச்சாக இப்போது தெரிவது ஒன்று தான். அதுதான் புலிகள் பொதுமக்கள் அதிகமாக நடமா டாத நேரத்தில் தான் இனிமேல் தாக்குதல் செய்வார்கள் என்பது. இந்த முடிவுக்குப் 'பாதுகாப்பு வட்டாரமும்' வந்து விட்டது போலத் தெரிகிறது.

அதனால் தானோ என்னவோ, சாதாரண நாட்களை விட விடுமுறை நாட்களில் அதிகப் படியான சோதனைக்கெடுபிடிகள் கொழும்பு முழுவதும் நடைபெறுகின்றன.

சென்ற போயாவின்போது புலிகள் தாக்கியிருந்தும் இந்தப் போயா வின் போது புலிகள் தாக்குவார்கள் என பாதுகாப்பு வட்டாரம் நினைக்காமல் இருந்தது ஏன் என்றும் ஒரு பத்திரிகையாளர் கேள்வி எழுப்பியிருந்தார்.

ஆனால், கொழும்பு வாழ் தமிழ் மக்களது கவலையெல்லாம் என்னவோ, இந்த குண்டு வெடிப்பு என்ன மாதிரி நடந்தது என்பதை விடவும், அடுத்த போயாவின் போது அரச பாதுகாப்புப் படைகளால் தாம் அள்ளுப் படாமல் இருப்போமா இல்லையா என்பது தான்.

யுத்தக்களத்துப் போக விரும்பாத படையினரில் ஒரு சிலரது நடவடிக்கையாகவும் இருக்கலாம். புலிகளது வேலையாக இது இருக்குமென்று எப்படிச் சொல்வது? என்று கேட்டார் எனது நண்பர்.

பிரபாகரனின் படத்துடன் கண்டுபிடிக்கப்பட்ட பையைப் பற்றிச் சொன்னேன் நான்.

நண்பர் சிரித்தார். 'பிரபாகரனின் படம் போட்ட பையை தூக்கிக் கொண்டு இப்படி ஒரு வேலைக் காக புலிகள் வந்திருக்கிறார்கள் என்பதை நாமும் நம்பித்தான் ஆகவேண்டுமா? மத்திய வங்கி குண்டுவெடிப்பில் அகப்பட்ட தமிழ் அறிவிப்பு, ஏன் அதற்கு முதல் அத்துலத் முதலி கொலை யின் போது கிடைத்த அடையாள அட்டை போல இதுவும் ஒரு பொருள், அவ்வளவு தான். அதை புலிகள் தான் கொண்டு வந்து வைத்திருக்கவேண்டுமா? வேறு யாரும் செய்திருக்கமுடியாதா? அத்துலத் முதலி கொலையின் போது முகலன் றோட்டில் ஒரு தமிழ் இளைஞனின் சடலம் காணப்பட்டதுபோல நடந்திருக்க முடியாதா?

'முடியும் தான்...' என்று இழுப்பைத் தவிர என்னால் வேறொன்றும் பேச முடிய வில்லை.

# பட்ஜட் கதை!

ஜீ.எல். பீரிஸின் வரவு செலவுத் திட்டம் தமிழருக்கும், முஸ்லிம்களுக் கும் எதிரான ஒரு இனவாத அடிப்படை யிலமைந்த திட்டம் என்றார் எனது நண்பர் ஒருவர்.

ஏன்? பாதுகாப்புக்காக பெருமளவு நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாலா என்றேன் நான்.

இல்லை, புடவை வியாபரத்திலும், நகை வியாபாரத்திலும் 'பெற்றா மாக்கற்றில்' முன்னணியில் நிற்பவர்கள் அவர்கள் தான். அரசாங்கம் கொண்டு வந்த இந்த வரவு செலவுத் திட்டத்தில் தெரிவிக்கப் பட்ட வரிவிதிப்பு நீக்கத்தினால் இந்த இரண்டு துறைகளும் பாதிக்கப்பட்டு விட்டன. இனிவரும் மாதங்களில் அடுத்தடுத்து தமிழ், முஸ்லிம் மக்களது பெருநாட்கள் வரவுள் ளன. அந்தப் பெருநாட்களுக்காக பெருமளவு இறக்கு மதிகளை அவர்கள் செய்திருந்தார்கள். இப்போது சுங்க வரி நீக்கப்பட்டதால், அவர்களால் பொருட்களை நட்டத்திற்கு விற்பனை செய்யவேண்டி இருக்கிறது...!

''அதாவது தமிழ், முஸ்லிம் வியாபாரிக ளுக்கு இந்த பட்ஜட் நட்டத்தை ஏற்படுத்தப் போகிறது என்கிறாய்'' என்றேன் நான்.

இல்லையில்லை... அவர்களுக்கு நட்டம் ஏற்படுவதற்காகவே இந்த பட்ஜட் தயாரிக்கப்பட்டிருக்கிறது... இல்லாவிட்டால் சிங்கள வியாபாரிகள் செய்யும் தொழில் களுக் கும் கூட வரி விலக்கு செய்திருக்க லாமே...''

'ஓ.. அப்படியா' என்று கேட்டேன் நான்.

'என்ன ஆச்சரியப்படுகிறாய்? இந்த அரசாங்கத்தின் அரசியல் அது தானே என்றார் அவர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வடக்கு கிழக்கு தாயகக் கோட்பாட்டை நாங்கள் பேரம் பேசத் தயாரில்லை !

ரெலோ முதல்வர்- எம்.கே. சிவாஜி லிங்கம்



யுத்தத்தை நிறுத்துமாறு அரசையே கேட்கிறோம் புலிகளை அல்ல !

**இலங்கையின் அரசியல் வரலாற்றில் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக இது வரை முன்வைக்கப்பட்ட தீர்வு யோசனைகளை விட பொ.ஐ.மு. அரசாங்கத்தினால் தற்போது முன்வைக்கப்பட்ட யோசனைகள் முன்னேற்றகரமானவை என்று கூறப்படுகிறது. இது பற்றி நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?**

ஒவ்வொருவருடைய கண்ணோட்டத்தையும் பொறுத்தது அது. எங்களைப் பொறுத்த வரை தமிழ் மக்களுடைய அபிலாஷைகளை நிறைவேற்றக் கூடிய விதத்தில் இத்தீர்வுத் திட்டம் அமையவில்லை என்று தான் நாங்கள் கருதுகிறோம். ஏனெனில் எல்லாவற்றையும் விட மேலானது தாயகம். தமிழ் பேசும் மக்களுடைய பாரம்பரிய தாயகம் இத்தீர்வுத் திட்டத்தினூடாக இரண்டு அல்லது மூன்றாகத் துண்டாடப்படப் போகிறது. இதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. 95 ஒகஸ்ட் 3இல் இத்திட்டம் அறிவிக்கப்பட்டவுடனேயே தமிழ்க் கட்சிகள் உட்பட பலரும் விழுந்தடித்து வரவேற்புத் தெரிவித்த நேரத்தில், அலகு பற்றித் தெரியாது நாம் எதனையும் சொல்ல முடியாது என்று திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தோம். தமிழ் மக்களுடைய அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யாததால் இதனைப் பரிசீலனைக்கே எடுக்க முடியாது என்றே நாங்கள் கருதுகிறோம். அப்படியிருக்கும் போது இதனை எவ்வாறு முன்னேற்றகரமானது என்று நாங்கள் கொள்ள முடியும்?

**ஆனால், அம்பாறை தவிர்ந்த வடக்கு கிழக்கு இணைந்த ஒரு அலகு தான் இத்திட்டத்தினூடாக உருவாக்கப்படப் போகிறது என்று இதனை ஆதரிப்பவர்களால் சொல்லப்படுகிறதே?**

செப். மாதம் 29ம்திகதி நடைபெற்ற விசேட அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் அரசாங்கம் முன்வைத்த தீர்வுத் திட்ட அறிக்கையில் பின்வருமாறு கூறப்பட்டிருக்கிறது. திருலை, மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு வாக்கெடுப்பு நடைபெறும். அவ்வாக்கெடுப்பில் கிழக்கு வடக்குடன் இணைக்கப்பட வேண்டுமா என்ற கேள்வி முன்வைக்கப்படும். ஆம், என்று பதில் கிடைத்தால் திருமலை, மட்டக்களப்பு மாவட்டங்கள் வடக்குடன் இணைக்கப்பட்டு ஒரு வடகிழக்கு பிராந்திய அலகு உருவாக்கப்படும் எனக் கூறப்பட்டிருக்கிறது. இணைய வேண்டியதில்லை என்று வாக்களித்தால் வட மாகாணம், ஒரு பிராந்தியமாகவும், கிழக்கு மாகாணம் இன்னொரு பிராந்தியமாகவும் இருக்கும் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்நிலையில் மட்டக்களப்பு, திருமலை மாவட்டங்கள் வடக்குடன் இணைந்தால் வடகிழக்கு பிராந்திய சபை உருவாகும். அதே நேரத்தில் எவ்வித வாக்கெடுப்பும் இன்றி அம்பாறை மாவட்டத்திலுள்ள கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில் தொகுதிகள் உள்ளடங்கிய அம்பாறை தொகுதி நீங்கலாக தென்கிழக்கு பிராந்திய சபை உருவாகும்.

கிழக்கு மாகாணத்தில் அம்பாறை தொகுதிக்கு மாத்திரம் இன்னொரு வாக்கெடுப்பு நடைபெறும்; அவர்கள் தனித்திருக்கப் போகிறார்களா அல்லது அருகிலுள்ள ஊவா மாகாணத்துடன் இணையப் போகிறார்களா என்று. அதன் பின் அம்பாறையின் நிலை தெரியவரும். வடக்கு கிழக்கு பிராந்தியம் உருவாகி, தென்கிழக்கு பிராந்தியமும் உருவான பின்னர் அம்பாறை தனித்து ஒரு பிராந்தியமாக இயங்குமாயின் இலங்கையிலுள்ள 186 தொகுதிகளில் ஒரு தொகுதிக்கு ஒரு பிராந்திய சபை கொடுக்கப்பட்டதாகி விடும். இது மிகவும் கேள்விக்கிடமானது. பிராந்திய சபைத் திட்டத்தையே கொச்சைப்படுத்தி விடும். அது சரியானால், நாம் இவ்வாறு கேட்க முடியும்; புத்தளம் தொகுதியில் இன்று கணிசமான முஸ்லிம்கள் வாழ்கிறார்கள். அங்கு ஒரு வாக்கெடுப்பை நடாத்தி அவர்களுக்கு ஒரு தனிப்பிராந்தியத்தை உருவாக்கிக் கொடுக்கலாம் தானே. அல்லது அவர்கள் வடக்கு கிழக்குடன் இணைய விரும்புகிறார்களா இல்லையா என ஏன் கேட்கக் கூடாது.

வடக்கு கிழக்கில் இருக்கும் ஒரு தொகுதி மக்களை இன்னொரு மாகாணத்துடன் இணையப் போகிறீர்களா என்று கேட்க முடியுமானால், இன்னொரு தொகுதி மக்களை வடக்கு கிழக்குடன் இணைய விரும்புகிறீர்களா என ஏன் கேட்கக் கூடாது.

இன்னும் ஒரு படி மேலே போய் கேட்க விரும்புகிறோம்; தமிழ்த் தேசிய இனத்தின் அங்கமான மலையக மக்கள் இன்று வடகிழக்கிற்கு வெளியே சிங்கள மக்கள் அல்லாத தமிழ் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட நுவரெலியா மாவட்டத்திலேயே பெரும்பான்மையாக வாழ்கிறார்கள். அம் மாவட்டத்தை ஏன் ஒரு தனிப் பிராந்திய சபையாக உருவாக்கக் கூடாது?

**நீங்கள் இவ்வாறு கூறினாலும் காணி உரிமை, மொழி உரிமை, பிரஜாவுரிமை, பொலிஸ் அதிகாரங்கள் போன்றவற்றில் இத்தீர்வு யோசனைகள் முன்னேற்றகரமானவை என்று தானே இதனை ஆதரிப்பவர்கள் சொல்கிறார்கள்?**

காணி அதிகாரத்தைப் பொறுத்த வரையில் முன்னேற்றம் என்று பெரிதாக எதுவும் இல்லை. பிராந்தியத்திலுள்ள ஒரு காணி மத்திய அரசாங்கத்துக்குத் தேவைப்பட்டால் முதலமைச்சரின் ஆலோசனையுடன் அக்காணியை அது கோரலாம். அதனை பிராந்திய அரசு கையளித்தே ஆகவேண்டும் என்ற நியதியே இருக்கிறது. விரும்பினால் கையளிக்கலாம் என்றல்ல, கையளித்தே ஆகவேண்டும் என்றே கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. மத்திய அரசாங்கமோ அல்லது மத்திய அரசாங்கத்தின் ஏதாவதொரு அதிகார சபையோ கேட்டால் கையளித்தே ஆகவேண்டும். உதாரணமாக எதிர்காலத்தில் துறைமுக அபிவிருத்திக்காக நிலத்தை கையளியென்றால் கையளித்தே ஆக வேண்டிய நிலை உருவாகும். இத்தீர்வுத்திட்டத்தைப் பொறுத்தளவில் நாம் திட்டவட்டமாகக் கூறக்கூடியது தமிழ் மக்களுக்கு எந்தெந்த அதிகாரங்கள் கொடுக்கப்படக் கூடாதோ அவற்றைத் தவிர்த்து உருவாக்கப்பட்ட தீர்வுத் திட்டம் இது என்பது தான். உதாரணமாக நகர அபிவிருத்தி மத்திய அரசாங்கத்தின் கைகளிலேயே இருக்கின்றது. நகரங்கள் எனும் போது மாவட்ட தலைநகரங்கள் நகரங்களாகின்றன. திருமலை நகரை எடுத்துக் கொண்டால் அதனை அபிவிருத்தி செய்யும் அதிகாரம் பிராந்திய சபையிடம் கிடையாது. ஆனால், கிராம அபிவிருத்தியைப் பிராந்தியங்களிடம் விட்டிருக்கிறது. அதனையும் மத்திய அரசாங்கம் வைத்துக் கொண்டால் இன்னும் நன்றாக இருக்கும்.

**நீங்கள் கூறுவதைப் பார்த்தால் இதனை விட இலங்கை - இந்திய ஒப்பந்தம் முன்னேற்றகரமானது என்பீர்கள் போலிருக்கிறதே?**

அப்படி நாங்கள் கூறவில்லை. ஆனால் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை ஒரு அடிப்படையாக வைத்து அதிகாரப் பகிர்வை நோக்கி முன்னேறலாம் என்று தான் இடைக்காலத் தீர்வாக நாங்கள் அதனை ஏற்றுக் கொண்டோம். அலகைப் பொறுத்த வரையில் கிழக்கில் வாக்கெடுப்பு என்ற ஒன்றைத் தவிர பத்து வருடங்களாக இன்று வரை தற்காலிக இணைப்பு நீடிக்கிறது. ஆனால் இந்தத் தீர்வுத் திட்டத்தையோ எமது தாயகத்தை இரண்டு அல்லது மூன்று துண்டுகளாகக் கூறுபோடுகின்ற ஒரு சதித்திட்டமாகவே நாங்கள் காண்கிறோம்.

**ஆனால், இரண்டுமே வடக்கு கிழக்கு இணைப்பு விடயத்தில் சர்வஜன வாக்கெடுப்பை அடிப்படையாகக் கொண்டு தானே உருவாக்கப்பட்டிருக்கிறது?**

எங்களைப் பொறுத்தவரை இணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்தைப் பிரிப்பதை நாங்கள் ஒரு போதும் ஏற்றுக் கொள்ளப் போதில்லை. இணைப்பு என்ற சொல்லையும் நாங்கள் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. அது ஏற்கெனவே இணைந்தே இருக்கிறது. இணைந்திருந்த வடக்கு கிழக்குப் பகுதிகளைப் பிரிக்கத் தான் முற்படுகிறார்கள். ஆகவே இலங்கை - இந்திய ஒப்பந்தமாக இருந்தாலென்ன, எதுவாக இருந்தாலென்ன சர்வஜன வாக்கெடுப்பு என்ற கோட்பாட்டையே நாங்கள் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. அல்லாவிடின் அரசாங்கம் வடக்கு கிழக்குப் பூராவும் ஒரு சர்வஜன வாக்கெடுப்பை நடாத்தட்டும். அவர்கள் தெற்குடன் ஒன்றாக இருக்கப் போகிறார்களா, பிரிந்திருக்கப் போகிறார்களா என்று. அம்பாறைத் தொகுதியில் ஒரு வாக்கெடுப்பை நடாத்தி அவர்களது தலைவிதியை தீர்மானிப்பதாக இருந்தால் வடக்கு கிழக்கில் ஏன் ஒரு வாக்கெடுப்பை நடாத்தக் கூடாது இலங்கைக்குள் இருக்கப் போகிறீர்களா அல்லது இலங்கையை விட்டுத் தனியாக வாழப் போகிறீர்களா என்று. ஆகவே சர்வஜன வாக்கெடுப்பை அவர்களுக்கு வசதியாக நடத்துவதை நாங்கள் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. இன்று சர்வஜன வாக்கெடுப்பை நாம் ஏற்றுக் கொண்டால், கிழக்கு கூறு போடப்பட்டு விடும். ஒன்றில் கிழக்கு பிரிக்கப்பட்டு விடும். அல்லது கிழக்கு வடக்குடன் இணைக்கப்பட்டால் அம்பாறை துண்டாடப்பட்டு விடும். எப்படியோ இத்திட்டத்தினூடாக கிழக்கு துண்டாடப்படப் போகிறது. ஆனால் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் அவ்வாறில்லை. இது மிகவும் மோசமானதொரு திட்டம்.

**அவ்வாறாயின் இன்றைய சூழ்நிலையில் போரை விடுத்து நியாயமான அரசியல் தீர்வொன்றை வேறு எப்படி உருவாக்கலாம் எனக் கருதுகிறீர்கள்?**

எங்களைப் பொறுத்த வரையில் இந்தத் தீர்வுத் திட்டத்தை முதலில் விடுதலைப்புலிகளுக்கு அனுப்பியிருக்க வேண்டும். ஒரு சிலர் நினைக்கிறார்கள் விடுதலைப் புலிகளைஅழித்து அப்புறப்படுத்தி விட்டு, அல்லது பலவீனப்படுத்தி விட்டு இந்தத் தீர்வுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தலாம் என்று. எமக்கு அதில் நம்பிக்கை கிடையாது. இன்று நடத்திக் கொண்டிருக்கிற போரை அரசாங்கம் உடனடியாக நிறுத்த வேண்டும், யுத்த நிறுத்தம், நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை, மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் என்பவற்றினூடாக ஒரு நியாயமான தீர்வு காணப்படவேண்டும் என்றே நாங்கள் நினைக்கிறோம். ஐக்கிய இலங்கைக்குள் பெரும்பாலான தமிழ்மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய நீதியான தீர்வு உருவாக்கப்பட வேண்டும். ஒரு புறத்தில் போரை நடாத்திக் கொண்டு மறுபுறத்தில் ஒரு தீர்வுத் திட்டத்தை வைத்து விட்டு, தாம் இனப்பிரச்சினையை தீர்க்க முயல்வதாக இந்த அரசாங்கம் வெளியுலகிற்கு காட்டிக் கொண்டு இருக்கிறது. இதனூடாக ஒரு இராணுவத் தீர்வை நோக்கியே சென்று கொண்டிருக்கிறது. இதற்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். இப்போது யுத்தத்தை நிறுத்துமாறு அரசாங்கத்தை மட்டும் தான் நாங்கள் கேட்கிறோம். விடுதலைப் புலிகளை அல்ல. ஏனெனில் அரசாங்கம் தான் பெரிய இராணுவ முனைப்பை மேற்கொண்டு வருகிறது. அதனால் தான் அரசாங்கம் தான் யுத்தத்தை முதலில் நிறுத்த வேண்டும் என்று சொல்கிறோம். அரசாங்கம் யுத்த நிறுத்தத்தை அறிவித்து 24 மணித்தியாலம் அல்லது 48 மணித்தியாலத்தில் விடுதலைப் புலிகளும் யுத்த நிறுத்தத்தை அறிவிக்க வேண்டும். அதற்குப் பிறகு பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டும். இருதரப்பும் ஒருவரிடம் ஒருவர் நம்பிக்கை கொள்ளாததன் காரணமாகவே, நாம் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை வலியுறுத்துகிறோம். ஆனால் மூன்றாம் தரப்பு யார் என்பதை இரு தரப்பும் சேர்ந்து தான் தீர்மானிக்க வேண்டும்.

**அரசாங்கம் தான் இராணுவ முனைப்பிலேயே இருக்கிறது என்று நீங்கள் வலியுறுத்திக் கூறுவதைப் பார்த்தால் இதனை ஒரு ஆக்கிரமிப்பு யுத்தம் என்று கருதுவதாகப்படுகிறதே?**

ஆம். சமதானத் தீர்வைக் கொண்டு வருவதாகச் சொன்ன அரசாங்கத்திற்கு இன்று யுத்தத்தை நடாத்துவதற்கு எந்த வகையான தார்மீக உரிமையும் கிடையாது . 95 ஏப்ரலில் யுத்தநிறுத்தத்தை புலிகள் மீறினார்கள் என்று சொல்லப்பட்டாலும் கூட, அந்தப் பேச்சுவார்த்தை முறிந்ததற்கான பெரும் பொறுப்பை அரசாங்கம் தான் ஏற்க வேண்டும்.

அரசாங்கம் இன்று தற்காப்பு யுத்தம் நடாத்துவதாகக் கூற முடியாது. தரைவழிப்பாதை திறக்கப்பட்டதன் பின்பு தான் புலிகளுடன் பேசப்போவதாகக் கூறப்படுகிறது. ஆனால், இந்தப் பாதை திறக்கப்பட்ட பிறகு அல்லது விடுதலைப் புலிகள் பலவீனமான பிறகு பேசவருவார்கள் என்று நம்பினால், அதைவிட முட்டாள் தனம் ஒன்றும் இருக்கப் போவதில்லை. பலவீனப்பட்ட நிலையில் ஒரு போதும் அவர்கள் பேச வர மாட்டார்கள். அவ்வாறானால், இலங்கை ஒரு பெரும் நாசகரமான அழிவைத் தான் எதிர்கொள்ள வேண்டியிருக்கும். இதை நாம் ஒரு எச்சரிக்கையாக அரசாங்கத்திற்கு சொல்ல விரும்புகிறோம். பேசுவதாக இருந்தால் இது தான் கடைசிச் சந்தர்ப்பம். இதைவிட்டு மேலும் இராணுவ நடவடிக்கையைச் செய்து பலவீனப்படுத்திவிட்டு, பேசுவதாக இருந்தால், அது வெறும் பகல் கனவாகவே முடியும்.

**ரணிலின் இந்திய விஜயத்தின் பின்னர் ஐ.தே.க மீளவும் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை தூக்கிப் பிடிப்பதாகச் சொல்லப்படுகிறதே?**

எங்களைப் பொறுத்த வரை வடக்கு கிழக்கு மாகாணங்கள் பிரிக்கப்பட முடியாதது. இன்னும் சொல்வதானால், தாயகக் கோட்பாட்டை நாங்கள் பேரம் பேசத் தயாரில்லை. இதன் அடிப்படையில் ஏதாவது ஒரு தீர்வு அமையுமாக இருந்தால் நாம் அதனைப் பரிசீக்கத் தயாராக இருக்கிறோம். அதை ஏற்றுக் கொள்ளாத எந்தத் தீர்வையும் அது இலங்கை - இந்திய ஒப்பந்தமாக இருந்தால் என்ன இப்போதைய திட்டமாக இருந்தால் என்ன? அதனை நாங்கள் நிராகரிப்போம்.

**நீங்கள் குறிப்பிட்டவாறான பலவீனங்கள் தீர்வு யோசனைகளில் இருக்கின்றன என்பதை ஏற்றுக் கொண்டு, அதற்கு விமர்சன ரீதியான ஆதரவு நல்கலாம் என்று கூறப்படுவதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

எங்களைப் பொறுத்த வரையில் நிறைவேறாத, நடக்கப் போகாத ஒரு விடயத்துக்கு தேவையில்லாமல் ஆதரவைக் கொடுத்து அரசாங்கம் நடாத்திக் கொண்டிருக்கும் யுத்தத்துக்கு ஒரு அங்கீகாரத்தை நாம் வழங்கத் தயாரில்லை. ஆகவே, நாம் சகல தமிழ் பேசும் கட்சிகளிடமும் விடுக்கும் வேண்டுகோள்; அரசாங்கத்துக்குக் கொடுக்கும் ஆதரவை நிறுத்துவதனூடாக அரசாங்கத்தை சரியான பாதைக்குக் கொண்டு வர முயல வேண்டும் என்பதாகும்.

**இத்தீர்வுத்திட்டத்துக்கு மக்களாதரவைப் பெற அரசாங்கம் முயல்கிறது. அது போலவே எதிர்க் கட்சியையும் தன்வழிக்குக்கொண்டு வரும் முயற்சிகளில் அது ஈடுபடுவதாகச் சொல்கிறார்கள். தமிழ் கட்சிகளோ ஏற்கெனவே ஆதரவளித்துக் கொண்டிருக்கின்றன. இச்சூழல் அரசாங்கம் இத்தீர்வை அமுல்படுத்துவதற்குச் சாதகமாகவே உள்ளது என்று சொல்லப்படுகிறது அவ்வாறானால் உங்களது நிலைப்பாடு எதுவாக இருக்க முடியும்?**

நிலைமை அவ்வாறல்ல, பிரதான எதிர்க்கட்சியின் ஆதரவு இத்தீர்வுத் திட்டத்துக்கு இல்லை. இதனால் 2/3 பெரும்பான்மை கிடைக்குமா என்பதில் அரசாங்கமே நம்பிக்கை இழந்து காணப்படுகிறது.

—▶9

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# லஞ்ச ஊழல் ஆணையாளர்– நெலும் கமகே: யாருக்குத் தலையிடி?



சந்திரி

பொ.ஐ.மு. அரசாங்கம் பதவிக்கு வந்ததும் செய்யப் போவதாகக் கூறிய விடயங்களுள் முக்கியமான ஒன்று, இந்த நாட்டில் கடந்த 17 வருட காலமாக நிலவிய ஐ.தே.க ஆட்சியின் போது தலைவிரித்தாடிய லஞ்சத்தையும், ஊழலையும் இல்லா தொழிப்பது என்பதாகும்.

அது தனது தேர்தல் விஞ்ஞாபனத்திலும் கூட இது பற்றி எழுதியிருந்தது.

அன்றைய ஜனாதிபதி விஜேதுங்கவின் ஐ.தே.க. அரசாங்கம் லஞ்ச ஊழல் ஆணையாளர் நெலும் கமகே அவர்களை அப்பதவியிலிருந்து நீக்கியிருந்தமை குறித்துக் கூட இந்த தேர்தல் விஞ்ஞாபனம் சுட்டிக் காட்டியிருந்தது. அரசாங்க அரசியல்வாதிகளை விசாரிப்பது தொடர்பாக ஆணையாளருக்கு சட்ட ரீதியாக இருந்த குறைகளை நிவர்த்தி செய்யும் புதிய சட்டமொன்றைக் கொண்டு வருவதாகவும் அது தெரிவித்திருந்தது.

சொன்னபடியே, பொ.ஐ.மு அரசாங்கம் பதவிக்கு வந்ததும் இந்த சட்டத்தில் திருத்தத்தைக் கொண்டு வந்ததுடன், லஞ்ச ஊழல்களுக்காக ஒரு நிரந்தர ஆணைக் குழுவையே நியமித்தது. மூன்று ஆணையாளர்களைக் கொண்ட இந்த ஆணைக்குழுவின் இயக்குநர் நாயகமாக திருமதி நெலும் கமகே அவர்களை மீண்டும் நியமித்தது. பொ.ஐ.மு. அரசாங்கம் சொன்னபடியே செய்த ஒரே உருப்படியான வேலை என இதைச் சொல்வார்கள்.

இந்த ஆணைக்குழுவுக்கான ஆணையாளர்களை ஜனாதிபதி அவர்களே நியமிப்பார். முதற் தடவையாக உருவாக்கப்பட்ட இந்த ஆணைக் குழுவுக்கு தலைவராக ரீ.ஏ.டி.எஸ். விஜேசுந்தர (முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர்) அவர்களையும் ஆணைக் குழுவின் ஏனைய அங்கத்தவர்களாக சிவா செல்லையா (முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர்) பி.எம்.விஜயசூரிய (முன்னாள் கணக்காய்வாளர் நாயகம்) ஆகியோரும் நியமிக்கப்பட்டனர். விஜயசூரிய அவர்கள் பின்னர் இப்பதவியிலிருந்து விலகிய போது அவரது பதவிக்கு ஓய்வு பெற்ற பொலிஸ் மா அதிபர் ருத்ரா ராஜசிங்கம் நியமிக்கப்பட்டார். அதேவேளை, சிவாசெல்லையா அவர்கள் காலமானதால் ஏற்பட்ட இடத்திற்கு இதுவரை யாரும் நியமிக்கப்படவில்லை.

புதிய சட்டத் திருத்தப்படி ஆணைக் குழுவின் செயலாளர் நாயகமான நெலும் கமகே அவர்களுக்கு முன்பு அவர் ஆணையாளராக இருந்த காலத்திலிருந்து அதிகாரங்கள் குறைக் கப்பட்டிருந்தாலும், புதிய ஆணைக் குழுவின் அதிகாரங்கள் அதிகரிக்கப் பட்டிருந்தன.

நேர்மையும், துணிவும் உள்ள அதிகாரி என்று பெயர் பெற்ற நெலும் கமகே அவர்கள், விஜேதுங்க ஆட்சிக் காலத்தில் ஐ.தே.க. அரசியல்வாதிகள் பற்றிய விசாரணையில் இறங்க முயன்றதை அடுத்தே அவரது பதவி பறிக்கப்பட்டது என்று வெளிப்படையாகவே பேசப்பட்டது.

பொ.ஐ.மு. அரசாங்கத்தில் அவரது நெருக்கடி வேறு விதத்தில் வந்துள்ளது.

அவரது கணவர் பிரேமலால் கமகே போலிக் கையெழுத்திட்டார், தனது வயதை குறைத்துக் காட்டி தனது பதவியில் தொடர்ந்து இருந்தார் என்ற குற்றச்சாட்டுக்களின் பேரில் இலஞ்ச ஊழல் குற்றச் சாட்டுக்குள்ளாக்கப் பட்டிருந்தார். தேசிய கட்டிட ஆய்வு நிறுவனத்தில் (NBRO) அதிகாரியாக கடமையாற்றும் இவர் பற்றிய விசாரணைகள் நடந்து வருகின்றன.

இதேவேளை, கடந்த 3ம்திகதி முதல் சுகயீன விடுமுறையில் சென்றிருந்த இயக்குநர் நாயகம் நெலும் கமகேயின் இடத்திற்கு புதிய ஒருவரை நியமிக்க ஆணைக்குழு முயற்சி எடுத்துள்ளதாகக் கூறப்படுகிறது. அத்துடன் இவ்வாணைக்குழுவின் தலைவர், திருமதி கமகேயிடம் அவரது கணவர் மீதான விசாரணைக் குற்றப்பத்திரத்தின் அடிப்படையில் வழக்குத்தாக்கல் செய்வதற்கு கையொப்பமிடுவாரா என்று கேட்டதாகவும், திருமதி கமகே மீதும் விசாரணைகள் மேற்கொள்ளப் படவிருப்பதாகவும், அந்த விசாரணையும் கூட திருமதி கமகேயின் கீழ் பணிபுரியும் விசாரணை அத்தியட்சகர் மூலம் செய்ய ஆணைக்குழு முயன்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. தம்மீது ஆதாரமற்ற குற்றச் சாட்டுக்களைச் சுமத்தி விசாரணை நடாத்த கமிசன் முயல்வதாகக் கூறி அதைத் தடை செய்யும் மேன்முறையீட்டு வழக்கொன்றை திருமதி கமகே அவர்கள் மீயுயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார். அவரது முறையீட்டை விசாரிக்க இருந்த நீதியரசர்கள், ஆணைக்குழு தலைவரையும், திருமதி கமகே அவர்களையும் தமக்கு நேரடியாகத் தெரியாதென்பதால் விசாரிக்க மறுத்து விட்டனர். பின்னர் இது வேறு மூன்று நீதியரசர்கள் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப் பட்டது. இயக்குநர் நாயகம் அவர்கள் மீதான விசாரணைக்கு இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்த நீதியரசர்கள் பூரண விசாரணைக்காக வழக்கை ஒத்திப் போட்டுள்ளனர்.

இதேவேளை பிரேமலால் கமகே அவர்கள் லஞ்ச ஊழல் விவகாரம் தொடர்பான விசாரணையில் தமது கையெழுத்தைப் பரிசோதிப்பதற்கு வரமறுத்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில், அவர் மீது கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் பிடிவிறாந்து ஒன்றும் பிறப்பிக்கப்பட்டது.

ஆயினும் இவ்வுத்தரவு பின்னர் கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் கண்டனத்துக்குள்ளாக்கப்பட்டதுடன் ரத்தும் செய்யப்பட்டது. மேல்நீதிமன்ற நீதியரசர் தமது தீர்ப்பில் பிரேமலால் கமகே அவர்களுடைய அடிப்படையான நீதி உரிமைகளைக் கூட கவனத்தில் எடுக்காது ஆணைக் குழு அதிகாரிகள் செயற்பட்டிருக்கிறார்கள் என்று கண்டனம் தெரிவித்திருந்தார்.

மொத்தத்தில் இந்த இரண்டு விவகாரங்களும் இன்று நீதிமன்றத்தின் முன்னால் இருப்பதால், இவை பற்றி அதிகமாக எதுவும் பேசுவது முடியாது என்ற போதும் சில சந்தேகங்கள் எழுவதை சொல்லி வைக்கலாம்.

ஒன்று; திருமதி நெலும் கமகே அவர்கள் திட்டமிட்டு ஓரங்கட்டும் ஒரு முயற்சி நடக்கிறது. மீயுயர் நீதிமன்றத்தில் அவர் தாக்கல் செய்த மேன்முறையீட்டில் தம்மீது தனிப்பட்ட காரணங்களுக்காகவே எந்தவித உண்மையுமற்ற குற்றப்பத்திரிகை தயாரிக்கப்பட்டிருக்கிறது என்று கூறுகிறார் இயக்குனர் நாயகம்.

இரண்டு; நேர்மையான அதிகாரி என இனங்கானப்பட்ட, பரவலாக பேசப்பட்ட, பொ.ஐ.மு. அரசாங்கம் பதவிக்கு வந்த போது மிகவும் மதித்த அதிகாரியான நெலும் கமகே அவர்கள் அதிகாரத்தில் இருப்பது இப்போது விசாரணையை எதிர்நோக்கும் ஒரு சில அரசியல்வாதிகட்கு தலையிடியாக இருக்கக்கூடும் என்பது இத்தகைய ஓரங்கட்டலுக்குக் காரணமாக இருக்கலாம்.

மூன்று; இலஞ்ச ஊழல் ஒழிக்கவென உருவாக்கப்பட்ட ஆணைக்குழுவுக்குள்ளும் இத்தகைய அதிகார துஷ்பிரயோகங்கள், ஊழல்கள் நடக்கிறதோ என்ற சந்தேகம்.

அரசியல்வாதிகளதும், அரச உயர் அதிகாரிகளதும் ஊழல்களும், அதிகார துஷ்பிரயோகங்களும் பரவலாக பத்திரிகைகளில் அம்பலமாகிக் கொண்டிருக்கின்றன. பத்திரிகைகள் ஆதாரபூர்வமான தகவல்களை வெளியிட்டும் வருகின்றன. ஆணைக்குழு இவற்றை கவனத்தில் எடுத்து செயற்படும், படவேண்டும் என்பதும் இக்கட்டுரையின் நோக்கங்களில் ஒன்றாகும்.

இந்த நிலையில் நேர்மையானவர் என்று மதிக்கப்பட்ட ஒரு அதிகாரி மீது, வலுவற்ற குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுவதை சாதாரணமாக எடுத்துவிட முடியாது தான். நீதிமன்றத் தீர்ப்பு வரும்வரை பொறுத்திருந்து பார்க்க வேண்டும்!

திருமதி கமகே அவர்கள், முன்பு போலவே இப்போதும் நேர்மையானவராக இருப்பார் என்றால் இப்போதும் அரசியல்வாதிகளின் மீது விசாரணையில் இறங்க முனைவாராக இருந்தால், ஐ.தே.க. காலத்தில் நடந்த அதே நிலை இப்போதும் ஏற்படாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

ஏனென்றால், இப்போதைய உண்மையான ஐ.தே.க, ரணில் தலைமையிலான ஐ.தே.க அல்ல, அது சந்திரிகா தலைமையிலான பொ.ஐ.முவே தான்.

அதன் எல்லாப் பரிமாணங்களிலும்!

## அரச சார்பற்ற நிறுவனங்கள் : அரசுக்கு எதிராக?

இந்நாட்டுத் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான விதத்தில் செயற்படுவதாகக் கூறப்படும் அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்பாகக் கண்டறிந்து அவற்றின் நடவடிக் கைகளை உடனடியாக நிறுத்த அரசு தயாராவதாகத் தெரிகிறது.

நாட்டினுள் பல்வேறு விதத்தில் செயற்படும் பதிவு செய்யப்பட்ட அரச சார்பற்ற அமைப்புக்கள் 25,000 மட்டில் உள்ளன. அவற்றுள் இந்நாட்டு மக்களுக்கு கவனிக்கத்தக்க பணியாற்றுபவை 500 விடக்குறைவான எண்ணிக்கையானவை மட்டுமே என அரசுக்குக் கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றனவாம்.

இதேசமயம், இவ்வாறான சில அமைப்புக்கள் தேசிய பாதுகாப்புக்கும், தேசிய நல்லொழுக்கத்துக்கும் பயங்கரமான நிர்ப்பந்தம் ஏற்படுத்தக் கூடிய விதத்தில் செயற்படுவதாக அறியக் கிடைக்கிறது.

இந்நிலைமையின் கீழ் இந்நாட்டில் உள்ள அனைத்து அரச சார்பற்ற அமைப்புக்களதும் செயற்பாடு தொடர்பாக முறையான புலனாய்வொன்றைச் செய்ய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. அத்தோடு பதிவு செய்யப்படாத அரசு சார்பற்ற அமைப்புகளின் தலைவர்களைக் கொழும்புக்கு அழைத்து அவ்வமைபபுக்களின் செயற்பாடுகள் தொடர்பாக விசாரித்தறியும் நடைமுறை இப்போது தமது அமைச்சினூடாக மேற்கொள்ளப்படுவதாக சமூக சேவைகள் அமைச்சர் பேர்ட்டி பிரேமலால் திசாயநாயக்க தெரிவித்துள்ளார்.

இவ்வாறான சில அரச சார்பற்ற அமைப்புகளுக்கு அந்நிய நிதியுதவி கொட்டிக் கொண்டு வந்தாலும், அவை செலவழிக்கப்பட்ட விதம் தொடர்பாக எதுவித தெளிவான வேலைத் திட்டமும் இல்லாததும் தெரிய வந்துள்ள தாம்.

இதேசமயம் சில அமைப்புகள் அரசின் உத்தரவு, கட்டளைகள் சட்டங்களைக் கவனத்திலெடுக்காது, தாம் விரும்பியபடி செயற்பட்டிருந்ததாகக் கூறப்படும் பல சந்தர்ப்பங்கள் தொடர்பாக அரசுக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன.

அவ்வாறான சில அரச சார்பற்ற நிறுவனங்கள் இப்போது நடை முறையிலுள்ள 1980ஆம் ஆண்டு தொண்டர் அமைப்பு பதிவு கண்காணிப்புச் சட்டத்தில் உள்ள குறைபாடுகள் காரணமாகவே அவ்வாறு தாம் நினைத்தபடி செயற்பட இடமளிக்கப்பட்டது என பேர்ட்டி பிரேமலால் திசாநாயக்க கூறினார். அச்சட்டத்தை இப்போதைக்குப் பொருத்தமான விதத்தில் திருத்தி இந்நாட்டில் செயற்படும் எல்லா அரச சார்பற்ற அமைப்புகளதும் செயற்பாடுகள் வெளிப் படையா கத் தெரியக் கூடிய விதத்தில் அரசுடன் உடன்பாடொன்றுக்கு வரத் தேவையான புதிய சட்டங் கள் அதனுள் உள்ளடக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

விசேஷமாகத் தவறு, ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபடும் தொண்டர் அமைப்புக்களுக்கு தண்டனை விதிக்கக் கூடிய விதத்தில் அச்சட்டத் திருத்தம் செய்ய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இதனூடாக அரச சார்பற்ற அமைப்புக்களின் செயற்பாடுகளைத் தடை போடுவதல்ல, அவற்றை முறைப்படி நடத்திச் செல்வதே தமது நோக்கம்எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்நாட்டில் செயற்படும் அரச சார்பற்ற அமைப்புகள் பலவும் உரிய மாகாண சபைகளின் கீழ் பதிவு செய்துள்ளதால் அது தொடர்பாக தகவல் பெற்றுக் கொள்வதற்காக அம் மாகாண சபைகளின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளவும் சமூக சேவை அமைச்சு தீர்மானித்துள்ளது.

## வாசுவுக்கு எதிராக சந்திரிகா ?

இரத்தினபுரி மாவட்டப் பொ.ஐ.முன்னணிப் பா.உ. வாசுதேவ நாணயக்காரவுக்கு எதிராக ஒழுங்கு விசாரணையொன்று நடைபெறும் வரை பொ.ஐ.முவின் தலைவர்கள் மட்டத்திலான கூட்டங்களில் தாம் கலந்து கொள்ளப் போவதில்லை என ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவுக்கு அறிவித்துள் ளார்.

வாசுதேவ தொடர்ந்தும் அரசை அசௌகரியத்துக்கு உட்படுத்தும் விதத்தில் செயற்படுவது தொடர்பாகப் பொ.ஐ.மு. ஏதாவது நடவடிக்கையொன்றை எடுக்க வேண்டுமெனக் கடந்த நவம்பர் நான்காந் திகதியன்று நடைபெற்ற ஸ்ரீ.ல.சு.க. மத்திய குழுக் கூட்டத்தில் வலியுறுத்தித் தெரிவிக்கப்பட்டுள்தாக அறியக் கிடைத்துள்து. அக்கூட்டத்தில் ஜனாதிபதி இது தொடர்பாக நீண்ட விளக்கவுரையொன்றை நிகழ்த்தியதாக அறியக் கிடைக்கிறது. இங்கு கருத்துத் தெரிவித்துள்ள பொ.ஐ.மு. பொதுச்செயலாளர் தி.மு. ஜயரத்ன, வாசுதேவ அரசை அசௌகரியங்குட்படுத்தும் விதத்தில் கருத்துத் தெரிவிக்கும் பல சம்பவங்கள் தொடர்பாக அவர் உறுப்பினராகவுள்ள லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர்களுக்கு அறியப் படுத்தியுள்ளதாகத் தெரிவித்துள்ளதாக அறியக் கிடைத்துள்ளது.

இதேசமயம் வாசுதேவ சில கருத்துக்களைத் தெரிவித்து வந்தாலும் பொ.ஐ.மு.வைச் சரியான பாதையொன்றில் செல்ல வைக்கக் கடும் முயற்சியில் ஈடுபட்டுள்ள ஒருவராதலால் அவர் தொடர்பாகக் கடும் போக்கொன்றை எடுப்பதற்கு முன் மேலும் விசாரித்தறிய வேண்டுமென இக்கூட்டத்தில் கலந்து கொண்ட ஸ்ரீ.ல.சு.க., பா.உ. சிலர் சுட்டிக்காட்டியுள்ளதாகத் தெரிய வருகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# திறந்த பொருளாதாரக் கொள்கை(ளை)யின் கீழ் மக்கள் வரவு செலவுத் திட்டமா?

நோசமறுப்பாளர்:

ஜி. எல்.பீரிஸின் 'மக்கள் வரவு செலவுத்திட்டம்' ஒருபுறம் அவலை எதிர்பார்த்திருந்த எதிர்க் கட்சியான ஐ.தே.கவுக்கு வெறும் வாயை மெல்லும்படி தள்ளி விட்டிருக்கும் அதே நேரத்தில் இலங்கையின் தொழிற்துறையை சார்ந்தவர்களிடமிருந்து பலத்த எதிர்ப்பையும் ஏற்படுத்தி விட்டிருக்கிறது. குறிப்பாக புடவைத் தொழில், நெசவுத்தொழில் மற்றும் ஆபரணத் தொழிலில் ஈடுபடுவோர்களது எதிர்ப்பை அது கிளப்பி விட்டுள்ளது.

அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இந்த வரவு செலவுத்திட்டத்தில் தங்க ஆபணரத் தொழில்கட்கான வரிச் சலுகையை வழங்கும்போது இந்தச் சிறு தொழில்கள் மேலும் சிறப்புற வேண்டும், வளர வேண்டும் என்பதற்காகவே தான் இவற்றுக்கு வருமான வரி, பாதுகாப்புத் தீர்வை என்பவற்றையும் இறக்குமதித் தீர்வையையும் இல்லாமல் செய்ய முன்மொழிந்துள்ளதாகக் கூறுகின்றார். புடவைக் கைத் தொழிலைப் பொறுத்த வரை அத்துறையை வளர்ப்பதற்காக வேண்டி போட்டித் தன்மையை உருவாக்கும் விதத்தில் இறக்குமதி செய்யப்படும் புடவைகட்கான தீர்வையை நீக்கி விட்டுள்ளதாக அவர் அறிவித்திருக்கிறார்.

அப்படி இருக்க அவரது முன்மொழிவுகளுக்கு இத்துறை சார்ந்தோரால் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டிருப்பதற்கு காரணம் என்ன?

அமைச்சர் ஜி.எல். பீரிஸ் அவர்களது கடமையாக இருந்தது யுத்தத்தை நடத்திக் கொண்டிருக்கும் அதே வேளை மக்களுக்கு கவர்ச்சிகரமாகத் தோன்றக் கூடியதும் அவர்களுக்கு உடனடி நெருக்கடிக்ளைச் சுமத்தாததுமான பிரேரணைகளின் மூலம் அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் ஒன்றைத் தயாரிப்பதாகும். 'மக்கள்' வரவு செலவுத் திட்டம் என்று வர்ணிக்கப்பட்ட இந்த வரவு செலவுத் திட்டம், மக்கள் பாரியளவ நன்மைகளைப் பெறுகின்ற ஒரு திட்டமாக தன்னை வெளிக்காட்டியாக வேண்டும். அதே வேளை அரசாங்கத்திற்கு தேவையான நிதித்தேவை நிறைவு செய்யப்படவும் வேண்டும். உலக வங்கியும், சர்வதேச நாணய நிதியமும் இதற்குரிய ஆலோசனைகளை தாராளமாக வழங்கத் தயாராக இருந்தன.

அவர் எடுக்க வேண்டிய ஒரு தீர்மானமாக இருந்தது, தாம் இன்னும் எந்தளவு தூரத்திற்கு திறந்த பொருளாதாரக் கொள்கைக்கு தம்மை அர்ப்பணிக்கலாம் என்பதே! திறந்த பொருளாதாரக் கொள்கையின் மையம் போட்டிச் சந்தையாகும். முற்று முழுதான போட்டி நடக்கும் போது, பொருட்களின் தரமும் அதிகரிக்கும், விலையும் குறையும் என்பதே அதன் சித்தாந்தம். இந்த திறந்த பொருளாதாரக் கோட்பாட்டின் இன்னொரு அம்சம் 'தக்கன பிழைக்கும்' என்பதாகும். எந்தவொரு நிறுவனம் பலமுள்ளதாக - அது நிதிபலம், தரச்சிறப்புப்பலம், சந்தைப்படுத்தல் நிபுணத்துவப் பலம் என்று அனைத்துப் பலங்களையும் கொண்டதாக இருக்கிறதோ அதனால் மட்டுமே இந்தச் சூழ்நிலையில் தப்பிப் பிழைக்க முடியும். ஏனென்றால் சர்வதேச இராட்சத நிறுவனங்களது உற்பத்திப் பொருட்கள் தீர்வையின்றி இங்கு வந்து குவிகையில் அவற்றின் தரச்சிறப்பும் மலிவு விலையும் காரணமாக அவற்றுடன் உள்நாட்டு உற்பத்திகள் போட்டியிட முடியாது போய்விடும். அதே வேளை இந்த நிலைமைக்குத் தாக்குப் பிடிக்க முடியாத நிறுவனங்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள இருந்த சகல வாய்ப்புக்களும் (வரி, கள்ளக் கடத்தல், ஊழல்) இல்லாமல் போவதால் கொஞ்சம் கொஞ்சமாக அழிந்து போய்விடும்.

நிதியமைச்சர் சுங்கவரியை இல்லாமல் செய்து ஆற்றிய தமது உரையின் போது 'உள்நாட்டில் புடவைகளதும் ஏனைய பொருட்களினதும் பாரியளவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டியதன் அவசியம் காணப்படுகிறது...' என்றும்,

'இந்தக் கைத்தொழிலில் போட்டித் தன்மையினை அதிகரிக்கச் செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது. எனவே நெசவு நூல், துணி வகைகள் மற்றும் மூலதனப் பொருட்களின் இறக்குமதிக்கான தீர்வைக்கு உடனடியாக விலக்கு அளிக்கப் படுகிறது' என்றும் கூறினார். அதாவது சந்தையில் போட்டித் தன்மையை உருவாக்குவது, உற்பத்தியைப் பெருக்க உதவும் என்றும், போட்டித் தன்மையை உருவாக்க வரிவிலக்கு அவசியம் என்றும் அவர் தெரிவிக்கிறார். இதே விடயத்தைத் தான் அவர் இரத்தினக்கல், தங்க ஆபரணம் போன்ற தொழில்களுக்கும் குறிப்பிடுகிறார்.

ஆனால், இலங்கையின் யதார்த்த நிலை அமைச்சரின் இந்த 'தத்துவார்த்தக் கருத்துகளுக்கு' முற்றாகப் பொருந்துவதாக இல்லை. இறக்குமதித் தீர்வை இல்லாமல் ஆக்கப்பட்டதும், தொழிற்துறை தொழில் நுட்பத்தில் முன்னேறியதும், பிரமாண்டமான அளவில் உற்பத்தி செய்வதால் உற்பத்தி செலவீனம் குறைய உடையவையுமான சர்வதேச தொழிற்சாலைகளிலிருந்து பொருட்கள் தாராளமாக இங்கு வரத் தொடங்கும். அவற்றின் உற்பத்திச் செலவு குறைவாகையால் மலிவானதாயும், தரத்தில் உயர்ந்ததாகவும் அவை இருக்கும். உள்நாட்டு உற்பத்தியில் அத்தகைய தரத்தை எட்டும் நவீன தொழிநுட்ப வசதியோ, பெருமளவிலான உற்பத்தியோ இல்லாததால், அவற்றுடன் போட்டி போட முடியாமல் போகும். இதனால் தான் புடவைக் கைத்தொழில் நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் 30,000 பேருக்குமேல் வேலையிழக்கும் நிலை ஏற்படும் என்கின்றனர்.

**ஒரு நாட்டின் தன்நிறைவு என்பது அந்த நாட்டில் போதிய நுகர்வுப் பொருட்கள் மலிவான விலையில் கிடைக்கின்றன என்பதில் தங்கியிருப்பதில்லை. அந்த நாட்டின் சொந்த உற்பத்தி, வேலை வாய்ப்பு நுகர்வோரின் கொள்வனவு ஆற்றல் போன்றவற்றிலே தான் அது தங்கியிருக்கின்றது.**

இலங்கையின் ஆபரண உற்பத்தி இன்னமும் பாரிய அளவில் கையால் செய்யப்படுவதாகவே இருக்கிறது. இயந்திர மூலமான உற்பத்தி இல்லையென்றே சொல்லலாம். இயந்திரங்கள் மூலமான உற்பத்தியின் போது செலவு குறைவு. இறக்குமதித் தீர்வை இல்லாமல் போவதால், மலிவான விலையில் ஆபரணங்கள் இங்கு வந்து குவியும். அமைச்சர் கூறுவது போல கள்ளக் கடத்தல் இல்லாமல் போகுமாயினும், உள்நாட்டு கைவேலைத் தயாரிப்புகளை விட மலிவான விலையில் நகைகள் கிடைப்பதால் உள்நாட்டு தொழில் பாதிப்படையும். ஏனென்றால் அவர்களால் போட்டி போட முடியாமல் போகும். தவிரவும் இத்தொழில் இயந்திரமயமாக்கப்படின், அதற்கான சந்தைவாய்ப்பு ஒரு பிரச்சினையாக அமையக் கூடும். (இலங்கையில் ஆபரண உற்பத்தித் துறையில் - இரத்தினக்கல் இணைக்கப்பட்ட ஆபரணங்கள் உட்பட -கிட்டத்தட்ட 150 நிறுவனங்களே ஈடுபடுகின்றன. ஆனால் நாடு பூராகவும் உள்ள பல்லாயிரக்கணக்கான ஆபரண உற்பத்தியாளர்கள் உள்நாட்டுச் சந்தையையே நம்பியுள்ளனர்.) அத்துடன்இத்தொழில் இயந்திர மயமாக்கப்படும் பட்சத்தில், உதாரணமாக கொழும்பு செட்டியார் தெருவில் ஒரு நகைத் தொழிற்சாலை இருந்தாலே போதும் என்ற நிலை உருவாவதுடன் சுய தொழிலிலீடுபடும் பல்லாயிரக் கணக்கானோர் வேலை இழக்கும் நிலையும் ஏற்படலாம். இவை தான் அமைச்சர் மீது இந்த துறைசாநதவர்கள் தாக்குதல் தொடுத்ததற்கான காரணமாகும்.

ஒரு நாட்டின் தன்நிறைவு என்பது அந்த நாட்டில் போதிய நுகர்வுப் பொருட்கள் மலிவான விலையில் கிடைக்கின்றன என்பதில் தங்கியிருப்பதில்லை. அந்த நாட்டின் சொந்த உற்பத்தி, வேலை வாய்ப்பு நுகர்வோரின் கொள்வனவு ஆற்றல் போன்றவற்றிலே தான் அது தங்கியிருக்கின்றது. அமைச்சர் உள்நாட்டு தொழிலகங்கள் தமது தொழிநுட்பத்தை விருத்தி செய்யும் இயந்திரங்களையோ, பிற சாதனங்களையோ இறக்குமதி செய்யவும் தமது உற்பத்திகளை ஏற்றுமதி செய்யவும் ஊக்குவிப்பு திட்டங்களை வழங்கியிருப்பது உண்மைதான். ஆனால் இவை உடனடியான விளைவுகளைத் தரப்போவதில்லை. பிறநாட்டு பல்தேசிய கொம்பனிகளின் சந்தை ஆதிக்கத்தின் முன்னால் உள்ளூர் உற்பத்தியாளர்கள் நசுங்குண்டு போவார்கள். திறந்த பொருளாதாரக் கொள்கையை ஏற்றுக் கொண்ட பல ஆசிய நாடுகள் முதலில் தமது உள்நாட்டு தொழிற்துறையை தொழில் நுட்ப ரீதியிலும் தரச் சிறப்பிலும் பிற முன்னேறிய நாடுகளுடன் ஓரளவுக்காவது போட்டி போடக் கூடிய நிலைக்கு வளர்த்த பின்னரே இவ்வகையான பூரண திறந்து விடலை செய்துள்ளன. உதாரணமாக தென் கொரியாவைக் குறிப்பிடலாம். ஆனால் அமைச்சர் ஜி.எல். பீரிஸ் அவர்கள் செய்திருப்பது உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பது என்ற பெயரில் அவர்கள் அழிந்து போக வழி சமைத்தது தான்.

இந்த அரசாங்கம், ஐ.தே.கவின் தாராளவாத பொருளாதாரக் கொள்கையைத் தொடர்ந்து பேணி வளர்ப்பதில் கடந்த மூன்று வருடங்களாக அக்கறையுடன் செயற்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் உருவாக்கப்பட்டவையாகவே அதன் முன்னைய வரவு செலவுத்திட்டங்கள் அமைந்திருந்தன. இவ்வரவு செலவுத் திட்டம் இன்னும் ஒருபடி மேலே சென்று இலங்கையின் எல்லா உள்ளூர் தொழிற்துறையையும் சர்வதேச நாணய நிதியத்தினதும் உலகவங்கியினதும் நோக்கதத்திற்கேற்ப இல்லாதொழிக்க அடித்தளமிட்டுள்ளது.

அமைச்சர் அவர்கள் கவர்ச்சிகரமாக அறிவித்திருக்கும் வரிச் சலுகைகள், சம்பள உயர்வுகள், என்பன அரசாங்கத்தின் வருமானத்தைக் குறைக்கும் அதேவேளை யுத்தம் பாரியளவு செலவுக்கு காரணமாகவும் அமைந்திருக்கிறது. இந்த நிலையில் எப்படி ஒரு வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட முடியும் என்ற கேள்வி எழுகிறது. இதற்குத்தான் உலக வங்கியும், சர்வதேச நாணய நிதியமும் ஆலோசனைகளைக் கூற இருக்கின்றன.

நாட்டிற்குத் தேவையான சகல மூலதன முதலீடுகளும் வெட்டிக் குறைக்கப்பட்டோ, அல்லது முற்றாகவே இல்லாமலே ஒழிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றிற்கு ஒதுக்கப்படும் நிதிகள் முழுக்க முழுக்க யுத்தத்திற்கும் பிற செலவுகட்கும் பயன்படுத்தப் படுகின்றன. உதாரணமாக நெடுஞ்சாலைகள், வீதிகள் போன்றவற்றிற்கான ஒதுக்கீடுகள் பற்றியோ, அவற்றுக்கான திட்டங்கள் பற்றியோ நிதியமைச்சர் புதிதாக எதையும் அறிவிக்கவில்லை. தனியார் வைத்தியசாலைகள், தனியார் வீடமைப்புத் திட்டங்கள் என்று மூலதன முதலீடுகள் அனைத்தும் தனியார் பொறுப்பில், கவர்ச்சிகரமான வரி விலக்குகளுடன் திட்டங்களாக அறிமுகப் படுத்தப் படுகின்றன. நெடுஞ்சாலை போன்றவை விற்பனை செய்யப்பட முடியாதவை என்பதனால் போலும் அது பற்றிப் பேசப்படவில்லை!

அமைச்சர் அறிமுகப்படுத்தியுள்ள மக்கள் வரவு செலவுத் திட்டத்தின் முக்கியமானவையாக விவசாய உற்பத்தி, நெல் உற்பத்தி என்பவற்றுக்கான சலுகைகள் பேசப்படுகின்றன. மேலோட்டமாகப் பார்க்கும் போது கவர்ச்சிகரமாகத் தோன்றினாலும், அவை கூட இந்நாட்டு விவசாயிகளுக்காகத் தெரிவிக்கப்பட்ட பிரேரணைகள் அல்ல, மாறாக, கவர்ச்சிகரமான வரிச் சலுகைகளுடன் விவசாயத்தையும் தனியார் கம்பனிகள் மூலம் புதிய விவசாய உற்பத்திப் பண்ணைகளை அமைப்பதற்கான திட்டமாகவே (இப்பிரேரணைகளும்) அமைந்துள்ளன.

மொத்தத்தில் இந்த வரவு செலவுத் திட்டம், மேற்பார்வைக்கு அழகாயும், மக்களுக்கானதாயும் தெரிந்த போதும், அவை அனைத்தும் பிற நாட்டு முதலீட்டார்களையும், வியாபார நிறுவனங்களையும் மனதில் கொண்டு தயாரிக்கப்பட்ட ஒரு திட்டம் என்பதில் ஐயமில்லை.


200 ஆடைத்தொழிற்சாலைகளை நிறுவும் பிரேமதாசவின் திட்டத்தை பரிகசித்தவர்கள் அடுத்த ஆண்டில் 50 ஆடைத் தொழிற்சாலை அமைப்பதைப் பற்றியும் அறிவித்துள்ளார்கள்.

ஆக, இந்த வரவு செலவுத் திட்டம் உண்மையில் இலங்கையின் சுயச் சார்புத் தன்மையை தொழில்துறை மூலதனத்தை கைவிட்டு, வணிக மூலத்தையும், சார்புத்தன்மையையும் நோக்கி நகர்த்துகின்ற அரசாங்கத்தின் போக்குக்கு ஒரு உறுதியான அடித்தளத்தை அமைத்துக்கொடுக்கப் போவது மட்டும் உண்மை!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# எப்பாவல பொஸ்பேற் சுரங்கம் : கனியச் சுரண்டல்!

பொ ஐ.ஐ.முவுக்கும் ஐ.தே.கவுக்கும் இடையில் நீலமும் பச்சையும் என்பதைத் தவிர வேறு எந்த வித்தியாசமும் இல்லை என்று 94 ஒகஸ்ட்டில் பொ.ஜ.ஐ.மு. அரசாங்கம் பதவிக்கு வந்த போது சரிநிகர் குறிப்பிட்டிருந்தது.

பொ.ஜ.ஐ.மு.பதவியேற்று இந்த மூன்று வருடங்களில் அது கையாண்ட விடயங்களில் எவ்வளவு தூரம் ஐ.தே.கவின் வழி முறையைப் பின்பற்றி வருகிறது. அல்லது அதனிலும் ஒரு படி மேலாகச் செயற்படுகிறது என்பதைக் காட்ட நிறைய உதாரணங்கள் தேவையில்லை. இனப் பிரச்சினையை அது கையாளும் முறையும், பொருளாதாரத்தை அது திட்டமிடும்(?) முறையும் தெளிவாக அதன் குணாம்சத்தை வெளிப்படுத்துகிறது. அதனுடைய மனித முகத்துடனான திறந்த பொருளாதாரத்தில் மனித முகமுமில்லை, சிங்க முகமுமில்லை, அமெரிக்கக் கழுகின் தலை தான் இருக்கிறது போலும்.

ஐ.தே.க. நாட்டை விற்பதாகக் கூறி ஆட்சியைப் பிடித்த பொ.ஜ.ஐ.மு. கடைசியாக விற்க முனைவது எப்பாவல பொஸ்பேற் சுரங்கத்தை.

நகரங்களிலிருந்து அந்நியப்பட்ட கிராமப்பகுதியொன்றானாலும் பெரும் பொஸ்பேற் படிவுகள் காரணமாக அது நாட்டினுள் மிகச் செழுமையான பண்ணை நிலங்களுள் ஒன்றாகத் திகழ்கிறது.

1971இல் பதிவு செய்யப்பட்ட மதிப்பீடொன்றிற்கிணங்க அப்பகுதியில் 36-37% கனிப்பொருட்கள் கொண்ட ஏறக்குறைய 25 மில்லியன் மெற்றிக் தொன் பொஸ்பேற் மண் இருப்பதாகக் கணிப்பிடப்பட்டது. இது உலகிலுள்ள அதிகூடிய தரமான ஆக்க அமைவினுள் ஒன்றாகும்.

பொஸ்பேற் தவிர, அப்பகுதியில் ஆறு பாரிய குளங்களும், ஜயகங்க ஆறும் உள்ளன. அவை குத்தகைக்கு விடப்படவுள்ள நூறு ஏக்கர்களுக்கும் அதிகமான நெற்பயிர்ச் செய்கைக் காணிகளுக்கு தேவையான தண்ணீரை வழங்கக் கூடியன.

இப்பகுதியிலுள்ள 56 சதுர கிலோ மீற்றர் காணியை பொஸ்பேற் சுரங்கத் தொழிலுக்காக அமெரிக்க நிறுவனமொன்றான ப்ரீ போர்ட் மக்மொறானுக்கு (Free Port McMoran) குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கான ஒப்பந்தமொன்றில் இலங்கை அரசாங்கம் கைச்சாத்திடவுள்ளது.

அந்நிறுவனம் 30 வருடகால ஒப்பந்தத்தின் முதல் 12 வருடங்களினுள் மூன்றரை மில்லியன் மெற்றிக்தொன் பொஸ்பேற்றை அகழ்ந்தெடுக்கத் திட்டமிட்டுள்ளது. அவ்விற்பனை விலையின் ஐந்தரை வீதத்திற்குச் சமனான தொகையை இலங்கை அரசாங்கத்துக்கு அது வழங்கும்.

பரம்பரை பரம்பரையாக ஒவ்வொரு செங்கற்களாகச் சேர்த்து தமது வீடுகளைக் கட்டிய எப்பாவலவிலுள்ள பதினொராயிரத்துக்கும் அதிகமான குடும்பங்கள் இதனால் தமது இருப்பிடங்களை இழக்கவுள்ளன.

''இத்திட்டம் 200 வருடங்களுக்கு மேல் நாம் வாழ்ந்து வரும் நிலத்தை அழிப்பதுடன் 40ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்களது பிரதான உயிர்நாடியான நெற்பயிர்ச் செய்கையையும் இல்லாதொழிக்கும்'' எனக் கூறுகிறார் வண. மஹமன் கடவல பியரத்தன தேரர் - இவர் கல்கந்த பிரிவொன்றின் பிரதம மதகுரு.

ஆனால் அரசியல்வாதிகளோ 36 சதுர கிலோ மீற்றர் நிலம் மட்டுமே விற்கப்படுவதாகவும், அருகேயுள்ள இடங்களிலேயே மக்கள் மீளக் குடியமர்த்தப்படுவர் எனவும் கூறி அப்பகுதி மக்களை இருளிலேயே வைத்துள்ளனர்.

இப் பொஸ்பேற் வளம் உள்ளூர் பாவனைக்கு ஆயிரத்து இருநூறு வருடங்களுக்கும் கூடுதலாக போதுமானதென மண்ணியல் ஆராய்ச்சிகள் பரிந்துரைக்கின்றன.

மதிப்பீட்டு அறிக்கைகளின்படி ஏற்கெனவே ஒவ்வொரு வருடமும் நாற்பதாயிரம் மெற்றிக்தொன் பொஸ்பேற் உள்ளூர் நிறுவனமொன்றினால் அகழ்ந்தெடுக்கப்பட்டிருக்கையில், உரிய அமெரிக்க நிறுவனம் வருடமொன்றுக்கு 2 லட்சத்து ஐம்பதாயிரம் மெ. தொ. அகழ்ந்தெடுக்கத் திட்டமிட்டுள்ளது.

இது வரை காலமும் செய்த அதே விதத்தில், உள்ளூர் நிறுவனமான வரையறுக்கப்பட்ட லங்கா பொஸ்பேற் நிறுவனத்தையே தொடர அனுமதிக்கப்பட வேண்டும் என்றே கிராமத்தவர்கள் ஆலோசனை தெரிவிக்கின்றனர்.

ஆனால், உடன்பாட்டிற்கிணங்க வரையறுக்கப்பட்ட லங்கா பொஸ்பேற் நிறுவனம் குத்தகைக்கு விடப்பட்ட நிலத்துக்குப் புறம்பான பகுதியொன்றில் மீளத்தளம் அமைத்துக் கொண்டு, மக்மொறன் நிறுவனத்திடமிருந்தே உள்ளூர் உற்பத்திக்கான கொள்வனவுகளைச் செய்யு வேண்டும் எனத் தெரிகிறது.

''அது நகையாடத்தக்கதாகும். பின்னர் நாம் அவர்களிடமிருந்து அதிக விலை கொடுத்து அதனை வாங்க வேண்டியிருக்கும். அது எமதாக இருக்கையில் நாம் ஏன் அதனை அவர்களிடமிருந்து வாங்க வேண்டும்'' என்று கேள்வி எழுப்புகிறார் அவ்வுள்ளூர் நிறுவனத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர்.

அதனை 30 வருடங்களில் அகழ்ந்து எடுக்க அந்நிய நாடொன்றுக்கு வழங்காது, எமது தொழிநுட்பத்தை விருத்தி செய்து உபரியை ஏற்றுமதி செய்ய ஏன் முடியாது'' என்கிறார் வண பியரத்தன தேரர்.

எமது நலிவுற்ற பொருளாதாரத்துக்கு உதவப் பெருந்தொகை அந்நியச் செலவாணியை ஈட்டித் தரக்கூடிய பரிமாணமான திட்டமொன்றைக் கையாளக்கூடிய தொழிநுட்பமோ அன்றி நிதியோ இலங்கைக்கு இல்லை, என அரசாங்க அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

ஆனால் ஒப்பந்தத்தில்மக்களை ஏமாற்றும் விதத்தில் பல கவர்ச்சிகரமான சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

எப்பாவலவில் சுரங்கத் தொழிற்சாலையில் வசதிகளை ஏற்படுத்துவது, திருகோணமலையில் பதனிடும் (Processing) தொழிற்சாலையொன்றை (Plant) நிறுவுவது, வீதிகள், புகையிரதம், குழாய் நீர் வழங்கல், ஆழ்கடல் செயற்கைத் துறைமுகம், ஏற்றி இறக்கும் வசதிகளும், புகையிர எஞ்சின்களும், பெட்டிகளும், நகர்புற (Town Ship) அபிவிருத்தி ஆகிய திட்டங்களை உள்ளடக்கியுள்ளதாக அது தெரிவிக்கிறது.

ஷெல் காஸ் விவகாரம் போலல்லாது இத்திட்டங்கள் அனைத்தும் நடைமுறைப்படுத்தப் படுமானால் உண்மையிலேயே அப்பகுதி விரைவிலேயே அபிவிருத்தியடையும் என்கிறது ஒரு ஆங்கிலப் பத்திரிகை.

''நாட்டின் அபிவிருத்திக்காக நாங்கள் இடம்பெயர்ந்து செல்வதானால் நாம் பொருட்படுத்த மாட்டோம். ஆனால் வளங்களின் பாரியளவிலான இயற்கை வளச் சுரண்டலையும் (Exploitation), நாட்டின் அழிவையும் ஒட்டு மொத்தமாகவே நாம் எதிர்க்கிறோம். எவ்விலை கொடுத்தாலும் இவ்விடத்தை விட்டு நாங்கள் நகர மாட்டோம்'' எனத் தெரிவிக்கிறார் திவுல் - வவ பெண்கள் சங்கத்தின் செயலாளர்.

Free Post McMorans நிறுவனம் உறுதியளிக்கப்பட்டுள்ள 56 சதுர மீற்றர் நிலத்தை சூழவுள்ள மேலும் 10 ச.கி.மீ. நிலத்தையும் கேட்டுள்ளது. அது அரசாங்கத்தால் ஏற்கெனவே அங்கீகரிக்கப்பட்டும் விட்டது. இப்பகுதி பாதுகாப்பு வலயமொன்றாக ஆக்கப்பட்டுள்ளது. ஆனால் தேவையேற்பட்டால் அவர்கள் அப்பகுதியையும் எப்போதும் அகழ முடியும் என வரையறுக்கப்பட்ட லங்கா பொஸ்பேற் நிறுவனத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் மேலும் தெரிவித்தார்.

சூழலியல் பிரச்சினைகளும் கூடவே வெளிக்கிளம்பும் நிலையிலுள்ளன.

அப்பகுதியில் பிரதான பொஸ்பேற் ஊடகமான ஆறு மலைகளையும் வெடிக்க வைக்க அந்நிறுவனம் என்ன விதமான மற்றும் எவ்வளவு தொகை வெடி மருந்தைப் பாவிக்கப்போகிறது என்பது தொடர்பாகவே அக் கிராமத்தவர்களின் நலன்புரிச் சங்கம் கரிசனையாயுள்ளது.

''அப்பகுதியைச் சுற்றியுள்ள ஏனைய கிராமங்களுக்கு விவசாயத்துக்காக ஆற்று நீரை அனுப்புவதற்காக அவர்கள் குழாய்களைப் பாவிக்கப் போவதாகக் கூறியுள்ளார்கள்'' என்று திவுல்வவ கிராம சேவகரான ஆர் தர்மசேன தெரிவிக்கிறார்.

சூழவுள்ள கிராமங்கள் பலவறுக்கும் நீர் ஊடகமான (Source) ஜயகங்கவைக் குழாய்நீர் மூலம் திசைதிருப்புவதாகவும் அந்நிறுவனம் உறுதியளித் துள்ளது.

''ஆனால் ஆற்றிலுள்ள மீன்களும், பாசியும் சூரிய ஒளியில்லாது உயிர் வாழ முடியாது. அவை இறக்கும் போது நீர் மாசடையும்'' என அக்கிராமத்து ஆசிரியரொருவர் கூறுகிறார்.

அவர்கள் தாம் கொல்லப்பட்டாலும் தாம் எப்பாவலவை விட்டுச் செல்லப் போவதில்லையென கிராமத்தவர்கள் அநேகர் விடாப்பிடியாகச் சொல்கின்றனர்.

அரசாங்கம் எமக்கு காணிகள்/ நிலங்கள் வழங்கினாலும் நாங்கள் இவ்விடத்தைவிட்டு அகல மாட்டோம்; நாம் அனைவரும் அதனை எதிர்க்கிறோம். நாம் இங்கு பரம்பரை பரம்பரையாக வாழ்ந்துள்ளதுடன் எமக்குள் செல்வங்கள் எதனையும் ஒன்று திரட்டி வைத்துள்ளோம்'' என்று கூறினார் பெண்கள் அமைப்பொன்றின் உறுப்பினர் ஒருவர்.

ஆனால், இத்தகைய எதிர்ப்புக் குரல் எதற்கும் அது செவி சாய்க்கப் போவதில்லை. மனித முகம் வாக்குக் கேட்க மட்டும் தானே. பிறகு ஓநாய்களது சுயரூபம் தானே தெரிந்து விடும்?

***சி.செ.ராஜா***

***தகவல் : மிட்வீக் மிரர்***

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**இலங்கையை முழு மக்களதும் - அனைத்து இனங்களதும் நாடு என்று கூறுகிறது அரசாங்கம். 'ஒரே நாடு ஒரே மக்கள்' என்பது அதன் அண்மைக்கால முழக்கம். ஆனால் நடைமுறையில், இலங்கை சிங்கள மக்களுக்கு மட்டுமே சொந்தமானது என்ற முன்னைய அரசுகளின் கோட்பாடுகளிலிருந்து அது விலகி விட்டதாகச் சொல்ல முடியவில்லை. பல சிங்களப் புத்திஜீவிகள் மத்தியில் மிகவும் தீவிரமாக வேரூன்றி இருக்கும் இந்த அபிப்பிராயம் பல்வேறு ஊடகங்களிலும் வெளிப்பட்டு வருகிறது. திவயின பத்திரிகையின் 02.11.1997 அன்றைய இதழில் வெளியான இக்கட்டுரை அதற்கு ஒரு நல்ல வகைமாதிரி. தவறான தகவல்களை உள்ளடக்கியுள்ள போதும் இக்கட்டுரையின் நோக்கம் தெளிவாகவே உள்ளது. இதைத் தமிழில் தருகிறார் சி.செ. ராஜா.**

# ''சிங்களவர் மட்டுமே இலங்கையர், மற்றெல்லோரும் அந்நியர்!''

சூரிய குணசேகர

'வளர்ச்சியடைந்த நாடுகள்', 'இனப் பிரச்சினை' போன்ற தவறான பதப்பிரயோகங்கள் கண்ணுக்கும், காதுக்கும் மிகுந்த பரிச்சயமாகி விட்டிருப்பதால், அவற்றுடன் உடன்பாடில்லாத போதும் அச்சொற்கள் இங்கு பாவிக்கப்படுகின்றன. பொருளாதார ரீதியாக வளர்ச்சியடைந்த நாடுகளை வளர்ச்சியடைந்த நாடுகளெனவும், நாடொன்றினுள் பல்வேறு இனங்களைச் சேர்ந்த மக்கள் சமாதானமாக வாழ்வது இனப்பிரச்சினை இன்மையைக் குறிக்கிறது எனவும் கருதப்படுகின்றது. இலங்கையின் சிறுபான்மையினக் குழுக்கள் தமது தேசிய உரிமைகளைக் கோரி நிற்பதனை இந்த நிலைமையுடன் ஒப்பிட்டுப் பார்ப்பது பொருத்தமானதாகும். வளர்ச்சியடைந்த நாடுகளில் இவ்வாறான கோரிக்கைகள் இல்லாதிருப்பதற்கு முக்கிய காரணம் ஒன்று உண்டு.

அந்நாடுகளின் வரலாற்றைக் கவனித்தால், அங்கு வாழும் முழு மக்களையும் இரு பிரிவுகளின் கீழ் உள்ளடக்கலாம். ஒன்று தேசத்தவர்கள். மற்றையது பிரஜைகள். தேசத்தவர்கள் அனைவரும் பிரஜைகள் ஆவர். எனினும், பிரஜைகள் எல்லோரும் தேசத்தவர்களாக மாட்டார்கள். பிரஜைகள் அனைவரிலும் தேசிய உரித்துடமையுள்ள பிரஜைகள், தேசிய உரித்துடமையற்ற பிரஜைகள் என இரு பிரிவினர் உள்ளனர். இதனைச் சிக்கலாக்கிப் பிழையாக்கியுள்ள உலகிலுள்ள ஒரே ஒரு இனம் சிங்கள இனமே தான். சிங்கள ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கையின் 4ஆவது பரிந்துரையினூடாக அது தெளிவாகிறது. அது இவ்வாறு கூறுகிறது. ''4...முழு இலங்கையுமே அங்குள்ள எல்லாப் பிரஜைகளதும் தாயகமாவதால்...'' சிங்களவர்களுக்குப் பாதகமான அரசின் அரசியல் தீர்வுத் திட்டத்துக்கு எதிரான சிங்கள ஆணைக் குழுவின் இடைக்கால அறிக்கை இவ்வாறு குறிப்பிடுவது இன்னொரு உலக சாதனையை நிலை நாட்டவேயன்றி வேறெதற்குமல்ல!

தேசத்தவர் எனப்படுபவர் நாட்டின் உரிமையாளராவர். காணியொன்றுக்கு அல்லது சொத்தொன்றுக்கு நபரொருவர் உரிமையாளராவது போல் நாடொன்றுக்கு உரிமையாளராவது அந்நாட்டுத் தேசத்தவரேயாவர். இத்தேசத்தவர். அம் மண்ணில் உற்பத்தியை ஆரம்பித்த மக்களின் வாரிசுகளாவர். அம்மண்ணின் இயல்புக்கேற்ப அவர்களது உற்பத்தி நடைபெறுவதால் மேற்கூறிய தேசத்தவரின் வேர்கள் அந்நாட்டு மண்ணில் ஆழமாகப் பதிந்துள்ளதாக ஏற்றுக் கொள்ளப்படும். இலண்டனிலோ அல்லது நியூயோர்க்கிலோ காணப்படும் றஸ்ரபாரியன்கள் (ஆபிரிக்க நீக்ரோ மக்கள் பிரிவினர்) எவரிடமும் இனத்தை விசாரிப்பது 'உங்கள் வேர்கள் எங்குள்ளது?' (Where are your Roots?) என்றேயாகும். இது மிகவும் அர்த்தமுள்ள கேள்வியாகும். இதேபோல் இன்று பிரித்தானியாவில் பிரஜாவுரிமைக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்ப் படிவம் ''பிரித்தானியாவுக்கு இயற்கை மயப்படுத்துவதற்கான விண்ணப்பப்படிவம்'' (Application for Naturalisation to Great Britain) என்றே அறிமுகப்படுத்தப்படுகிறது. பிரித்தானிய பிரஜைகள் தான் அங்கு உள்ளார்களே ஒழிய பிரித்தானிய தேசத்தவரெவரும் அங்கு கிடையாது. அவர்களது இனம் ஆங்கிலேயர் (English) ஆகும்.

இனமொன்றுக்கு இலக்கமோ அன்றி நூற்று வீதமோ கிடையாது. தேசிய உரிமை என்பது நூற்றுக்கு நூறு வீதமான உரிமையாகும். அது முழு உரிமையுள்ள (காணி) உறுதியொன்றுக்குச் சமமானதாகும். அதில் கூட்டு உரிமையாளர்கள் இல்லை. உதாரணமாக ஜேர்மனியில் உள்ள 45 இலட்சம் துருக்கிய முஸ்லிம்களைக் கூறலாம். இலங்கையிலுள்ள 13 இலட்சம் முஸ்லிம்களுடன் இதனை ஒப்பிட்டுப் பார்ப்பது பொருத்தமானதாகும். ஜேர்மனியில் வாழும் பிரஜைகளான அம் முஸ்லிம்கள் 45 இலட்சத்தினரும் அந்நாட்டுத் தேசிய உரிமை கோரவில்லை. அவர்கள் சமய தின விடுமுறையோ, தமது மொழியை அரச கரும மொழியாக்கவோ, ஆண்கள் தொப்பியும், பெண்கள் பர்தா அணியும் உரிமையோ கோரவில்லை. கோரினாலும் அவை கிடைக்கப் போவதில்லை. அதற்குக் காரணம் அவர்கள் வெளிநாட்டுப் பிரஜைகள் என்பதே. யூத தேசத்தவரான கார்ல் மார்க்சின் தந்தை ஜேர்மன் தேசத்தவருள் வருவதற்காக யூத சமயத்தைக் கைவிட்டு விட்டுக் கிறிஸ்தவரானது அப்போது ஏழு வயதான கார்ல் மார்க்சின் மனதில் ஆழப் பதிந்தது. இச்செயற்பாட்டினை வெறுத்த அவர். பிற்காலத்தில் கல்விமானாகி இனம் கற்பனையானதெனவும், வர்க்கமே உண்மையானதெனவும் கூறப்படும் தத்துவக் கண்ணோட்டத்தினை (Vision) உருவாக்கினார் என அவரின் மகளான எலநோர் எழுதியுள்ளார்.

பிரான்ஸ் நாட்டில் முஸ்லிம் பெண்கள் பர்தாவோ, ஆண்கள் தொப்பியோ அணிந்து கொண்டு பகிரங்க இடமொன்றில் இருப்பது பிரெஞ்சு தேசத்தவர்களுக்கு விடப்படும் சவாலொன்றாகவே கருதப்படும். அதனால் முஸ்லிம்கள் அவ்வாறு இல்லாதிருக்க முயல்கின்றனர். இவ்வாறானதொன்றை மனித உரிமை மீறலாக எவரும் இன்றுவரை கூறியதில்லை.

உலகம் முழுவதையும் ஒரே உலக சந்தையாக மாற்ற முயற்சி எடுக்கும் மற்றும் பல் தேசிய நிறுவனங்களின் தலைமைப்பீடம் எனக் கருதப்படும் ஐக்கிய அமெரிக்காவில் கூட தேசியம் முக்கியமாகியுள்ளது. ஆனாலும் உலகிலுள்ள பல்வேறு நாடுகளையும் சேர்ந்த மக்களால் அமைக்கப்பட்டுள்ள பல் தேசிய நாடான அமெரிக்காவுக்கு தேசியத்துவம் இல்லை. ஆனாலும் இன்று அவர்களது தேசிய முயற்சிச் சுலோகமாகவுள்ளதோ ''அமெரிக்கராகுங்கள் அமெரிக்கப் பொருட்களை வாங்குங்கள் - "Be American, Buy American" என்பதாகும். தேசியமொன்று இல்லாத இடத்தில் தேசியமொன்றைக் கட்டியெழுப்புவது அவர்களது குறிக்கோள் ஆகியுள்ளது.

சோவியத் நாடு நிலவிய 74 வருடங்கள் பூராவும் அச்சமவுடமை அரசில் கூட மிக உயர்ந்த தேசத்தவர்களாக இருந்தவர்கள் வெள்ளை இன ரஷ்யர்களேயாவர் (White Russians). இரு பரம்பரைகள் நிலவிய மார்ஸல் ரிற்றோ (Marshal Tito) வின் யூகோஸ்லோவியாவில் சமதர்ம ஆட்சியின் கீழும் முஸ்லிம்களை விடக் கிறிஸ்தவர்கள் நாட்டின் உரித்துடமையானவர்களாகவிருந்தனர். பொஸ்னியாவின் முஸ்லிம்களுக்கு பொஸ்னியா மீதுள்ள உரிமைகளை இல்லாது செய்வதே சேர்பியக் கிறிஸ்தவர்களின் நோக்கமாகும். ஐரோப்பா முஸ்லிம்களின் தேசமன்று. அதனால் முஸ்லிம்களால் பொஸ்னியாவின் தேசத்தவராக முடியாது.

சமவுடமை நாடான சீனாவும் இதுவரை இனப்பிரச்சினை இல்லாது இருந்து வந்ததுடன் 1996முதல் சீன இஸ்லாம் பக்தர்கள் தனி நாடொன்றைக் கோருகின்றனர். அதற்கு சீனா மிகவும் முரட்டுத்தனமாகவே பதிலடி கொடுத்தது. அதாவது தனிநாடொன்றைக் கோரியவர்களுக்கு மரண தண்டனை கிடைக்கக் கூடியதாகச் சட்டங்கள் பிறப்பிக்கப் பட்டன. அப்போது கோரிக்கை நிறுத்தப் பட்டது. இலங்கையிலோ வேறு

8 →

*தமிழீழ விடுதலை புலிகள் இயக்கத்தின் பாரிஸ் கிளையின் பிரதிநிதி மனோகரன் வேலும் மயிலும் 'ஹிரு' எனும் சிங்கள மாற்று சஞ்சிகைக்கு அளித்த பேட்டி இங்கு பிரசுர மாகிறது. 1973-1975 காலப் பகுதியில் மொரட்டுவ பல்கலைக் கழகத்தில் கல்வி கற்ற அவர் 1983 கறுப்பு ஜூலையைத் தொடர்ந்து புலிகள் இயக்கத்துடன் தன்னை இணைத்துக் கொண்டவர்.*

-தமிழில் ரத்னா

# "தமிழ் மக்கள் இன்று திறந்தவெளி சிறைச்சாலைகளிலேயே வாழ்ந்து வருகிறார்கள்!"

புலிகளின் பிரதிநிதி வேலும்மயிலும்

*தற்போதைய யாழ் நிலைமை எத்தகையது, குறிப்பாக, புலிகளின் நிர்வாகத்தின் கீழ் யாழில் இருந்த நிலைமையையும், அரச படைகள் யாழை கைப்பற்றிய பின்னரான நிலைமையையும் நீங்கள் எவ்வாறு ஒப்பிடுவீர்கள்?*

மக்கள் முகம் கொடுக்கும் அன்றாட நிகழ்வுகள் பற்றி சுருக்கமாகக் கூறுவதாயிருந்தால், அவர்கள் திறந்தவெளி சிறைகளிலேயே வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் நித்தம் படையினரின் அடக்குமுறைகளுக்கும், கைதுகளுக்கும், விசாரணைகளுக்கும் ஆளாகிவருகிறார்கள். குறிப்பாக பெண்கள் மிகவும் மோசமான குரூரங்களுக்கு உள்ளாகி வருகிறார்கள். பாதைகளை மறித்து இராணுவத்தினர் பங்கர் அமைப்பதனால் போக்குவரத்து மோசமாகியுள்ளது. உதாரணமாக படையின் நிர்வாகத்துக்கு முந்திய காலங்களில் சைக்கிளில் சிறிது தூரம் செல்வதற்கு அரை மணி நேரம் எடுத்தது. ஆனால் தற்போது அரை மைல் செல்வதற்கே சுமார் 4-5 மணித்தியாலங்கள் தேவைப்படுகின்றன. எவ்வாறாயினும், 1995இல் இலங்கை அரச படைகளின் வருகையின் பின் யாழில் எதுவுமே வழமையான நிலைமைக்குத் திரும்பிவிடவில்லை.

*இந்நிலைமையை புலிகளின் நிர்வாகத்துடன் ஒப்பிட முடியுமா?*

எமது நிர்வாகம் இருந்த, பிரதேசத்தில் மக்களின் போக்குவரத்தை கட்டுப்படுத்தும் வகையில் நிர்வாகம் இருக்கவில்லை. மக்கள் போக்குவரத்தை மேற்கொள்ளும் சுதந்திரத்தைக் கொண்டிருந்தனர். புலிகள் மக்களுக்கு துன்பம் தரவில்லை. அரசாங்கத்தினால் பொருளாதார தடைகள் விதிக்கப்பட்ட போதும் சுதந்திரம் இருந்ததன் காரணமாக தமது இருப்பிற்காக அனைத்தையும் புரிய அவகாசமிருந்தது.

*இலங்கை இராணுவம் யாழை கைப்பற்றியதன் பின்னர் வடகிழக்கு மாகாணங்களில் பல யுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டனர். 'ஜயசிக்குறு' அண்மைகால நடவடிக்கையாகும். இந்நடவடிக்கை தொடர் பாக, உங்களது அமைப்பின் பதில் நடவடிக்கை யாது?*

இலங்கை அரசாங்கம் சிங்கள மக்களுக்கு பிழையான படமொன்றையே காட்ட முயற்சிக்கிறது. அவர்கள் பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை செயல்படுத்திவிட்டு, மக்களிடம் தாம் மிகப் பெரிய வெற்றி பெற்றதாகவும் பிரச்சினையைத் தீர்த்து விட்டதாகவும் தெரிவிக்கிறனர். ஆனால் உண்மையான நிலைமை அதுவல்ல. யாழில் இருக்கும் தமது படைகளுக்கு உணவு அனுப்புவது கூட கடினமான விடயம் என்பதை அரசாங்கம் உணர்ந்துள்ளது. உணவு வழங்கல், கடல் மார்க்கமாகவோ, வான் மார்க்கமாகவோ மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது அவர்களுக்கு பிரச்சினை தரும் விடயமாகும். கடல் மார்க்கத்தில், கடற்புலிகளினால் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதைப் போன்றே பல விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்துக்கான தரை வழிப்பாதை திறப்பதற்காக மேற்கொள்ளும் முயற்சியாக ஜயசிக்குறு நடவடிக்கை தேவைப்பட்டுள்ளது. இதன் காரணமாகவே அவர்களின் இலக்கு, படையினருக்கான வழங்கற் பாதையை திறப்பதில் குவிந்துள்ளது. மாறாக மக்களின் போக்குவரத்துக்காக அல்ல. அரசாங்கம், சிங்கள மக்களையும், புற உலகத்தையும் ஏமாற்ற முனைகிறது.

*புலிகளின் அமைப்பு மக்களின் ஆதரவை இழந்து வருவதாகவும், புதிய உறுப்பினர்கள் சேர்வதில்லையெனவும் அரசாங்கம் வெளியிட்டு வரும் அறிக்கைகளுக்கு இலங்கை ஊடகங்களில் பெரும் வரவேற்பு காணப்படுகிறது. இதன் உண்மைத் தன்மை தான் என்ன?*

தெளிவாக, இல்லை. அரசாங்கம் இவ்வாறான செயல்களை மேற்கொள்வது அவர்களது பிரச்சார நோக்கங்களுக்காகவும், தமது திருப்திக்காகவுமே. மாபெரும் சமரின் பின்னரும், எமது சகோதரர்கள் பலரது உயிர் தியாகங்களுக்குப் பின்னரும் பலர் இயக்கத்தில் இணைகின்றனர் என்பதை நாங்கள் கூறித் தெரியவேண்டியதில்லை. அரசாங்கத்தின் பிரச்சாரங்கள் யதார்த்தத்துடன் எவ்வித தொடர்புமற்றவை.

*புலிகளின் ஆயுதப் போராட்டங்களில் பெண்கள் பாரிய பங்களிப்பை நல்கிவருகின்றனர். இந் நிலைமை வடக்கில் நிலவும் மரபார்ந்த அமைப்பில் தாக்கங்களை ஏற்படுத்துகின்றனவா?*

உண்மையில் யாழ் மக்கள், மரபார்ந்த நிலை காரணமாக பெரும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் என்பது உண்மையே. குறிப்பாக பெண்களின் வளர்ச்சிக்கு பாரிய தடையாகவே வரதட்சணை முறை காணப்பட்டது. அதற்கெதிராக போராட வேண்டிய தேவை பெண்களுக்கு உள்ளது. பெண்கள் தமது கோரிக்கைகளை முன்னெடுக்க இருக்கும் நல்ல சந்தர்ப்பமாகவும் எமது விடுதலைப் போராட்டம் அமைந்துள்ளது. சிங்களப் பெண்களும் இந்த தடைகளுக்கெதிராக எழுச்சி பெற வேண்டும். அவர்களது உரிமைகளுக்காக பேராட வேண்டியது அவர்களே. அவர்களுக்காக வேறு எவரும் போராட மாட்டார்கள்.

*தமிழ் பெண்கள் இன்னும் நீண்ட தூரம் செல்ல வேண்டியுள்ளது என தெரிவிப்பதன் மூலம் நீங்கள் எதை தெளிவுபடுத்த விளைகிறீர்கள்?*

பெண்களை துன்பத்துக்குள்ளாக்கும் ஒரே விடயம் வர்தட்சனை மட்டுமல்ல. ஆண்களுக்கு சமனான உரிமைகளை பெற்றுக் கொள்ள அவர்கள் இன்னும் போராட வேண்டியுள்ளது. இது இலகுவில், விரைவில் பெற்றுக் கொள்ளக் கூடிய விடயமல்ல. இரண்டு மூன்று வருடங்களில் வெற்றிகொள்ளக்கூடிய விடயமுமல்ல. போராட்டம் முடிவின்றி தொடர்கிறது. புலிகள் இயக்கம் இப் போராட்டத்துக்கு முழுமையான ஆதரவை நல்குகிறது.

*தெற்கு தொடர்பூடகங்கள், புலிகள் மீதான தமிழ் மக்களின் நம்பிக்கை குறைகின்றது என தீர்மானமாக தெரிவிக்கின்றன. அதே போல் தமிழ் மக்கள், புலிகள் இயக்கத்துடன் இல்லை என்பதாகவும் குறிப்பிடுகின்றன. இது தொடர்பான உங்களது அபிப்பிராயம்?*

அது தவறு, தமிழ் மக்கள் இருக்கும் பிரதேசங்களுக்கு செல்ல பத்திரிகையாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. அனுமதி கிடைத்தால் அவர்களால் யதார்த்தத்தைப் புரிந்து கொள்ள முடியும். யார் யாருடன் இருக்கின்றனர் என்பதை விளங்குவர். வெளித் தொடர்பூடகங்களுக்கு அனுமதி மறுக்கப்படும் நிலைமை மிகவும் செயற்கையானது.

*இலங்கை அரசாங்கம் தன் அரசியல் யோசனைகளை செயற்படுத்த பெரும் முயற்சி எடுத்து வருகின்றது. தீர்வு யோசனைகள் தொடர்பாக உங்களது அபிப்பிராயம்?*

எல்லாவற்றுக்கும் முன் மக்களின் அன்றாட, உயிர் வாழும் பிரச்சினைகளுக்கு உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும். தமிழ் பிரதேசங்களில் வாழும் மக்கள் முகம் கொடுக்கும் அன்றாடப் பிரச்சினைகள் பற்றியும் அம்மக்களை எப்படி சாதாரண வாழ் நிலைக்கு கொண்டு வருவது என்பது பற்றியும் முதலில் பேச வேண்டும். அவர்களது அடிப்படை பிரச்சினைகள் குறித்து முதலில் பேச வேண்டும். பேச்சுவார்த்தைக்கு முன் அரசு தமது படைகளை வாபஸ் பெற வேண்டும். அது எதுவுமல்லாமல் அரசியல் பிரச்சினைகள் குறித்து எம்மால் எதுவும் கருத்து கூறக் கூட முடியாது.

*அரசின் நேரடி அடக்குமுறைகளுக்கு உள்ளாகாத, கொழும்பு மற்றும் பிற பிரதேசங்களில் வாழும் தமிழ் மக்கள் முகம் கொடுக்கும் பிரச்சினை தொடர்பாக, குறிப்பாக யுத்தம் மற்றும் தொடர்பூடக யுத்தம் என்பன அவர்களை பாதிக்கும் விதம் குறித்து உங்களது அபிப்பிராயம்?*

தெற்கில் வாழும் தமிழ் மக்கள் அரசின் கைதுகள், விசாரணைகள், வதைகள் போன்ற பலத்த அடக்குமுறைகளுக்குள்ளாகி வருகிறார்கள். அரசாங்கம் அனைத்து தமிழர்களையும் சந்தேகம் கொள்ளும் போக்கிலுள்ளது. குறிப்பாக தமிழ் இளைஞர்கள், யுவதிகள் என்போர் புலிகளுக்கு ஆதரவளிப்பதில்லை எனக் கூறும் அரசாங்கமே மறுபுறம் அதே தமிழ் இளைஞர்கள், யுவதிகள் புலிகளுடன் தொடர்பிருப்பதாக் கூறி கைதுகளை மேற்கொண்டு வருகிறது. இது வரை யாழில் மட்டும் ஆயிரக்கணக்கான தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், 600க்கும் அதிகமானோர் காணாமல் போயுள்ளனர். யார் இதற்கு பொறுப்பு சொல்ல வேண்டியவர்கள். தெளிவாக அரசாங்கமே.

*யாழ் நூலகத்தைப் புனரமைப்பு செய்யவென அரசாங்கம் தொடக்கியுள்ள 'புத்தகமும்-செங்கல்லும்' என்ற இயக்கம் தொடர்பாக நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?*

இது ஒட்டுமொத்தமாக சர்வதேச சமூகத்துக்கு அரசு செய்யும் பிரச்சார நடவடிக்கையாகும்.மக்களை ஒரு புறம் வதைத்துக்கொண்டே இன்னொரு புறம் இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்வது பெரும் ஏமாற்று நடவடிக்கை என்பதை தமிழ் மக்கள் விளங்கிக் கொள்ள கடினமிராது.

*புலிகள் இயக்கத்தின் பிரதிநிதி என்ற வகையில் சிங்கள மக்களுக்கு என்ன கூற விரும்புகிறீர்கள்?*

எமது இயக்கம் சிங்கள மக்களுக்கு எதிரான இயக்கமல்ல. எமது எதிரி சிங்கள அரசே. தமிழ் மக்கள் சுய நிர்ணய உரிமையுடனும், இறைமையுடனும், கௌரவத்துடனும் வாழும் உரிமையை அவர்களும் அங்கீகரிக்க வேண்டும். தமிழ் மக்கள் இன்னொரு தேசியம் என்ற ரீதியில் தமக்கு சமனான உரிமைகள் உண்டென சிங்கள மக்கள் உணரும் போது தான் நாம் ஒன்றாக வாழவும், நாம் முகம் கொடுக்கும் பொதுப் பிரச்சினைகளை சமாதானமாக தீர்த்துக்கொள்ளவும் முடியும். ●

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## சென்ற இதழ் தொடர்ச்சி..

பெரியார் அவர்களின் அரசியல் தவறுகள், நல்ல பங்களிப்புகள் ஆகியவற்றை மிக விரிவாகவும், ஆழமாகவும் சிவசேகரம் தெரிந்து வைத்திருப்பவராதலால் அவற்றைப் பற்றி இங்கு பேச வேண்டியதில்லை! ஆனால் ''பார்ப்பனனையும் பாம்பையும் ஒன்றாகக் கண்டால் முதலில் பார்ப்பனனை அடி'' என்று பெரியார் ஒரு போதும் கூறியதில்லை என்று நான் சுட்டிக்காட்டியதை ''பெ.முவின் கவனமற்ற சொற்களுக்கு சாட்டப் பட்ட அடி, உதை'' (இவற்றில் எதைக் குறித்தாரோ சிவசேகரம்) என்று கூறும் சிவசேகரம், அந்த கவனமற்ற சொற்களை பெ.மு.விற்குக் கொடுத்தவர் தமிழகக் கமியூனிஸ்ட் தலைவர் பி. ராமமூர்த்திதான் என்பதை வெகு கவனமாக மறைத்துவிடுகிறார். அது மட்டுமல்ல, அத்தகைய கவனமற்ற சொற்களுக்கு பி.ராமமூர்த்தி மட்டுமே பொறுப்பு அல்ல என்று குறிப்பால் யது. இலண்டனில் சிவசேகரத்தோடு நான் பேசிக்கொண்டிருந்தபோது உடனிருந்த மற்றொரு ஈழத் தமிழ் நண்பர் (அவர் தமிழகத்தில் சில காலம் வாழ்ந்திருக்கிறார்) ''தமிழ்நாட்டில் இருந்து பாருங்கள். அப்போது தெரியும் பார்ப்பனன்களின் சுபாவம் பற்றி'' என்று சிவசேகரத்திடம் கூறியதும் என் நினைவில் இருக்கிறது. மார்க்சிய அரசியல் பின்னணியுள்ள என்னைப் போன்றவர்களுக்கும் கூட, பார்ப்பனர்கள் ஒரு சமூகப்பிரிவு என்ற வகையில்

விதிவிலக்கான (தனிமனிதர்கள் இருப்பது வேறு விடயம்) அவர்கள் மீது வெறுப்பும் எரிச்சலும் ஏற்பட நிறையக் காரணங்கள் உண்டு. அண்மையில் உருவான மூன்று காரணங்களை மட்டும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

1. 'நிறப்பிரிகை, நண்பர்கள் வெளியிட்டுள்ள 'பெரியாரியம்' என்ற கட்டுரைத்தொகுப்பில் அ. மார்க்ஸ், ரவிக்குமார், பொ. வேல்சாமி, ராஜன் குரே ஆகியோர் பெரியா அல்ல) அதற்கு எதிர்வினையாக வந்த வாசகர் கடிதங்களிலொன்றையும் அதற்கு 'தினமணி' (20.08.1997) தந்த பதிலையும் கீழே தந்துள்ளேன்.

### வரலாற்றுக் குறிப்பு

*'காலச்சுவடு' பகுதி பாதுகாக்கப்பட வேண்டிய சுருக்கமான வரலாற்றுக் குறிப்பாக அமைந்திருந்தது. எனினும் ராஜாஜி, காமராஜர், பக்தவத்சலம் ஆகியோர் மறைந்த திகதி போன்ற முக்கியமான தகவல்கள் இடம்பெறவில்லையே?*

**எஸ்.எஸ்.இப்ராஹிம்,**
**சென்னை.**

*(ராஜாஜி மறைவு: 25.12.1972; காமராஜ் மறைவு 02.10.1975; பக்தவத்சலம் மறைவு: 13.02.1987; எக்ஸ்பிரஸ் அதிபர் ராம்நாத் கோயங்கா மறைவு: 05.10.1991; காஞ்சி ஸ்ரீ பரமாசார்ய சுவாமிகள் முக்தி. 08.01.1994)*

இந்த வாசகர் ஒரு முஸ்லிமாக இருந்தபோதிலும் இஸ்லாமியத்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

# எழுதாத வரலாறு: பாம்புமல்ல பார்ப்பனனுமல்ல!

## சிவசேகரத்துக்கு பதிலளிக்கிறார் எஸ்.வி.ஆர்

உணர்த்தும் பொருட்டு மேற்சொன்ன கூற்றை. ''40 வருடங்களுக்கு முன்பிருந்தே கேள்விப்பட்டிருக்கிறேன்'' என்கிறார். அவருடைய இடதுசாரி விசுவாசத்திற்கு நம் பாராட்டுதல்கள். எனினும் அதில் ஒரு வருடத்தைக் குறைத்திருக்கலாம்! ஏனெனில் சென்ற ஆண்டு ஓகஸ்ட் மாதம் அவரை நான் இலண்டனில் சந்தித்த போதும் இதே சந்தேகத்தை அவர் எழுப்பினார். அப்போதும் நான் இதே விளக்கத்தைக் கூறியிருக்கிறேன். ''அது பொய் என்றால் ஈ.வெ.ராவால் மறுக்கப் பட்டுள்ளதா எனவும் அப்படிப்பட்ட ஒரு கருத்து ஏற்படும்படி ஈ.வெ.ரா என்ன சொல்லி/ செய்து இருந்தார் என்று எஸ்.வி.ஆர். விளக்கியிருக்கலாம்'' என்று சிவசேகரம் எழுதுகிறார். நான் திராவிடர் கழகத்தின் பேச்சாளனோ, பிரதிநிதியோ அல்லன்- பெரியாரவர்கள் பற்றிக் கூறப்படும் ஒவ்வொரு விஷயத்தையும் ஆதரித்தோ, தெரிந்தோ கருத்துக் கூறுவதற்கு. இந்தியாவில்/ தமிழகத்தில் நீதியும் சமத்துவமும் நிறைந்த ஒரு சமூக அமைப்பிற்காகப் போராடும் எண்ணற்ற மனிதர்களுக்கு உறுதுணையாக நிற்க விரும்பும் ஒரு அனுதாபி என்ற வகையில் மார்க்சியச் சிந்தனை அம்பேத்கர் - பெரியார் - ஃபுலே மரபிலுள்ள ஆக்கபூர்வமான அம்சங்களைத்தன் வயப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று விரும்புகிறவன். அதற்கு முதல் நிபந்தனையாக, இந்திய 'தேசியவாதி'களாலும், 'மார்க்சிய'வாதிகளாலும் சிதைக்கப்பட்ட அவர்களது வரலாற்றை நேர்மையாகப் படித்துத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற முயற்சியில் ஈடுபடுகிறவன்.

மேற்சொன்ன கூற்று (பார்ப்பனன் - பாம்பு) ஒரு இந்திய பழமொழி என்பதை திராவிடர் கழகத்தின் பொதுச்செயலாளர் எடுத்துக்காட்டி, பெரியார் இயக்கத்தின் 'அதிகாரபூர்வமான' பிரதிநிதி என்ற வகையில் பல்லாண்டுகளுக்கு முன்பே மறுப்புத் தெரிவித்திருக்கிறார். இருந்தாலும் பெரியார் அவர்கள் அப்படிச் சொல்லியிருக்கக்கூடும் என்ற எண்ணம் பாமர மக்களுக்கு (இதில் சிவசேகரம் உள்ளடங்கவில்லை) ஏற்படுவதற்கு நியாயமான காரணங்கள் உள்ளன. பார்ப்பனர்களின் கொடுமை அத்தகை ரவர்களை உடன்பாட்டு வகையில் மதிப்பீடு செய்து, பார்ப்பனர்களை மட்டுமன்றி பிற உயர்சாதியினரின் ஆதிக்கத்தையும் எதிர்த்த பெரியாரவர்கள் தலித் விடுதலைக்கும் பெண் விடுதலைக்கும் பெரியார் இன்றியமையாதவர் என எழுதியுள்ளனர். ஆனால் அந்த நூலை 'இந்து' நாளேட்டில் திறனாய்வு செய்த ரா. அ. பத்மநாதன் (இவர் ஒன்றும் விடயம் தெரியாத நபர் அல்லர்; பாரதியியலில் வல்லுநர் எனக் கருதப்படுகிறவர்), மேற்சொன்ன நால்வரும் பெரியாரவர்கள் பார்ப்பனரல்லாத உயர்சாதி நலன்களுக்காக மட்டுமே பாடுபட்டவர் என்று எழுதியிருப்பதாக குறிப்பிட்டிருந்தார். அத்தகைய தலைகீழ்ப் புரட்டை மறுத்து அ. மார்க்ஸ், ராஜன் குரே ஆகியோர் எழுதிய கடிதம் பிரசுரிக்கப்படவில்லை.

2. ஓகஸ்ட் மாதம் இரண்டாம் கிழமை குஜராத் மாநிலம் பரோடாவில் நடந்த பெண்கள் கருத்தரங்கில் வ. கீதாவால் படிக்கப்பட்ட பெரியார் கட்டுரை, தெலுங்கானா, தேபாகா போராட்டங்களில் பங்கேற்றபடி பெண்கள் உள்ளிட்ட பல்வேறு இடதுசாரி இயக்கப் பெண்ணிலைச் சிந்தனையாளர்களாலும் பெண்கள் இயக்கத் தலைவர்களாலும் வெகுவாகப் பாராட்டப்பட்டது. அந்தக் கருத்தரங்கு நிகழ்ச்சிகளை 'இந்து' நாளேட்டிற்குத் தொகுத்து அனுப்புவதற்காக அனுப்பப்பட்டிருந்த பிரேமா நந்தகுமார் (இவரும் பாரதியியல் வல்லுநர்); 'இந்து' நாளேட்டில் எழுதியுள்ள கட்டுரையில் ஒவ்வொரு பெண்ணும் பல ஆண்களைத் திருமணம் செய்து கொண்டு வாழ வேண்டும் என்று பெரியார் கூறினார் என்று வ.கீதா பேசியதாக (அச்சடிக்கப்பட்ட கட்டுரை வாசிக்கப்பட்டிருந்தும் கூட) எழுதியுள்ளார்! அண்மையில் இந்தியத் 'தேசியவாதிகளும்', 'கம்யூனிஸ்டுகளும்' கொண்டாடி மகிழ்ந்த 'சுதந்திர தினப்பொன் விழா'வினையொட்டி கடந்த 50 ஆண்டுகால முக்கிய நிகழ்ச்சிகள் சிலவற்றைத் தொகுத்து 'காலச்சுவடு' என்ற அனுபந்தத்தை 'தினமணி' (13.08.1997) வெளியிட்டிருந்தது. (இது இலங்கைத் தமிழர் 'இடதுசாரி'களின் அபிமானத்திற்குரிய 'காலச்சுவடு' காலாண்டிதழ் தமிழர்களாலும் பிற தமிழர்களாலும் மதிக்கப்படுகின்ற காலஞ்சென்ற காயிதே மில்லத் அவர்களைப் பற்றிய குறிப்பு 'தினமணி'யில் இல்லாததைப் பற்றிக் கவலைப்படாமல், பிற தலைவர்களைப் பற்றிய குறிப்புகளைத் தான் கேட்டிருக்கிறார். 'தினமணி'யில் சம்பந்தப்பட்ட பகுதிக்குத் துணையாசிரியராக உள்ள பார்ப்பனரோ தமிழ் மக்களுக்குத் தொடர்பே இல்லாத, அவர்களால் ஒரு போதும் நினைவு கூறப்படாத ஒரு பனியா (ராம்நாத் கோயங்கா), வருணசாதி ஏற்றத்தாழ்வை கடைசிநிமிடம் வரை நியாயப் படுத்தி வந்த ஒரு பார்ப்பன சாமியார் (காஞ்சி சங்கராச்சாரியார்) ஆகியோர் பற்றிய குறிப்புகளை வலியத் திணித்திருக்கிறார். பி. ராமமூர்த்தி 'திராவிடர் இயக்கம்' பற்றி எழுதியுள்ள நூலின் சில பக்கங்களில் அடிக்கும் ஆர்.எஸ்.எஸ். வாடையை ஒரு முறையாவது சிவசேகரம் முகர்ந்து பார்ப்பது நல்லது. பெரியாரவர்கள் தமிழகத்தில் மட்டுமின்றி இந்தியாவின் வட மாநிலங்களிலுள்ள தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களால் தலைவராக ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இந்த நாட்களில் திராவிடர் கழகம், திராவிடக் கட்சிகள் ஆகியவற்றுக்கு அப்பாலும் பல்வேறு ஜனநாயக, இடதுசாரி இயக்கங்களில் பெரியாரின் கருத்துக்கள் பல ஏற்றுக் கொள்ளப்படுகின்ற இந்த நாட்களில், பெரியாரைப் பற்றிப் பார்ப்பனர்கள் தொடர்ந்து இன்னும் அதிக அவதூறுகளைச் செய்துதான் தீருவர். 1927ஆம் ஆண்டிலேயே சாதிப்பட்டத்தை வெட்டியெறிந்த பெரியாரவர்களை பார்ப்பனர்களும், பார்ப்பனக் கூலிகளும் 'ஈ.வெ.ராமசாமி நாயக்கர்' என்று தொடர்ந்து எழுதிவருவதும் சிறிதும் லஜ்ஜையின்றி பார்ப்பனியத்தையும் பெண்ணடிமைத்தனத்தையும் உயர்த்துப் பிடித்து வந்த 'தேசியவாதி' எஸ்.சத்தியமூர்த்தி அய்யரை 'எஸ்.சத்யமூர்த்தி' என்றே எப்போதும் குறிப்பிடுவதும் அறியாமல் செய்கின்ற தவறுகளல்ல. பெரியார் நடத்திய வைக்கம் போராட்டத்தைப்பற்றி தனது 'ஹரிஜன்' இதழில் எழுதி வந்த காந்தி, பெரியாரின் பெயரையே இருட்டடிப்புச் செய்தார். சுயமரியாதை இயக்கம் நடத்திய ஆலயப்பிரவேச இயக்கங்களும் கூட இருட்டடிப்புச் செய்யப் பட்டன.

அடுத்த இதழில் முடியும்...

7→

## சிங்களவர்..

நாடுகளிலோ உள்ள முஸ்லிம்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

தாய்லாந்தில் நிரந்தர வதிவிடங்களைப் பெற்றுக் கொள்ள விரும்புபவர்கள் இருந்தால் தாய்(லாந்து)ப் பெயரொன்றைப் பாவனைக்கு எடுக்க வேண்டியிருப்பதுடன், தாய்(லாந்துப்) பாஷையைக் கற்கவும் வேண்டும்.

மலேஷியாவின் மலாயர்கள் எண்ணிக்கையின்படி சிறுபான்மை இனமாவர். அவர்கள் சனத்தொகையின் 50%ஐ விடக் குறைவானவர்களாவர். அப்படியானாலும் அந்நாட்டில் மண்ணின் மைந்தர்களாக அவர்களை ஏற்றுக் கொள்ளும் சட்டங்கள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. ஆயினும் அவை உலக மக்களின் விமர்சனத்துக்கு உள்ளாகவில்லை. அனைத்துச் சிறப்புரிமைகளும் அந்நாட்டில் உரித்துடையது மண்ணின் மைந்தரான மலாயர்களுக்கு மட்டுமேயாகும். ஏனைய மலாயப் பிரஜைகளுக்கு அவ்வுரிமைகள் கிடையாது.

இஸ்லாம் சமயம் எல்லா விடயங்களை விடவும் முக்கியமானது எனக் கருதும் முஸ்லிம் நாடுகளில் ''செஞ்சிலுவைச் சங்கம் (Red Cross) சங்கச் சிலுவை அடையாளத்தினாலோ அல்லது செஞ்சிலுவை என்ற பெயரிலோ காணப்பட மாட்டாது. அது அவர்களின் சமய உரிமையை கௌரவிப்பதற்காகவேயாகும். மத்திய கிழக்கில் அது ''கிறீன் க்றசன்ற்'' (Green Crescent) என்ற பெயரில் பிறையுடனும், நட்சத்திர அடையாளத்துடனும், பாகிஸ்தான், பங்களாதேஷ், மலேஷியா, இந்தோனேஷியா ஆகிய நாடுகளில் ''றெட் கிறசன்ற்'' (Red Crescent) என்ற பெயரில் பிறையுடனும், நட்சத்திரத்திடனும் தோன்றுகிறது. இலங்கையில் தர்மச் சக்கரத்தைப் பாவிக்குமாறு கோர சிங்கள பௌத்தர்களுக்கு முதுகெலும்பு இல்லை. அப்படிக் கோரியிருந்தால், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அதை எதிர்த்திருக்கப் போவதில்லை. முஸ்லிம் நாடுகளில் கிறிஸ்தவ, பௌத்த, இந்து சின்னங்களோ, உருவங்களோ காட்சிக்கு வைப்பது தடை செய்யப்பட்டுள்ளது. அதனை மனித உரிமை மீறலாக எவரும் கருதுவதில்லை.

இற்றைக்குப் பத்து வருடங்களுக்கு முன்பு 10.10.1987அன்று பிஜித் தீவில் நடைபெற்ற இந்திய (தமிழ், வங்காளி) அரசாங்கத்தைக கவிழ்த்துக் கோர்ணல் றம்பூக்கா தலைமையில் இராணுவத்தினூடாக ஆட்சி அதிகாரம் கைப்பற்றப்பட்டதை ஐக்கிய நாடுகள் சபை ஏற்றுக் கொண்டுள்ளது. அதற்குக் காரணம், பிஜியர்கள் தம் நாடு பற்றித் தமக்குள்ள தேசிய உரிமையை உலகுக்குத் தெரிவித்துப் பாராளுமன்ற அரசாங்கத்தைக் கவிழ்த்து அதிகாரத்தை நிலை நாட்டியமையேயாகும். தேசியத்துக்கு உள்ள உரிமை அவ்வாறானதாகும்.

நாடொன்றில் நீண்ட காலமாகத் தங்கியிருப்பதால் மட்டும் தேசிய உரிமை கிடைக்காது. இது தொடர்பான வழக்குத் தீர்ப்பொன்று இங்கிலாந்தில் உள்ளது. அவ்வாறானவர்களுக்குப் பிரஜா உரிமை மட்டுமே உரித்துடையதாகும். சீக்கிய இனத்தவர்கள் இங்கிலாந்துக்கு தொழில் நிமித்தம் இற்றைக்கு 160 வருடங்களுக்கு முன்பு கொண்டு செல்லப்பட்டனர். அதாவது இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களைக் குடியமர்த்த முன்பு. தலைப்பாகை அணிவதால், தலைக்கவசம் ஹெல்மற் (Helmat) அணிய முடியாதுள்ளதால் சீக்கிய இனத்தவரொருவர் ஹெல்மற் இல்லாது மோட்டார் சைக்கிளொன்றைச் செலுத்தி நீதிமன்றத்தில் குற்றவாளியானார். அவர் அதற்கு எதிராக மீயுயர் நீதிமன்றத்தில் மனுச் செய்தார். தலைப்பாகை தமது இன உரிமை என்பதால் கீழ் நீதிமன்றத்தின் தீர்ப்புப் பிழையானது என அச்சீக்கிய இனத்தவர் கூறியிருந்தார். மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பானது, இங்கிலாந்தில் ஆங்கிலேயர்களை விட வேறு தேசத்தவர்கள் எவருக்கும் தேசிய உரிமைகள் எதுவும் இல்லையென்றும், அவருக்குப் பிரஜா உரிமை மட்டுமே உரித்துடையதென்றும், தேசிய உரிமைகளைப் பெற்றுக் கொள்ள அவர் தமது நாடான பஞ்சாப்புக்கே செல்ல வேண்டும் என்றும் அமைந்தது.

இந்நிதர்சனங்கள் சிலவற்றை எடுத்துக் காட்டியது, நாடொன்றின் தேசிய உரிமை அந்நாட்டு தேசியத்துக்கு மட்டுமே உரித்துடையதாவது எவ்வாறு எனக் காட்டுவதற்காகவேயாகும். மாறாக, தமிழ் உரிமைகளுக்காக இலங்கையில் போராடும் தமிழர்கள் தமது தாய் நாடான தமிழ் நாட்டில் தேசிய உரிமைகளைக் கோருவது இல்லை. தமிழ் நாட்டில் அரச கரும மொழி தமிழ் அல்ல. இந்தியாவின் அரச கரும மொழியான ஹிந்தியேயாகும். இந்திய அரசுடன் கடிதப் பரிமாற்றம் செய்யும் போது தமிழர்கள் அந்நாட்டு மொழியான ஹிந்தியையே பாவிக்கின்றனர். தமிழ் தனியே பிராந்திய மொழி மட்டுமேயாகும்.

இவ்வாறு தேசத்தவரையும், பிரஜையையும் பிரித்து வேறாக்குவது அந்நாட்டு வரலாற்றின்படி முதலில் உற்பத்தியை ஆரம்பித்துத் தேசத்தை உருவாக்கியது யார் என்று அறிந்து கொள்வதனாலேயாகும். இங்கிலாந்தின் பூர்வீகக் குடியினர் ஆங்கிலேயர் அல்ல, ''கெல்ற்றினர்''ரேயாவர். ஆனாலும் அவர்கள் விவசாயம் செய்ததும், நிரந்தர இருப்பிடம் இல்லாத நாடோடி இடையர்களாக இருந்தமையாலும் விவசாயத்தை ஆரம்பித்த ஆங்லோ - சக்சன்கள்) ஆங்கிலேயர் (Engilsh) அந்நாட்டுத் தேசத்தினராகினர். இன்றும் கெல்ற்றினர் கொன்வோல் குடா நாட்டிலும், வேல்ஸிலும் வாழ்கின்றனர்.

இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மன் போன்ற நாடுகளில் தேசத்தவரையும், பிரஜையையும் மிகவும் எளிய ஒரு உவமையினூடாக இனங் காணலாம். அதாவது வீட்டு உரிமையாளரும், வீட்டில் இருக்கும் வாடகைக் குடியிருப்பாளரும் போன்றதே இவையிரண்டுமாகும்.

வாடகைக்கு குடியிருப்பவருக்கு அதன் உரிமையாளரைப் போலவே வீட்டில் குடியிருக்கத் தடையேதும் இல்லை. ஒரே வித்தியாசம் அவருக்கு அவ்வீடு உரிமை இல்லாதது மட்டுமேயாகும். பிரஜைக்கும் விரும்பிய தொழில் ஒன்றைச் செய்ய வர்த்தகம் செய்ய, பிள்ளைகளுக்கு விருப்பமான கல்வியை வழங்க, தமது சமய மற்றும் கலாசார நடவடிக்கை/ செயற்பாடுகளை நிறைவேற்ற, விரும்பிய ஒருவரைத் திருமணம் செய்ய போக்குவரத்து மற்றும் உல்லாசம் ஆகிய அனைத்து விடயங்களுக்கும் சம சந்தர்ப்பமொன்று இருந்தாலும் தேசிய உரிமைகள் கோர இடமில்லை. வேறுபாடு இதுவேயாகும்.

இக்காரணங்களாலேயே இந்நாடுகள் எவற்றிலும் சிறுபான்மை இனங்கள் இல்லை. பெரும்பான்மை இனமும் சிறுபான்மை இனங்களும் உள்ள ஒரே நாடு இலங்கையேயாகும். வளர்ச்சியடைந்த நாடுகளில் தேசிய மற்றும் அந்நியப் பிரஜைகளே உள்ளனர். பிரச்சினை எழ முதலில், அவ்வாறான வாய்ப்புக்கள் இன்மையால் வளர்ச்சியடைந்த நாடுகளில் ''இனப்பிரச்சினை'' இல்லை.

இலங்கைக்குத் தேசியமொன்று இல்லை. வேறு வார்த்தைகளால் கூறுவதாயின் உரிமை கோர ஒருவரும் இல்லை. அதனால் சிங்களவரைவிட ஏனைய அனைவரும் இந்நாட்டின் மீதான தமது இன உரிமையைச் சொல்லிக் காட்டுகின்றனர். தாம் இலங்கையர் எனக் கூறுபவர்கள் சிங்களவர்கள் மட்டுமேயாவர். தமிழர்கள் தாம் தமிழர்களெனவும், முஸ்லிம்கள் தாம் முஸ்லிம்களெனவும் கூறுகின்றனர். சிங்களவர்கள் தாம் சிங்களவர்கள் எனக் கூறுவதில்லை. அப்படியான பொழுது சிறுபான்மை இன உரிமைகள் தொடர்பான பிரச்சினை நாட்டின் பிரதான பிரச்சினையா?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## கோணேஸ்வரிகள் : தொடரும் விவாதம்

# ஒரு கவிதையின் சிறகடிப்பு !

இதழ் 123ல் வெளிவந்த கோணேஸ்வரிகள்... கவிதை பற்றிய விவாதத்தில் சில விமர்சனங்கள் ஆளை ஆள் எதிர்கொண்டவைபோல் தோற்றமளிக்கிறது என்பது என் கணிப்பு. எப்படியோ பல விடயங்கள் பேசப்பட்டன என்றளவில் நாம் திருப்திப்பட்டுக் கொள்ளலாம். கவிதையோ தன்பாட்டுக்கு அதன் வெளிப்பாட்டு உத்தியில் சிறகடித்துக்கொள்ள... நாமோ அதன் நூலைப்பிடித்துக் கொண்டு பல விடயங்களைப் பேசிக் கொண்டிருக்கிறோம். சிலவேளை இவை கவிதையை இறுகக் கட்டிப் போட்டுவிடுமோ என அச்சப்பட வேண்டியும் இருக்கிறது.

ஒரு கவிதையை எழுதுபவரின் சமூக நிலைப்பாடே கவிதையில் பிரதானமாகக் கணிக்கப்பட வேண்டியது.

சமூக சிந்தனை தொடர்பான வித்தியாசமான கருத்துக்கள் எவ்வாறு உள்ளன என்பதை கவிதை எழுதுபவர் அறிந்து வைத்திருக்க வேண்டிய தேவையும் அதில் தன்னை ஈடுபடுத்திக்கொள்கின்ற தேவையும் இன்றைக்கு தவிர்க்க முடியாததாகவே உள்ளது. என்பனவெல்லாம் ★ நிபந்தனைகளாக்கப்படுவது இவ் அச்சத்தைத் தருகின்றன.

கலை இலக்கியத்தில் ஈடுபாடு காட்டாத அரசியல் விமர்சகர்கள் கவிதை, நாவல், சிறுகதை, நாடகம், ஓவியம் எல்லாவற்றுக்குமான விமர்சனங்களை முன்வைப்பதும் சினிமா பார்ப்பதில் நாட்டமே இல்லாதவர்கள் சினிமா விமர்சனங்களில் தலை நுழைப்பதும் நாம் காணும் சங்கதிகள். அரசியல் வாசிப்பு ஒன்றே எங்களுக்கு எல்லாவற்றையும் விமர்சிப்பதற்கான தகுதியைத் தந்து விடுவது கலை இலக்கியங்களுக்கு நேரும் அவலம்.

இங்கு கவிதைத் தளத்தில் நின்று மேற்கொள்ளப்பட்ட விமர்சனங்கள் பிரயோசனமாக இருந்தன என்பது மறுப்பதற்கில்லை. கவிதையை மறுத்தவர்களின் விமர்சனங்களில் கவிதையின் மொழி, சொற்கள் பற்றிய பார்வை ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை. சாதாரண வழக்கிலுள்ள யோனி, நிர்வாணம் போன்ற சொற்கள் அருவருப்பைத் தருவதற்குக் காரணம் என்ன என்பது பற்றியும் நாம் சிந்திக்க வேண்டும். எமது உடலே எம்மிடமிருந்து அந்நியமாக்கப்பட்டு எமது உடலுறுப்புக்களே எமக்கு மர்மமானதாக மாற்றப்பட்டதே யாகும். இதன் மூலம் பெண்களின் உடலின் மீதான ஆதிக்கம் ஆண் நோக்கில் நிலை நிறுத்தப்படுகிறது. யோனியை மர்மஸ்தானம் என்று அழைப்பதையும் நாம் பார்க்கிறோம். (மதவாதிகளோ, உடலின் இந்த அந்நியமாக்கல் மூலம் கடவுளின் மீது - பய - பக்தி கொள்ள வைக்கின்றனர்) உடலின் மீதான (ஆண்) ஆதிக்க அரசியலுக்கு நாம் பலியாகியதாலேயே யோனி, நிர்வாணம் போன்ற சொற்கள் எமக்கு ஜீரணிக்க முடியாமல் போய்விடுகிறது. பெண்மை, புனிதம், நாகரீகம் எல்லாம் அதிர்ந்து போகிறது. இதற்கு நாம் இந்த அரசியலை கேள்விக்குள்ளாக்குவதற்குப் பதில் கவிதையைக் கேள்வி கேட்பது பெண்ணிய நோக்கிலானதாக இருக்க முடியாது.

பாலியன் வன்முறை ஆணாதிக்கக் கருத்தியலின் வெளிப்பாடு என்பதை யார் மறுத்தார் அல்லது கவிதை தான் எங்கு மறுக்கிறது? ஒரு இனத்தின் மீது ஒடுக்கு முறையை அரச நிறுவனம் பிரயோகிக்கும் போது ஆணாதிக்க மனோபாவம் பாலியல் வன்முறையை சுயதிருப்திக்கும் ஆதிக்கம் செய்வதற்குமான கருவியாகப் பாவிப்பது இலகுவாகிறது. சிங்கள (ஆண்) இராணுவத்தால் இன்று தமிழ்ப் பெண்கள் இவ்வகையில் கொடுமைப் படுத்தப்படுகிறார்கள். இதைச் சொல்வது இனவாதமாகாது. அதேபோல் இது ஒரே இனத்துக்குள்ளேயோ (அல்லது குடும்பத்துக்குள்ளேயோ) நடைபெறும் பாலியல் வன்முறையை மறுப்பது என்பதுமாகாது.

(புதுக்)கவிதை அதன் லௌகீய சவடாலடிப்புக்கு வெளியே கொணரப்பட்டதன் ஒரு வெளிப்பாடு இவ்விவாதங்கள் என்றால் அது மிகையல்ல. அதேவேளை ஒரு கவிதையை அதன் சொற்களோடும், வாங்கியங்களோடும் மட்டும் வைத்து அக்குவேறு ஆணிவேறாகப் பிரிப்பது (அல்லது மயிர் பிளப்பது) எந்தளவு சரியான அணுகுமுறை என்பதும் ஒரு கேள்வி. அதில் கூட நமக்கு நேர்மை முக்கியம்.

*சமாதானத்திற்காய் போரிடும்*
*புத்தரின் வழிவந்தவர்களுக்காய்*
*உங்கள் யோனிகளைத் திறவுங்கள்.*
.....

இதில் சமாதானம் - புத்தர் என்று இணைக்கப்பட்டது பிடுங்கி எடுக்கப்பட்டு புத்தர் - பாலியல் வல்லுறவு என்று இணைக்கப்பட்டு விமர்சிக்கப்பட்டிருக்கிறது. புத்தருக்கும் பாலியல் வல்லுறவுக்கும் என்ன சம்பந்தம் என்று கேள்வி கேட்கப்படுகிறது. புத்தரை அவமதித்துவிட்டதாய் விமர்சனங்கள் வேறு.

முக்கியமாய் கவிதையின் வெளிகளுக்குள் நின்றுதான் நாம் கவிதையில் பயணம் செய்ய முடியும் என்று நம்புகிறேன். சொற்களில் ஏறி நின்று இதைச் சாதிக்க முடியும் என்று நான் நம்பவில்லை. இந்த வெளியில் தான் அது பேசும் அரசியலும் வெளிப்படுகிறது.

*சிங்கள சகோதரிகளே!*
*உங்கள் யோனிகளுக்கு*
*இப்போது வேலையில்லை.*

என்ற இறுதி வரிகள் தமக்குப் பின்னால் விட்டுச் சென்றுள்ள வெளி (Space)யுடனேயே கவிதை முடிவுறுகிறது என்பது கவிதையின் மீதான ஒரு வாசிப்பு. இந்த வெளி பேசும் செய்தி இப்படியாக இருக்கலாம்.

இந்தப்போர் முடிவுக்கு வந்தால் (இன்னொரு சந்தர்ப்பத்தில்) இந்த வன்முறையின் இடம் மாறி உங்களுக்கும் வரலாம் என்றோ அல்லது (ஜே.வி.பி கிளர்ச்சிகளின் போதோ அல்லது வேறு சந்தர்ப்பங்களிலோ) உங்களிடமிருந்து இடம்மாறி இப்போ எம்மிடம் வந்து சேர்ந்துள்ளது என்றோ இருக்கலாம். இங்கு ஆணாதிக்க மனோபாவம், கருத்தியல் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. இனவாத நோக்கின்றி பெண்ணிய நோக்கில் அணுகப்பட்டிருக்கிறது.

*வாருங்கள்*
*உடைகளைக் கழற்றி*
*உங்களை நிர்வாணப்படுத்திக்*
*கொள்ளுங்கள்*
*எம் அம்மாவே உன்னையும் தான்.*

*சமாதானத்திற்காய் போரிடும்*
*புத்தரின் வழிவந்தவர்களுக்காய்*
*உங்கள் யோனிகளைத் திறவுங்கள்*
*பாவம்,*
*அவர்களின் வக்கிரங்களை*
*எங்கு கொட்டுதல் இயலும்.*

இந்த வெளியில் . திரும்புகிறார் மறுபக்கம். சொல்கிறார்,

*வீரர்களே! வாருங்கள்*
*உங்கள் வக்கிரங்களைத்*
*தீர்த்துக்கொள்ளுங்கள்!*

கவிதையின் இந்த வெளி மறுதலை அர்த்தத்தைத் தருகிறது. நிர்வாணப் படுத்திக் கொள்ளுங்கள், யோனிகளைத் திறவுங்கள், வீரர்களே வாருங்கள், வக்கிரங்களைத் தீர்த்துக் கொள்ளுங்கள்... என்றெல்லாம் கவிஞர் வேண்டுகோள்விட்டு மகிழ்கிறாரா என்ன...! ஆனால் சில விவாதங்களோ இவ்வரிகளை நேரடி அர்த்தத்துடன் அணுகியது சற்றும் எதிர்பார்க்காத ஒன்று எனலாம்.

அதிகாரத்துவத்துக்கும் (இயலாமையால்) பணிந்து போதலுக்குமான கொடுமைக்குள் இந்த வெளி பிரசவிக்கிறது. கவிதை வீச்சம் கொள்கிறது.

----

*எங்கள் யோனிகளின் ஊடே*
*நாளைய சந்ததி தளிர்விடக்கூடும்.*
*ஆகவே,*
*வெடிவைத்தே சிதறடியுங்கள்*
*ஒவ்வொரு துண்டுகளையும் கூட்டி*
*அள்ளி*
*புதையுங்கள்*
*இனிமேல் எம்மினம்*
*தளிர்விடாதபடி.*

என்று அந்தக் கொடூரத்தின் உச்சியில் ஓங்கி அறைகிறார் கவிஞர்.

அந்த வெளியில் கவிதை சிறகடிக்கிறது. நாமோ நூலைப் பிடித்தபடி மிதித்த தரையை விட்டகலா விடாப் பிடியுடன்...

இன்னும், இக்கவிதையை பிரசுரித்ததுக்காக சரிநிகருடன் கோபித்துக் கொள்பவர்களையும் கூட இவ்விவாதத்தில் நாம் காண்கிறோம். இக்கவிதையை அங்கீகரித்தோ அல்லது தரமானதாகவோ பல வாசகர்கள் குறிப்பிட்டுக்கொண்ட பிறகும் கூட இப்படி எழுதுவதற்கும் முன் கொஞ்சம் நிதானித்திருக்கலாம். மாற்றுக் கருத்துக்களை மதிப்பது, ஜனநாயகப்பண்பு, பக்குவம்... என்றெல்லாம் உதிர்க்கும் நாம் எமக்குப் பிடிக்காத அல்லது உடன்பாடில்லாத விடயங்களைப் பிரசுரிப்பதை மறுப்பதிலிருந்து, பாய்ந்து சட்டையில் பிடித்து கேட்பதுவரை முன்னேறித்தான் உள்ளோம். அப்படியொரு ஜனநாயகப்பண்பு எங்களுக்கு!

**-ரவீந்திரன்**

***★ (கமலினியின் விமர்சனம் - இதழ் 133)***

---

# நெஞ்சில் உரமற்றவர்களுக்குச் சுடும்

அண்மைக் காலத்தில் என்னை அதிகம் பாதித்த கவிதை எது? சந்தேகமில்லாமல் கலாவின் 'கோணேஸ்வரிகள்' தான். புஸ்கினில் இருந்து பாரதிவரை, பப்லோ நெருடாவில் இருந்து கலா வரை ''அச்சமும் பேதமையும் அடிமைச் சிறுமதியும் உள்ளத்தில்'' கொள்ளாத கவிஞர்களது மொழி சுடும் நெருப்புத் தணலாக இருக்கிறது.

அத்தகைய கவிதைகளின் ஒளி ''பிச்சை வாழ்வுகந்து'' பதவிச் சுகங்களுடன் இருளுக்குள் மறைந்திருக்கும் ''நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறனுமின்றி'' வஞ்சனை செய்பவர்களுக்கு என்றும் அருவருப்பாகவே இருந்திருக்கிறது. இது சுய அருவருப்பு. இதற்கு கவிஞர்கள் என்ன செய்வது?

மிலேச்சர்களின் கையில் எங்கள் பிள்ளைகள் படும் ''தேசிய மற்றும் பால் ரீதியாக ஒடுக்குமுறையின் ஆழத்தை ஒரு சிறு கவிதைக் கூடாக உணர்த்தியிருக்கும். இக்கவியின் ஆற்றலை'' துஷ்யந்தியோடு சேர்ந்து நானும் வியக்கிறேன்.

தேசிய இன ஒடுக்குதலின் கூர்முனையாக தமிழ்ப் பெண்கள் மீதான பால் வன்முறை மாறி விட்டிருக்கிறது. நூற்றையும் தாண்டி விட்டது கோணேஸ்வரிகளின் தொகை. மிலேச்சத்தனமான சிங்கள பேரினவாத அரசுகளின் மேடைப் பிரச்சாரகர்களும், அரச தொடர்பு சாதன இயக்குனர்களும் இத்தகைய சிங்கள இனவாத மிலேச்சர்களுக்கு எதிராகத் தமிழர் மத்தியில் மட்டுமின்றி சிங்களவர் மத்தியில் இருந்தும் எழுகிற எதிர்ப்பலையைத் திசை திருப்புகிற முயற்சிகளில்நிச்சயமாக தோற்றுப் போவார்கள்.

இனங்களுக்கும், அவர்களது படைகளுக்கும் போராளிகளுக்கும், கசாக்ககுள், ஜெர்மனியர்கள், பலஸ்தீனியர்கள் என அடையாளப்படுத்துகிற போக்கு முற்போக்கு இலக்கிய வரலாறு முழுவதிலும் உள்ளது. தமிழர்கள், சிங்களவர்கள் என்பதும் அத்தகையதே.

சிரால் லக்திலக்க, 'மோர்ஜ்' 'சந்திரிகா மார்க்' மனித - பால் உரிமை மீறல்களை ஆதரிக்கும் அமைப்பல்ல என்பதை உணர்வாராக. சிங்கள மக்கள் மத்தியில் இனவாதத்துக்கெதிராக சாள்ஸ் அபயசேகர, விக்கிரமபாகு கருணாரத்தின, அஜித் ரூபசிங்க என்பவர்கள் நிகழ்த்தும் பேச்சுக்கள் அவருக்கு உதவக்கூடும்.

**வ.ஐ.ச. ஜெயபாலன், நோர்வே.**

---

3 →

# வடக்கு ..

**நீங்கள் கூறுவது போல இத்தீர்வுத் திட்டம் தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யவில்லையென்று எடுத்துக் கொண்டாலும் கூட, இக் குறைந்த பட்சத் தீர்வைக் கூட ஐ.தே.கட்சி ஏற்றுக் கொள்ளத் தயாரில்லாமல் எதிர்க்கிறதே?**

இது இலங்கையின் அரசியல் கட்சிகளின் மிக மோசமான இனவாதப் போக்கையே காட்டுகிறது. நாடு சுதந்திரமடைந்து 50வது ஆண்டு சுதந்திரத்தை கொண்டாடும் நேரத்தில் தமிழ் மக்களுடைய பிரச்சினைக்கு நியாயமான தீர்வை வழங்க அவர்கள் தயாரில்லை என்பதைத் தான் இது காட்டுகிறது. ஒற்றையாட்சிக்குள் இப்பிரச்சினைக்குத் தீர்வைக் காண ஐ.தே.க. முயல்கிறது. இதனை நாம் பரிசீலிக்கக் கூடத் தயாரில்லை. இதனை விட வடக்கு கிழக்கு என்ற எமது தாயகத்தையும் அவர்கள் ஏற்றுக் கொள்வ்தாக இல்லை. ஐ.தே;க. இன்னும் இனவாதப் போக்கையே கைக்கொள்கிறது என்றே திட்டவட்டமாகச் சொல்ல முடியும்.

**இந்தப் போரை ஆதரிக்கவில்லை. இது ஒரு ஆக்கிரமிப்புப் போர் என்றீர்கள். ஆனால் எங்களுக்குக் கிடைக்கும் தகவல்கள் உங்களது இயக்கம் குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் ஆரையம்பதி, கொம்மாந்துறை, செங்கலடி, செட்டிபாளையம் போன்ற பல இடங்களில் ஆக்கிரமிப்பு இராணுவத்துடன் சேர்ந்து செயல்படுவதாகச் சொல்லப்படுகிறதே?**

எமக்கு மன்னார், வவுனியா, திருமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் அலுவலகங்கள் உண்டு. தமது பாதுகாப்பிற்காக எமது உறுப்பினர்களும் ஆயுதம் தரித்த நிலையில் உள்ளார்கள். சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு நாம் அரச நிர்வாகத்திற்கு சில வேளைகளில் உதவி புரிய வேண்டியிருக்கிறது. எனவே இது தவிர்க்க முடியாதது. அதோடு புலிகள் எம்மைத் தாக்கும் போது நாம் திருப்பித் தாக்க வேண்டியுள்ளது. அது தவிர புலிகளைத் தேடியழிக்கும் நடவடிக்கை எதிலும் நாம் ஈடுபடுவதில்லை.

**கிழக்கைப் பொறுத்தவரை அரச நிர்வாகம் இராணுவ மயப்படுத்தப்பட்டே காணப்படுகிறது. இந்நிலையில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட நீங்கள் கொடுக்கும் ஆதரவு இராணுவ நோக்கங்களை நிறைவேற்ற உதவுவதாகாதா அல்லது தமிழ் மக்கள் மேல் மேலாட்சி செலுத்த முனையும் அரசியலுக்கு நீங்கள் உதவுவதாக அர்த்தமாகாதா?**


நாங்கள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நடாத்தவில்லை. ஐக்கிய இலங்கைக்குள் ஒரு தீர்வையே கோரி நிற்கிறோம். அதனால் அப்பகுதிகளின் சட்டம் ஒழுங்கை யாரும் சீர்குலைப்பதை அனுமதிக்க முடியாது. அதே போல் பல இன மக்களும் கலந்து வாழும் பகுதிகளில் இனமோதல்கள் நடைபெறாமல் எமது மக்களைப் பாதுகாக்கும் பொறுப்பு எம்மிடம் உள்ளது. எமது பிரசன்னம் அங்கு இல்லையென்றால் தமிழ் மக்கள் மோசமாகப் பாதிக்கப் படுவார்கள்.

**ஆனால், உங்களது இயக்கம் காத்தான்குடி பகுதியில் முஸ்லிம் மக்களுடைய வள்ளங்கள் எரிக்கப் பட்ட சம்பவத்துடன் தொடர்பு படுத்திப் பேசப்பட்டதே?**

அமைச்சர் அஷ்ரஃப் உட்பட பலரும் எமது இயக்கத்தின் மீதே குற்றம் சாட்டினார்கள். ஒன்றரை மாதத்துக்கு முதல் காத்தான்குடி பொலிசாரால் கைது செய்யப்பட்ட புலி உறுப்பினர் எனச் சொல்லப்படும் ஒருவர் கொடுத்த வாக்கு மூலத்தின்படி அவர்கள் அதனைச் செய்ததாக ஒப்புக்கொண்டுள்ளார்கள். நாம் இது தொடர்பாக விசாரணைக் கமிசன் ஒன்றை நியமிக்குமாறு கேட்டுக் கொண்டிருக்கிறோம். அது இதுவரை நடைபெறவில்லை. இது தொடர்பாக பத்திரிகையாளர் மாகாநாடொன்று நடாத்தி விடயத்தை அம்பலப்படுத்தினோம். ஆனால், எந்தப் பத்திரிகையும் அதனைப் பிரசுரிக்கவில்லை. இதற்கு மு. காங்கிரஸ் தலைவர்கள் காரணமாக இருந்திருக்கிறார்கள் என்பது தெரிகிறது.

www.tamilarangam.net






இம் மாதம் நவம்பர் 13ஆம் திகதியன்று ஜே.வி.பி, 8வது மாவீரர் தினத்தை நினைவு கூர்ந்தது. இன்று இலங்கையில் சக்தி வாய்ந்த இடதுசாரி இயக்கமாக முதன்மை நிலையில் இருப்பது ஜே.வி.பி.யே. 1971, 1988 ஆகிய இருமுறையும் புரட்சி செய்யவெனப் புறப்பட்டு தோல்வி கண்டு, மீண்டும் புறப்பட்டுள்ள ஜே.வி.பி.யானது இன்றும், இடதுசாரி இயக்கங்களிலேயே பெருமளவு உறுப்பினர்களைக் கொண்ட அமைப்பாகும். நிறுவனக் கட்டமைப்பு, ஒழுங்கு விதிகள், போன்ற இறுக்கமான ஒழுங்குக்குட்பட்டு இயங்கி வரும் ஜே.வி.பி, இன்றும் அதிகார தரப்பினருக்கு பெரும் தலையிடியைக் கொடுத்து வரும் இயக்கமாகவும் எதற்கும் விலைபோகாத கட்சியாகவும் இருந்து வருகிறது என்றால் மிகையில்லை. 1989ஆம் ஆண்டு நவம்பர் 13ஆம் திகதி அதன் ஸ்தாபகரும் தலைவருமான றோகண விஜேவீர, ஆளும் அதிகார வெறியர்களால் கைது செய்யப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டு, இறுதியில் ரகசியமாக சுடப்பட்டு, எரிக்கப்பட்டார். அத்தினத்தை வருடா வருடம் ஜே.வி.யினர் கொல்லப்பட்ட தங்களது தோழர்களின் நினைவாக அனுஷ்டித்து வருகின்றனர்

விஜேவீரவின், "புரட்சிகர பாத்திரம்", கட்சிக்குள் தலைமை வழிபாடு சதா காலம் நிலவுவதற்கு அவரின் பாத்திரம், கட்சிக்குள் ஜனநாயக மத்தியத்துவத்துக்கு வழங்கிய இடம், விமர்சனம் - சுயவிமர்சனம் என்பவை குறித்த அணுகு முறை, ஆதிக்க சித்தாந்தங்களை சரியாக அடையாளம் காணாமை, கட்சிக்குள்ளும் அதற்கு வெளியிலும் காணப்பட்ட அராஜகம் என்பன உட்பட அது போன்ற தன்மைகள் குறித்து இக்கட்டுரை பேசவில்லை. அது வேறு ஒரு களத்தில் விரிவாகப் பேசப்பட வேண்டியவை. இக்கட்டுரை விஜேவீர படுகொலை செய்யப்பட்டது சம்பந்தமாக மட்டும் பேசுகிறது.

ஆதிக்க சக்திகள் புரட்சிகர சக்திகளை எப்போதுமே விட்டு வைப்பதில்லை என்பதும் அவ்வாறான புரட்சிகர அமைப்புகளை முழுமையாக அழிப்பதென்றால் அதன் தலைமையை அழித்து விட்டால் எல்லாம் அடங்கிவிடும் என நம்புவதும் சாதாரணமானது. அவ்வாறான நம்பிக்கை வெறுமனே சோஷலிசப் போராட்டம் மட்டுமல்ல பல்வேறு சமூகப் போராட்டங்ளையும் கூட இதே அணுகுமுறையில் ஆதிக்க சக்திகள் நம்பிக்கை வைத்து வருவது பொதுவாக காணக் கூடியதே. அந்த நம்பிக்கையின் நிமித்தமே விஜேவீர உட்பட ஜே.வி.பி.யின் மத்திய குழு உறுப்பினர்கள் (தற்போதைய தலைவர் சோமவங்ஷ அமரசிங்க தவிர்ந்த) அனைவரும் வேட்டையாடிக் கொல்லப்பட்டனர். ஜே.வி.பி. மீண்டும் பகிரங்க அரசியலுக்கு வர நீண்ட காலம் எடுத்தது. இந்தக் கால தாமதத்துக்கு விஜேவீர வளர்த்து வைத்திருந்த "தலைமை வழிபாடும்" முக்கிய காரணமாக ஆகியிருந்தது. அதே வழிபாட்டுமுறையே இன்றும் அதன் போக்கில் குடிகொண்டுள்ளது.

## "விஜேவீர வாக்குமூலம்"

"அன்புக்குரிய நாட்டு மக்களே! நான் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் றோகண விஜேவீர. நான் நவம்பர் 13ஆம் திகதி இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட நிலையில் சேசுகிறேன். நேற்று கண்டியில்-உலபன பகுதியிலிருந்து இராணுவம் என்னைக் கைது செய்தது. பின் கொழும்பு இராணுவ முகாமுக்கு கொண்டு வரப்பட்டு அதிகாரிகளின் விசாரணைக்கு உட்படுத்தப் பட்டேன். நாட்டில் தற்போது உருவாகியிருக்கும் நிலை பற்றிய எனது கருத்தென்னவென்றால், நாடு அந்நிய ஆக்கிரமிப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கும் இச்சூழ்நிலையில் பல அழிவுகளை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறது. இந்நிலையில் மக்கள் வன்முறையிலிருந்து விலகி அமைதியாக இருக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்..."

றோகண விஜேவீர படுகொலை செய்யப்படுவதற்கு சில மணித்தியாலங்களுக்கு முன் அவரை வதைக்குள்ளாக்கி வலுக்கட்டாயமாகப் பெறப்பட்ட வாக்குமூலம் இது. மேற்படி வாக்கு மூலம் அடுத்த நாள் தொலைக் காட்சியிலும் காட்டப்பட்டது.

வரலாறானது அதிகார வர்க்கத்தின் பிடிக்குள் சிக்கி பலியான புரட்சிகர தலைவர்களின் எத்தனையோ பேரின் படுகொலைகளையும் கடந்து போய்க்கொண்டிருக்கிறது.

சேகுவேரா சீ.ஐ.ஏ.வினால் பொலிவியாவில் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டார். ஜெர்மானிய புரட்சிகர தலைவி ரோஸா லக்ஸம்பர்க் அந்நாட்டு அரச படையினரால் குரூரமாக கொலை செய்யப்பட்டு ஆற்றில் தூக்கியெறியப்பட்டார். லியோன் ட்ரொஸ்கி சீ.ஐ.ஏ.வினால் குரூரமான முறையில் கொலை செய்யப்பட்டார். நக்ஸலைட் தலைவர் சாரு மஜும்தார் இந்திய ஆளும் வர்க்க கைக்கூலிகளால் ரகசியமாகக் கொலை செய்யப்பட்டார். அந்த போக்கின். தொடர்ச்சி இன்னும் மேலே மேலே சென்று கொண்டிருக்கிறது.

## தலைமறைவும் தற்காப்புக்கான நிர்ப்பந்தமும்

1971 கிளர்ச்சி சிறிமாவோ பண்டாரநாயக்க ஆட்சியினால் அழித்து அடக்கப்பட்டது. இதன் போது 20,000 பேருக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். கிளர்ச்சிக்கான சூத்திரதாரிகள் என்ற குற்றச்சாட்டின் பேரில் விஜேவீர உட்பட 41 பேரின் மீது ஆணைக்குழு அமைத்து விசாரணை செய்யப்பட்டனர். அவர்களில் 31 பேர் சிறைத்தண்டனை பெற்றனர்.

1977 தேர்தல் பிரச்சாரத்தின் போது ஜே.ஆரால், சிறிமாவுக்கு எதிரான ஆயுதமாக "அரசியல் கைதிகளை விடுதலை செய்" எனும் கோஷம் பாவிக்கப்பட்டது. வரலாறு காணாத வெற்றி பெற்ற ஜே.ஆர் "சொன்னபடி செய்யும் நேர்மையாளனாக" தன்னை காட்ட 1977 நவம்பர் 2ம் திகதி விஜேவீர உட்பட பல அரசியல் கைதிகளை விடுவித்தார்.

1982ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஜனாதிபதித் தேர்தலில் ஜே.ஆரை எதிர்த்துப் போட்டியிட்ட அறுவரில் மூன்றாவதாக பெரும்பான்மை வாக்குகள் விஜேவீரவுக்கு கிடைத்திருந்தது. அத்துடன் மாவட்ட சபைத் தேர்தலிலும் ஜே.வி.பிக்கு கணிசமான ஆசனங்கள் கிடைத்திருந்தன. மாவட்ட சபைத் தேர்தலில் இடம்பெற்ற தேர்தல் மோசடிகளை எதிர்த்து ஜே.வி.பி. வழக்கும் தொடுத்திருந்தது. இந்த போக்கு தனது எதிர்கால அரசியல்க்கு அச்சுறுத்தல் என்பதை ஜே.ஆர் விளங்கிக் கொள்ள நேரம் செல்லவில்லை. பலமடைந்து வரும் ஜே.வி.பி.யை அடக்க தருணம் பார்த்து வந்த ஜே.ஆர்., அடுத்த வருடமே 83 இனக்கலவரத்தை தூண்டிவிட்டதுமல்லாமல் அதற்கான முழுப் பொறுப்பையும் இடதுசாரிக் கட்சிகளான ஜே.வி.பி., நவ சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றின் மீது சுமத்தினார்.

அக்கட்சிகளை தடைசெய்ததுடன், அதன் தலைவர்களை கைது செய்ய உத்தரவிட்டார். பாராளுமன்ற இடதுசாரிக் கட்சிகளைச் சேர்ந்த கட்சிகளின் தலைவர்கள் பலர் சரணடைந்தனர். இந் நடவடிக்கை ஜே.வி.பி.யை தலைமறைவு அரசியலுக்கு இட்டுச் சென்றது. காலப்போக்கில் ந.ச.ச.க., கம்யூனிஸ்ட் கட்சி ஆகியன மீதான தடைகள் நீக்கப்பட்ட போதும் ஜே.வி.பி. மீதான தடை நீக்கப்படவில்லை. தமது கட்சியின் மீதான தடையை நீக்கக் கோரி விஜேவீர பல முறை ஜே.ஆருக்கு கடிதம் எழுதியிருந்த போதும் அது தொடர்ந்து நிராகரிக்கப்பட்டது. ஜே.வி.பியின் தலைமறைவு அரசியலை இந்த நடவடிக்கை ஸ்தூலப்படுத்தியது. காலப் போக்கில் ஜே.வி.பியினர் மீதான அடக்குமுறையும் கட்டவிழ்க்கப்பட்டது. இதன் காரணமாக ஜே.வி.பி.யினர் தமது தற்காப்புக்காக ஆயுத பாணிகளாக வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு தள்ளப்பட்டனர். இந்த அடக்குமுறை அதிகரித்த வேளையில் அதற்கு பதிலடி கொடுத்தனர். பிரேமதாச பதவியில் அமர்ந்ததும் ஜே.பி.யினர் எனும் பேரில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட அப்பாவி இளைஞர்கள் கொல்லப்பட்டனர். இறுதியாக விஜேவீர கொல்லப்பட்டதுடன் ஜே.வி.பி.யின் அனைத்து வேலைகளும் முடக்கப்பட்டன. அன்றைய பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன தனது மொழியில் கேம் ஓவர் (Game over) என்றார்.

## அரசு-ஜே.வி.பி பேச்சுவார்த்தை

ஜே.வி.பி. தலைவர்களைப் பிடிப்பதற்கென்றே பிரேமதாச அரசாங்கம், "ஒப்பரேஷன் கம்பைன்ஸ்" எனும் இராணுவ உட்பிரிவொன்றை உருவாக்கியிருந்தது.

ஜே.வி.பி.யை முழுமையாக அழித்துவிடும் திட்டத்தை அரசாங்கம் மிகவும் தந்திரமாக செய்து வந்தது. பிரேமதாச பல தடவை ஜே.வி.பியுடன் தான் பேச்சுவார்த்தை நடாத்த தயாராக இருப்பதாகவும் காலம் தாழ்த்த வேண்டாம் என்றும் அறிக்கை விட்டுக் கொண்டிருந்தார். ஆரம்பத்தில் இதில் உள்நோக்கம் இருக்கும் என்றும் தம்மை பிடிக்க விரிக்கும் வலை என்றும் நம்பி அசட்டையாக இருந்த ஜே.வி.பி.யின் தலைமை, பின்னர் பேச்சுவார்த்தைக்கு தாம் தயாரென ரகசியமாக சிக்னல் கொடுத்தது. "சலாகா" முதலாளி மற்றும் அமைச்சர் தொண்டமான் ஆகியோருரினூடாக இந்த முயற்சிகள் நடந்தன. முன் கூட்டியே செய்திருந்த ஏற்பாட்டின் பிரகாரம் 1989 ஒக்டோபர் 14ஆம் திகதியன்று ரம்பொட தோட்டத்திலுள்ள தொண்டமானின் வீட்டில் ஜே.வி.பி.யின் முக்கியஸ்தர் ஒருவர் மொழி பெயர்ப்பாளர் ஒருவருடன் அரசின் பிரதிநிதியான தொண்டமானுடனான பேச்சுவார்த்தை ஆரம்பமானது. இச்சந்திப்பில் ஜே.வி.பி.யினால் முன்வைக்கப்பட்ட நிபந்தனைகளையும் முன்னேற்றத்தையும் ஜனாதிபதி பிரேமதாசவுக்கு அவ்வப்போது தெரிவித்து வந்தார் தொண்டமான். இப்பேச்சுவார்த்தை பற்றி ஜே.வி.பி.க்குள் முரண்பாடான கருத்தும் இருந்தது. குறிப்பாக அரசுடன் எந்த விதத்திலும் உடன்பாடொன்று காண்பது தேவையற்றது என்ற கருத்து பலமாக இருந்தது. இதன் காரணமாக நவம்பர் 8ஆம் திகதியன்று நடாத்தப்படவிருந்த பேச்சுவார்த்தை ஒத்திப் போடப்பட்டது. இந்த 8ஆம் திகதிக்கும் 12ஆம் திகதிக்குமிடையில் தான் ஜே.வி.பி.யின் தலைவர்கள் பலர் கைது செய்யப்பட்டார்கள். இந்தப் பேச்சுவார்த்தை தொடர்பாக இன்று தொண்டமானும் எதுவும் எதுவும் கூறப்போவதில்லை. ஜே.வி.பி.யும் இதனை ஒப்புக்கொள்ளப் போவதில்லை. பிரேமதாசவும் உயிருடன் இல்லை. ஆனால் உள்ளளவில் தொண்டமானுடனான இப்பேச்சுவார்த்தை தான், தமது தலைவர்கள் வலையில் அகப்பட காரணமாக இருந்திருக்கிறது என்பதை கட்சியின் தலைவர்கள் பலர் நம்பி வருகிறார்கள்.

## அரசு விரித்த வலையும் காட்டிக் கொடுப்பும்

இந்த நிலையில் தான் டீ.எம்.-ஆனந்த கைது செய்யப்பட்டார்.

ஜே.வி.பி.யின் தலைமையை ஒழித்துக் கட்டுவதாயின் அதன் தொடர்பு வலைப்பின்னலை தேடிக் கண்டு பிடிக்க வேண்டும் என ஒப்பரேஷன் கம்பைன்ஸ் தீர்மானித்திருந்தது. அதன்படி ஏலவே கிடைத்திருந்த தகவல்களின்படி மூவர் இலக்கு வைக்கப்பட்டனர். சோமவங்ச அமரசிங்க, கதுருபொகுணு மற்றும் டீ.எம்.ஆனந்த ஆகியோரே அவர்கள். கதுருபொகுணுவுக்கும் ஆனந்தவுக்குமிடையிலான தொடர்பு ஆனந்தவின் டிரைவருக்கூடாக நடப்பதாகத் தெரிய வந்தது. பிலியந்தலையில் வைத்து கதுருபொகுணு பிடிக்கப்பட்டார். அவரின் தகவலின் பின்னர் தான் டீ.எம்.-ஆனந்த கொழும்பு மாவட்ட ஜே.வி.பி.யின் தலைவர் எனப் பாதுகாப்புப் பிரிவினருக்கு தெரியவந்தது.

படையினரின் அடுத்த நாடகம் ஆரம்பமானது. கதுருபொகுணுவுடன் வேடமணிந்து சென்ற இராணுவ கப்டனை டீ.எம்.ஆனந்தவின் டிரைவரிடம் அவர் தலைவரிடமிருந்து ரகசிய தகவல் ஒன்றை கொண்டு வந்திருப்பதாகவும் ஆனந்தவிடம் இதனை ஒப்படைக்க அழைத்துச் செல்லும்படியும் கேட்கவே, அவரும் தெமட்டகொடைக்கு அழைத்துச் சென்றார். இலகுவாக படையின் வலையில் சிக்கிக் கொண்ட ஆனந்தவை மூன்று நாட்களாக கடும் சித்திரவதை செய்து உண்மையை கக்க வைத்தனர். ஜே.வி.பி.யின் தொடர்புகள் அனைத்தும் வெளிப்படுத்தப்பட்டன. அவர் வெளியிட்டிருந்த தகவல்களின்படி முதலில் பண்டாரவளையில் ரெஜினோல்ட் பெட்ரிக் எனும் பெயரில் இருந்து வந்த சோமவங்ச அமரசிங்க

தங்கி
வளைத
சோமவா
போயிரு
போட்டு
ங்கள்
வில்லை.

பல்
தடுத்து
தவை மீ
உண்மை
த்தனர்.
தலைகீ
தண்ணீ
வதை
விஜேவீர
கக்கினா
இன்னும்
டீ.எம்.ஆ

வி

இத்த
மையகத்
உலபனை
வீரவின்
வழியை
கூடாக அ

ஒப்ப
ருந்து ஒ
பிடிப்பத

சென்
துள்ள அ
நிற வாயி
கொண்
நவம்பர்
மணி. வி
பிள்ளை
யில் அம
ருந்தார்
வாகனத
இறங்கி
வீட்டை

## அத்தநாயக்க எனும் விஜேவீர

ஒருவருடத்துக்கு கூடாத வகையில் இருப்பிடங்களை மாற்றி குடியிருந்து வந்த விஜேவீர உலபனை வீட்டுக்கு 1987 செப்டம்பர் 2ஆம் திகதியன்றிலிருந்து அத்தநாயக்க எனும் பேரில் தனது குடும்பத்துடன் குடியிருக்கத் தொடங்கியிருக்கிறார். பிள்ளைகளை பாடசாலைக்கு அழைத்துச் செல்லுதல் உட்பட பத்திரிகைகள் தொடக்கம் ஏனைய வீட்டுக்கு தேவையான பொருட்களை வாங்குவது அனைத்தையும் முதிர்ந்த வீட்டு வேலையாள் ஒருவர் செய்து வந்தார். அத்தநாயக்க எவருடனும் வீணாக பேச்சு வைத்துக்கொள்வதில்லை. முதியவர் இல்லாத வேளைகளில் அக்கடமைகளை அத்தநாயக்கவே செய்வார். திருமதி அந்தநாயக்க பற்றி சுற்றார் நல்ல மதிப்பு வைத்திருந்தனர். உலபனை இருப்பிடத்துக்கு ஜே.வி.பி.யின் தலைவர்கள் நான்கு பேர் மட்டுமே வந்து போயிருந்தனர். தனது சிறு குழந்தை கூட தனது தகப்பனார் தான் விஜேவீர என்பதை அறியாது இருக்குமளவுக்கு இரகசியம் பாதுகாக்கப்பட்டிருந்தது.

ஒரு முறை ஜே.வி.பி.யின் இராணுவப் பிரிவான "தேஷப்பிரேமி ஜனதா வியாபார" (தேசாபிமான மக்கள் இயக்கம்) வைச் சேர்ந்த உறுப்பினர்கள் அடையாள அட்டைகளை பறித்துக் கொண்டிருந்தனர். அத்தநாயக்கவிடமும் துப்பாக்கியைக் காட்டி அடையாள அட்டையைக் கேட்டு மிரட்டினர். வியாபார நடவடிக்கைகளுக்காக நாடு முழுதும் போய் வரும் தான் அடையாள அட்டையை தர முடியாது என வாதிட்டுள்ளார். இதன் மூலம் தெரிவது என்னவென்றால் கண்டி மாவட்ட ஜே.வி.பி. தலைவர் கூட தமது தலைவரின் இருப்பிடத்தை அறிந்திருக்கவில்லை என்பதே.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





வளைத்தனர். சூழ்ந்து கொண்டவர்கள் கேள்வி எழுப்ப முன்னமே விஜேவீர அவர்களை நோக்கி கேள்வி எழுப்பினார்.

"என்ன இது. ? என்னை என்ன செய்யப் போகிறீர்கள்."

"ரோகண விஜேவீர! சரணடைந்து விடு."

"நான் விஜேவீர இல்லை. விஜேவீர என்பது யார்? உங்களது கணிப்பு தவறு என நினைக்கிறேன். நான் அத்தநாயக்க. நன்றாகப் பாருங்கள்." இவ்வாறு கூறியதும் கேர்னல் சானக்க பெரேரா தனது 9 எம்.எம் பிஸ்டலை எடுத்துக் கொண்டு முன்னே பாய்ந்து விஜேவீரவின் தலையில் பிஸ்டலை வைத்து...

"நீ விஜேவீர அல்லவா...?"

அதிர்ச்சியை வெளியே காட்டாது அமைதியாக, விஜேவீர

"நீங்கள் கண்டியிலிருந்தா வருகிறீர்கள்..?" எனக் கேள்வி எழுப்பினார்.

அது வரை இந் நபர் விஜேவீர தானா என்ற சந்தேகம் இருந்த படையினருக்கு இந்த கேள்வியும் அதன் தொணியும் தமது இலக்கு சரிதான் என்பதை நிருபித்தது.

"நான் உங்களோடு வந்து விடுகிறேன் எனது குடும்பத்தவரை எதுவும் பண்ணி விடாதீர்கள்...." என்று கூறி விஜேவீர இராணுவத்தினரின் யு.ஹ.368 இலக்க வாகனத்தில் ஏறினார். விஜேவீர இருந்த வாகனத்துக்கு முன்னும் பின்னுமாக ஐந்து வாகனங்களில் படையினர் சென்றனர்.

வாகனம் கொழும்பு ஹெவ்லொக் டவுனில் அமைந்துள்ள ஒப்பரேஷன் கம்பைன்ஸ் தலைமையகத்தை அடைந்தது.

### சித்திரவதை தொடக்கம்.

அன்று இரவு முழுவதும் விஜேவீர சித்திரவதைக்குட்படுத்தப்பட்டார். எஞ்சியவர்கள் இருக்குமிடத்தைச் சொல்லுமாறு வற்புறுத்தினர். உண்மையில் விஜேவீரவுக்குக் கூட ஏனையோரின் இருப்பிடங்கள் அனைத்தும் தெரிந்திருக்கவில்லை. இரவு 12.45 அளவில் இரு படையினர் விஜேவீரவின் குடும்ப புகைப்படமொன்றைக் கொண்டு வந்து கொடுத்தனர். இப்போதோ அடையாளம் கண்டு பிடிக்க முடியாதவகையில் தாடி மீசையில்லாமல் இருந்தார் விஜேவீர. அடுத்த நாள் காலை 9.30 அளவில் விஜேவீரவின் விரல் ரேகைகள் பரீட்சிக்கப்பட்டடு அதன் முடிவு கிடைத்திருந்தது. அன்று முழுவதும் சித்திரவதை தொடர்ந்தது. இதன் போது தான் ஜே.வி.பி.-யின் மத்திய குழு உறுப்பினர்களான கமநாயக்கவின் இருப்பிடத்தையும் ஏனையோரது விபரங்களையும் விஜேவீர வெளியிட்டார் என அரச யந்திரத்தின் காவல் நாய்களான தேசிய பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்த போதும் அது பொய் என்பது பின்னர் தான் பலருக்குத் தெரிய வந்தது. கமநாயக்க பிடிபட்டிருந்த போது பாதுகாப்பமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன வெளியிட்ட செய்தியிலும் கமநாயக்கவை விஜேவீர தான் காட்டிக் கொடுத்ததாக தெரிவித்திருந்தார். (15-11-1989 தினமின)

### பிரேமதாசவின் உத்தரவு

இறுதியாக, மேஜர் ஜெனரல் சிசில் வைத்தியரத்ன, பிரிகேடியர் சானக பெரேரா, பிரிகேடியர் லக்கி அல்கம, பிரிகேடியர் ஜயசுந்தர, கேர்ணல் பலகல்ல, மேஜர் தோரதெனிய, மேஜர் உடுகம்பொல, கெப்டன் கபூர் ஆகியோர் விஜேவீரவை என்ன செய்வது என்பது [illegible]க் கலந்துரையாடினர். பின்னர் [illegible]ப் பற்றி ரஞ்சன் விஜேரத்னவுடன், சிசில் வைத்தியரத்னவும் வேறு சில அதிகாரிகளும் கலந்துரையாடினர். இது பற்றி கெசல்வத்தை (வாழைத்தோட்டத்தில்)யில் ஜனாதிபதியின் சொந்த வீட்டில் இருந்த ஜனாதிபதி பிரேமதாசவுடன் தொடர்பு கொண்டு முடிவைக் கேட்டனர். அரசியல் ரீதியில் ஏற்படும் பிரச்சினைகளை தான் கவனித்துக் கொள்வதாகவும் நேரத்தைக் கடத்தாமல் உடனடியாக விஜேவீரவை முடித்து விடும் படியும் கெசல்வத்தையிலிருந்து தகவல் வந்தது.

அதன்படி விஜேவீரவை கொல்லும் பொறுப்பை பிரதிப் பொலிஸ் மா அதிபர் கபூர், கேர்ணல் தோரதெனிய மற்றும் லெப்டினென்ட் கேர்ணல் ஒருவருக்கும் அளிக்கப்பட்டது.

அதுவரை விஜேவீர பிடிபட்ட தகவல் முழுவதும் ரகசியமாக வைக்கப்பட்டிருந்தது. கேள்விகள் பல கேட்கப்பட்டன. அவற்றுக்கு அமைதியாக பதிலளித்தார் விஜேவீர. இறுதியில் ஒரு கடதாசியை வாங்கித் தனக்குள் படித்தார். பின் அதிலுள்ளபடி வீடியோ முன்னிலையில் உரையாற்றப் பணிக்கப்பட்டார். மீண்டும் கேள்விகள் கேட்கப்பட்டன. "கமநாயக்க எங்கே?" என கேட்ட கேட்டபோது.

"அப்படியான கேள்விகள் கேட்பது அர்த்தமற்றது" என விஜேவீர பதிலளித்தார். அன்றிரவு 10.45 வரை கேள்விகள் கேட்கப்பட்டன. அப்போது பாதுகாப்பமைச்சர் ரஞ்சன் விஜேரத்னவும் வந்து சேர்ந்திருந்தார். 15 நிமிடங்கள் ரஞசன் விஜேரத்ன அவருடன் உரையாடியிருக்கிறார்.

### விஜேவீர பிரிந்தார்.

விஜேவீரவை யு.ஹ.601 இலக்க இராணுவ வாகனம் ஏற்றிக்கொண்டு புறப்பட்டது. பொரல்லையில் காசல் வீதிக்கு அருகில் உள்ள கோல்ப் மைதானத்தில் இலக்கம் 6 குழியருகில் வாகனம் வந்து தரித்தது.

பெரிய மரத்தினடியில் ரோகன விஜேவீர கொண்டு செல்லப்படடார். தனக்கு என்ன நடக்கப்போகிறது என்பதை அவர் அறியாமலிருக்க நியாயமில்லை.

"இவனை உயிரோடு கொளுத்துவோம்" என ஒரு படையினன் கூறினான்.

"இறுதியாக என்ன சொல்ல விரும்புகிறாய், மரண பயம் உன்னை ஆட்கொள்ளவில்லையா...?"

"இல்லை அப்படியொன்றையும் உணரவில்லை. நான் எப்போதும் மரணத்தை எதிர்பார்த்துக் கொண்டு தான் எனது கடமைகளை செய்து வந்திருக்கிறேன். எனது மரணம் எப்போது எங்கே நடக்கும் என்பதை மட்டும் தான் அறியாமல் இருந்தேன்...."

தன்னால் எதிர்த்தாக்குதல் நடாத்த முடியாத நிராயுதபாணியாக இருக்கும் நிலையில், சில மணி நேரங்களுக்கு முன்னர் வரை அடி உதை போன்ற வதைகளுக்கு முகம் கொடுத்த நிலையில், அந்த வலி கூட மாறுமுன்னர் தனது இறுதி நேரம் கிட்டிவிட்டது என்பதை தெரிந்த நிலையிலும் - ஆயுதமுனையில் அளிக்கப்பட்ட இந்த பதில் நிச்சயம் அந்த கொலைஞர்களைக் கூட ஆச்சரியப்பட வைக்காமல் இருக்க முடியாது.

கைத்துப்பாக்கியை எடுத்து முதலாவதாக சுட்டவன் கபூர், விஜேவீர அப்படியே சாய்ந்தார். துடிதுடித்துக் கொண்டிருந்தார்.

"ஹாங்...ஹாங்... டக்கென்று முடி..."

சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் ஆணை பிறப்பிக்கப்பட்டது. தோரதெனிய தனது கைத்துப்பாக்கியால் விஜேவீரவின் நெஞ்சை தோட்டாக்கள் முடியும் வரை சுட்டுத் தள்ளினான். ரோகன விஜேவீர துடிதுடித்துக் கொண்டிருந்தார். விடியற்காலை 3.00 மணிக்கு அந்த உடல் மைதானத்தக்கு பின்னால் அமைந்திருந்த பொரல்லை கனத்தை மயானத்துக்கு அதே வாகனத்தில் எடுத்துச் செல்லப்பட்டது. ஏற்கெனவே அந்த வானத்தில் எச்.பீ.ஹேரத்தின் பிரேதமும் கிடந்தது.

இரண்டு பிரேதமும் பொரல்லை மயானத்தில் கேஸ்ஸில் எரிக்கப்பட்டன. எரிக்கும் கருவிக்கு விஜேவீரவின் உடல் தூக்கிப் போடப்பட்டபோது அவரது உயிர் முற்றாக போயிருக்கவில்லை.

### அரசின் பொய்ப் பிரச்சாரம்

விஜேவீரவை இத்தனை பயங்கரமாக, இரகசியமாக படுகொலை செய்த அரசாங்கம், விஜேவீரவை நவம்பர் 10ஆம் திகதியே கைது செய்திருந்த போதும், விஜேவீரவை கொலை செய்த அடையாளங்கள் முழுவதையும் அழித்ததன் பின்னர் தான் (13ஆம் திகதி) அது பற்றிய தகவலை அறிவித்தது. 14ஆம் திகதியன்று சகல பத்திரிகைகளிலும் இதுபற்றிய தலைப்புச் செய்திகள் வெளியிடப்பட்டிருந்தன. பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன பத்திரிகையாளர் மாநாட்டை கூட்டி இத்தகவல்களை வெளியிட்டிருந்தார். அத்தகவல்கள் அடுத்த நாள் பத்திரிகைகளில் பின்வருமாறு வெளியிடப்பட்டிருந்தன.

" மக்கள் விடுதலை முன்னயின் தலைவர் ரோகண விஜேவீர நேற்றைக்கு முன்தினம் கம்பொலஉலபனவில் உள்ள அவரது வீட்டில் வைத்து கைது செய்யப்பட்டு கொழும்பிலுள்ள ஜே.வி.பி.யின் தகவல் மத்திய நிலையத்தை காட்டுவதற்கு வந்து கொண்டிருந்த போது அதே வாகனத்தில் கொண்டு வரப்பட்ட எச்.பீ.ஹேரத் படையினரின் துப்பாக்கியைப் பறித்து விஜேவீரவை சுட்டுக் கொன்றார். ஹேரத்தை படையினர் சுட்டதில் ஹேரத்தும் கொல்லப்பட்டார். அவசரகால சட்டத்தின் கீழ் அவர்களது இறுதிக் கிரியைகள் இராணுவத்தால் செய்து முடிக்கப்பட்டது." இதன் மூலம் அரசாங்கம் "விஜேவீரவை பிடித்து விட்டோம். அவர் தனது ஏனைய தோழர்களை அரசாங்கத்துக்கு காட்டிக்கொடுக்க முயற்சித்த போது அவரது தோழர் ஒருவராலேயே கொலை செய்யப்பட்டார். நாங்கள் கொல்லவில்லை." என்பதையே சாதிக்க விரும்பியது. ஆனால் பொதுவாக அரசின் இந்த கூற்றை பொது மக்கள் நம்பியிருக்கவில்லை.

விஜேவீர கொல்லப்பட்ட இரகசியம் முதன் முதலில் பாராளுமன்றத்தில் தான் அம்பலமானது. ஆனால் அதனையும் பல வதந்திகளில் ஒன்றென்றே பலர் கருதினர்.

### கொலை பற்றி பாராளுமன்றத்தில்...

1990 ஜனவரி 12ஆம் திகதி பாராளுமன்றத்தில் ஹலீம் இஷாக் எம்.பி. பாதுகாப்பு அமைச்சரை நோக்கிப் பின்வரும் கேள்விகளை கேட்டார்.

"..நீங்கள் அவரைக் கொன்றீர்கள். கோல்ப் மைதானத்திற்கு கொண்டு வந்தீர்கள். 3.30 அளவில் இலக்கம் 6 கோல்ப் குழியினருகில் வைத்து கொன்றீர்கள்..."

"அப்படியென்றால் நீங்கள் நாட்டின் பாதுகாப்புத்துறையின் அறிக்கையை நம்பவில்லையா..." என ரஞ்சன் விஜேரத்ன கேட்டார்.

"நீங்கள் விஜேவீரவைப் பிடித்து ஒப்பரேஷன் கம்பைன்ஸ் தலைமையகத்துக்கு கொண்டு வந்து விசாரித்து விட்டு, கொன்ற விடயங்கள் பொய்யில்லை... மோடல் பாம் வீதியில் வதியும் கோல்ப் கிளப் ஊ யர்கள் இச்சம்பவத்தைக் கண்டுள்ளனர் "என்றார். இதே விடயத்தை ஏற்கெனவே (1989 டிசம்பர் 4ஆம் திகதி) தகவல் குறைவாக என்றாலும் லக்ஷ்மன் ஜயக்கொடியும் அரசை நோக்கி கேள்வி எழுப்பியிருந்தார். (ஹன்சார்ட் - டிசம்பர் 4 1989 பக்கம் 933, 934, 1990 ஜனவரி 12 . பக்கம் 556-569)

ஜே.வி.பி. 1994 இன் பின்னர் மீண்டும் பகிரங்க அரசியலுக்கு வந்ததிலிருந்து இது வரை விஜேவீரவின் கொலை பற்றிய உண்மைகளை வெளிக் கொணரவென ஒரு ஆணைக்குழு விசாரணையை ஆரம்பிக்குமாறு பல தடவைகள் அரசாங்கத்தைக் கோரியிருந்தது. ஆனால் இது வரை அப்படி எதுவும் விசாரிக்கப்படவில்லை. மேஜர் ஜெனரல் கொப்பேகடுவ, ஸ்ரீமணியின் கணவர் லலித் அத்துலத் முதலி, ஜனாதிபதி சந்திரிகாவின் கணவர் விஜேகுமாரணதுங்க ஆகியோர் கொல்லப்பட்டமையை விசாரிக்கவென ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்ட போதும், அரசியல் இயக்கமொன்றின் தலைவரது ரகசியம் நிறைந்த படுகொலையை விசாரிக்க எந்த விசாரணையும் மேற்கொள்ளாதது ஏன்? ஜனாதிபதி சந்திரிகா, ஜனாதிபதித் தேர்தலின் போது தனது பிரச்சாரத்துக்கென தனது புகைப்படத்துடன் விஜேவீர, விஜயகுமாரணதுங்க, கொப்பேகடுவ, பிரேமதாச என எல்லோரது புகைப்படங்களையும் போட்டு போஸ்டர் ஒட்டியிருந்தார். தான் ஆட்சிக்கு வந்தால் இவர்கள் கொல்லப்பட்டமை பற்றி விசாரணை செய்வதாகவும் வாக்குறுதி அளித்திருந்தார். இன்று ஏனைய அனைத்து வாக்குறுதிகளைப் போலவே இதுவும் போலி வாக்குறுதியாகப் போனது.

ஆனால் இந்த அரசாங்கமும் இன்று ஜே.வி.பி.யின் நடவடிக்கைகளை ஆராய்வதற்கென விசேட பிரிவொன்றை 1995ஆம் ஆண்டு உருவாக்கி ஜே.வி.பி.யின் நடவடிக்கைகள் பற்றியும் அதன் அங்கத்தவர்கள் குறித்தும் தகவல் சேகரித்து வருகிறது. இதில் வேடிக்கை என்னவென்றால் தற்போதைய ஜே.வி.பி.யின் பிரச்சார செயலாளர் விமல் வீரவங்ஷ "இனி ஒரு போதும் ஜனநாயக பாதையை விட்டு விலகிப் போவதில்லை என்றும் பாராளுமன்ற வழிமுறையில் தாங்கள் இயங்கவே விரும்புவதாகவும் கருத்து வெளியிட்டிருக்கிறார். இது ஒரு வித தந்திரோபாய கருத்தாக இருந்தாலும் யாருக்கு தந்திரோபாயம் என்ற கேள்வி எழுகின்றது. (அரசுக்கு இந்த பாட்சா எல்லாம் பலிக்காது.) மக்களுக்கு தமது வேலைத்திட்டம் பற்றி என்ன கூறப் போகிறார்கள் என்பதும், என்ன அடிப்படையில் அணிதிரட்டப் போகிறார்கள் என்றும் கேள்வி எழுகின்றது. கொல்லப்பட்ட ஆயிரக்கணக்கான கட்சித் தோழர்கள் தங்களை தியாகம் செய்தது எதற்கு என்ற கேள்விக்கு ஜே.வி.பி.யால் என்ன பதில் கூற முடியுமோ தெரியாது?

-கோமதி



முன்னாள் மிலிட்டரி பொலிஸைச் சேர்ந்த படப்பிடிப்பாளர் இந்திரானந்த டி சில்வாவால் எடுக்கப்பட்ட புகைப்படம்.



அப்புகைப்படம் ஓவியர் ஒருவரிடம் கொடுக்கப்பட்டு தாடி மீசை என்பவை வரையப்பட்டு விஜேவீர என நிரூபிக்கப்பட்ட புகைப்படம் இது

## ரகசியம் வெளியிட்ட படையினன்!

ராகுபத்த கங்கானம்கே இந்திரானந்த டி சில்வா என்பவர் தான், விஜேவீரவை இறுதியாக படமெடுத்தவர். இராணுவப் பொலிஸ் (military police) ஐச் சேர்ந்த இவர், அக்காலப்பகுதியில் படையினரால் கொல்லப்பட்ட இளைஞர்கள் பலர் கொல்லப்படுவதற்கு முன்னரும் கொல்லப்பட்டபின்னரும் புகைப்படம் எடுக்க வேண்டியது இவரது கடமை. பிற்காலத்தில் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னவை கொல்ல சதித்திட்டம் தீட்டினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் 15 வருட சிறைத்தண்டனையை அனுபவித்து வருபவர். கடந்த வருடம் நவம்பர் மாதம் 29ஆம் திகதியன்று அவர் வழக்கறிஞருக்கூடாக ஒரு வாக்குமூலத்தை வெளியிட்டிருந்தார். அவ்வாக்குமூலத்தில் பல உண்மைகளை வெளியிட்டிருந்தார்.

"...அன்று 1989 நவம்பர் 12ஆம் திகதி. நான் தூங்கிக் கொண்டிருந்த போது 11 மணியளவில் எமது படையைச் சேர்ந்த கப்டன் ஒருவர் வந்து என்னை எழுப்பினார். ஒரு அவசர கடமைக்காக ரகசியமாக தன்னுடன் புறப்பட்டு வரும்படியும். வெளியில் வாகனம் நிற்பதாகவும் கெமராவை எடுத்துக்கொண்டு வரும்படியும் கூறினார். அந்த முகாமிலிருந்து ரகசியமாக நாங்கள் இருவரும் வெளியேறினோம். தற்போதைய பணி குறித்து எந்த ஒரு போதும் வாய் திறக்காதிருக்கும்படியும் உத்தரவிட்டார். கொழும்பு திம்பிரிகஸ்யாயவில் அமைந்தள்ள ரகசிய நடவடிக்கை இணைப்பு செயலகத்தை அடைந்தோம். மேல் மாடியில் சிரேஷ்ட அதிகாரிகள் 15 பேர் அளவில் கூடியிருந்தனர். கைது செய்யப்பட்டிருந்த நபரொருவரும் மேல்மாடியில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். அவர் அளிக்கும் வாக்குமூலமும் வீடியோவில் பதிவாகிக்கொண்டிருந்தது. அப்போது தான் நான் தெரிந்து கொண்டேன் அவர் வேறு யாருமல்ல, ஜே.வி.பியின் தலைவர் ரோகண விஜேவீர என்பது. அதன் போது நான் அவரைப் பல கோணங்களில் எட்டுப் புகைப்படங்கள் எடுத்தேன். வீடியோ செய்து கொண்டிருக்கும் போதே அதிகாரிகள் அவரிடம் கேள்விகள் கேட்டுக் கொண்டிருந்தனர். அவர் அதற்கு அவருக்கேயுரிய முறையில் பதிலளித்துக்கொண்டிருந்தார். பல கொலைகளுடன் எவ்வாறு தமது கட்சித் தோழர்கள் வீணாக குற்றஞ்சாட்டப்படுள்ளனர் என்பதை விளக்கினார். ஐ.தே.கவின் திட்டமிட்ட செயற்பாடுகள் தம்மை தலைமைறைவுக்கு இட்டுச் சென்றதைப் பற்றியும் விரிவாக விளக்கினார். இதே வேளை நான் அதே கட்டிடத்தில் கீழ் தளத்தில் இன்னும் ஒரு நபரை புகைப்படம் எடுத்துக்கொண்டிருந்தேன். அவர் தான் ஜே.வி.பி.யின் அரசியல் பிரிவைச் சேர்ந்த எச்.பீ.ஹேரத். மிகவும் வதைபுரியப்பட்ட நிலையில் இருந்த அவரை புகைப்படம் எடுக்க மிகவும் சிரமப்பட்டேன். அவரது உடலை ஒழுங்காக நிறுத்தி வைக்கக் கூட சிரமப்பட்டோம்.

சில மணி நேரத்துக்குப் பின் விஜேவீரவின் கண்களும் கைகளும் கட்டப்பட்டு வாகனத்தில் ஏற்றப்பட்டு பொரல்லையில் காசல் வீதிக்கருகிலுள்ள கோல்ப் மைதானத்திற்கு கொண்டு செல்லப்பட்டார்."

நியாயமான விசாரணைக் கமிஷன் ஒன்று அமைக்கப்பட்டு விசாரணை செய்யப்படும் பட்சத்தில் இவ்வுண்மைகளை தான் வெளியிடத் தயாராக இருப்பதாகவும், பல புகைப்படங்கள் அடங்கிய ஆதாரங்கள் பலவற்றையும் அப்போது தான் ஒப்படைப்பதாகவும் இவர் தெரிவித்திருக்கிறார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# குழந்தைகளுக்கும் உங்களுக்குமிடையே... 43

### திடீர் காயங்கள்

திடீரென நடைபெறுகின்ற மாறுதல்கள் அவர்களது ஆளுமையில் தாக்கத்தை ஏற்படுத்தும் விதத்தில் அமையாவிட்டாலும் கூட பலத்த அறிகுறிகளை அவர்களிடமிருந்து வெளிப்படுத்துகின்றன. ஒரு குழந்தை வீடு தீப்பிடிக்கும்போதோ, ஒரு கார் விபத்தின்போதோ அல்லது தெரிந்த ஒருவரின் மரணத்தின் போதோ மட்டு மீறிய பதகளிப்பைக் காட்டலாம். இதனால் அது விசித்திரமான அறிகுறிகளை வெளிப்படுத்தக்கூடும்.

இவற்றுக்கு உடனடியாக சரியான வைத்தியம் அவசியம். ஒரு திடீர் அழிவுகாரணமாக ஏற்படும் பதகளிப்பானது புரிந்துணர்வு கொண்ட பெரியவர் ஒருவர் அருகில் இருப்பதன் மூலமாக இல்லாமல் செய்யப்படலாம். அப்போது குழந்தை அச்சம் பவத்தையும், நினைவுகளையும் தனது விளையாட்டுப் பொருட்களுடன் சேர்ந்து சொற்களால் மீள நிகழ்த்திக் காட்டக் கூடியதாக இருக்கும்.

ஃபிராய்ட் 'போர்க்காலக் குழந்தைகள்' என்ற தனது புத்தகத்தில், லண்டனில் நடந்த குண்டுவீச்சின் போது குழந்தைகளும் பெரியவர்களும் தமது எதிர்வினைகளைக் காட்டிய விதத்தின் வேறுபாடுகளை விபரிக்கின்றார். ஓரிரவு நடைபெற்ற குண்டு வீச்சுக்குப் பிறகு பெரியவர்கள் தமது அனுபவத்தை திரும்பச் திரும்பச் சொல்வதற்கு உந்தப்பட்டார்கள். இதே அனுபவங்களுடன் இருந்த சிறுவர்களோ மிகவும் அரிதாகவே இதைப் பற்றிப் பேசினார்கள். அவர்களது அச்சமும், பரபரப்பும் அவர்களது விளையாட்டுக்கள் மூலமாக வெளிப்பட்டன. அவர்கள் தாம் கட்டிய வீடுகளின் மீது குண்டுகளைப் போட்டார்கள். அவர்களது விளையாட்டுக்களில் சைரன்கள் ஊதின, தீப்பிடித்து எரிந்தது. அம்புலன்ஸ் வண்டிகள் காயப்பட்டவர்களை ஏற்றிச்சென்றது. கிட்டத்தட்ட ஒருவார காலத்திற்கு அதிர்ச்சியும் பயங்கரமும் கலந்த உணர்வுகளுடன் அவர்கள் விளையாடினார்கள். இவ்வாறான குறியீட்டு ரீதியிலான அவர்களது நீண்டநாள் விளையாட்டுக்குப் பிறகுதான் அவர்கள் அவற்றைப் பற்றிப் பயமோ பங்களிப்போ இன்றிப் பேசத் தொடங்கினார்கள்.

மிகவும் அவசியமான உதவி தேவைப்படும் இந்த நேரத்தில், உளவியற் சிகிச்சையானது பொருத்தப்பாடான ஒழுங்கமைப்பையும் பொருத்தமான பொருட்களையும் அனுதாபத்துடன் செயற்படவல்ல ஒரு வளர்ந்தவரையும் வழங்குகிறது. சிகிச்சையாளர் குழந்தையை ஆறுதல் பெறச் செய்கிறார்.

விளையாட்டுக்கள் மற்றும் சொற்களின் மூலமாக அந்த அச்சமூட்டும் சம்பவத்தை குழந்தைகள் இயல்பாக தம்முள் செரித்துக்கொள்ளவும் பதகளிப்பு அற்றவர்களாக மாறவும் உதவுகிறார்.

### வகையமாதிரியற்ற குழந்தை:

ஒரு குழந்தை நம்பமுடியாத இயல்புகளை வெளிப்படுத்துகிறதாயின் அப்போது குழந்தை உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டிருக்கிறதா என்று பரீட்சித்துப்பார்ப்பதற்கான நிபுணத்துவ கலந்தாலோசிப்பு அவசியமாகும். மிகவும் அதிகமாகப் பாதிக்கப்பட்ட குழந்தை மற்றைய குழந்தைகளிடமிருந்து பளிச்சென தெரியும் விதத்தில் மாறுபட்டிருக்கும். அது முற்றாக பின்வாங்கும் இயல்புடையதாகவும், தன்னைச் சுற்றி கவசமிடடுக்கொண்டதாகவும் இருக்கும். அது தனது சொந்த வீட்டிலேயே ஒரு அந்நியனைப்போல நடந்து கொண்டிருக்கும் அது தான் ஒரு விடயத்திற்காக யாரையும் அணுகாமல் தன்னை யாராவது அணுகினால் கூட கோபத்துக்கோ, நட்புக்கோ எந்த வித்தியாசமும் காட்டாததாக இருக்கும். அதனுடைய கவனமற்று இருத்தலில் எந்த மாற்றமும் இருக்காது. எதையும் ஆர்வத்துடன் கவனிக்காது. சந்தோசத்தில் வெறும் புன்னகையைக் கூட காட்டமால் இருக்கும். தனது துயரம் குறித்து ஒரு வித வெளிப்பாடுகளையும் அது வெளிப்படுத்தாது.

தாயாரிடமிருந்து பிரிக்கப்படும் போது அது உணர்ச்சி அற்றதாக தனது கையைப் பிடித்துக்கொண்டு செல்பவரோடு அவர் யாராக இருப்பினும் அமைதியாகப் பின் தொடரும். அல்லது எல்லைமீறிய அச்சத்துடன் தாயாரைக் கட்டிக்கொள்ளும். தாயாரிடமிருந்து பிரிப்பது என்னவோ கொல்லக்கொண்டுபோவது போல அது தனது அச்சத்தை வெளிக் காட்டும். மற்றச் சிறுவர்களும் அழக் கூடும். ஆனால் அந்த அழுகை தட்டிக் கொடுத்து அணைக்கும்போது குறைந்து விடும். வகைமாதிரியற்ற குழந்தையின் அழுகை கட்டுப் படுத்தமுடியாததாக வித்தியாசமான அணுகுமுறைகளால் அது பாதிப்படையாததாக இருக்கும்.

வகைமாதிரியற்ற குழந்தை தன்னைச் சூழவுள்ள உலகம் குறித்து எந்த ஞாபகமும் அற்றதாக இருக்கும். அது ஒரு குறிப்பிட்ட நிலையிலேயே நீண்ட நேரத்திற்கு தொடர்ந்தும் இருக்கும். அல்லது முன்னும் பின்னுமாக கதிரையில் ஆடிக்கொண்டிக்கும். அதன் பிரதான கவனமானது அதன் உடல் பற்றியதாகவே இருக்கும். எத்தகைய நாகரீகத்தையும் காட்டாமல் அது பலர் முன்னிலையில் கைமைதுனம் செய்யலாம்; பகிரங்க இடத்தில் சலம் கழிக்கலாம். இவற்றால் அது எந்தவிதமான தர்மசங்கடத்திற்கும் உள்ளாவதில்லை. அது தனது மூக்குச் சளியை சாப்பிடவோ, தன் மீதோ பிறர் மீதோ அழுக்கைப் பூசிக்கொள்ளவோ கூடும். அது சாப்பிடக்கூடிய, சாப்பிடத்தகாத பொருட்கள் என்ற வேறுபாட்டை காணமுடியாமல் இருக்கும். எந்த வேறுபாடும் இன்றி எல்லாவற்றையும் வாயினுள் போடும். அது மண்ணையோ, மட்களியையோ சாப்பிடக்கூடும். அல்லது குப்பைகளை அள்ளிவாயில் போட்டுக் கொள்ளக்கூடும். மற்றைய சிறுவர்களும் சோக்கை, களியை வாயிற் போட்டு பரீட்சித்துப் பார்ப்பதுண்டு. ஆனால் அவர்கள் அதைத்தொடர்ந்து செய்வதில்லை.

இத்தகைய வகைமாதிரியற்ற குழந்தை ஒரேவேலையை திரும்பத் திரும்ப பல மணிநேரங்களாகச் செய்து கொண்டிக்கக்கூடும். அது ஒரு துண்டு நூலைத் திரும்பத்திரும்ப சுற்றிக் கொண்டோ, மேசை இழுப்பறையை திரும்பத் திரும்ப திறந்து மூடிக் கொண்டோ, தனது தலைமூடியை சுருட்டிக்கொண்டோ தனது காதைப் பிடித்து இழுத்துக்கொண்டோ அல்லது சுவர் வெடிப்பொன்றினுள் தனது விரலைத் தொடர்ச்சியாகப் புகுத்திக் கொண்டோ இருக்கும்.

ஒரே மாதியான அலுப்பூட்டும் வேலைகளில் அது ஆர்வத்துடன் ஈடுபடும். ஒரு சில்லைச் சுற்றிக் கொண்டும், ஆளியை (Switch) திரும்பத்திரும்ப போடுவதும், நிறுத்துவதுமாக செய்து கொண்டிருக்கும். அல்லது கதவின் கைப்பிடியை பின்னுக்கும், முன்னுக்குமாக ஆட்டிக் கொண்டிருக்கும். அது 'பில்டிங் புளொக்குகள்' (Building blocks) சிறுவிதைமணிகள் என்பவற்றுடன் விளையாடுவதை அதிகம் விரும்பும். அத்துடன் அவை ஒரே ஒழுங்கிலும் வடிவிலும் திருத்தமாக அடுக்கப்பட வேண்டும் என்பதில் மிகவும் தீவிரமாக இருக்கும். அதற்கு தன்னுடைய விளையாட்டுப் பொருட்கள் எங்கே இருக்கின்றன, எவ்வளவு பொருட்கள் இருக்கின்றன என்பது குறித்து ஒரு அசாதாரண ஞாபகசக்தி இருக்கும். அவை தொலைந்து போனாலோ, உடைந்தாலோ அது மிகவும் அதிகமான கவலைக்குள்ளாகும். பொருட்கள் பழைய நிலைக்கு கொண்டு வரப்படும் போது அதன் அழுகையும் வெறியும் திடீரென்று நின்று விடும்.


ஒரு வகைமாதிரியற்ற குழந்தை தன் உடல் ரீதியான உபாதைகட்கு புதுவிதமான எதிர்வினைகளை வெளிப்படுத்துகிறது. அது எந்தவிதமான முறைப்பாடும் செய்யாமல் தனக்குத் தானே மிகவும் மோசமான காயங்களை ஏற்படுத்தும். தனது தலையை சுவருடன் மோதியோ, தனது விரலை கதவிடுக்குக்குள் வைத்து நெரித்தோ அல்லது சூடான 'றேடியேற்றர்' மீது இருந்தோ அல்லது இரத்தம் வரும் வரை தனது கையை வெட்டியோ, தன் எதிர்வினையைக் காட்டுகிறது. தனது உபாதைகளுக்கான அதன் ஒரே எதிர்வினை ஒரு விசித்திரமான பல்லிளிப்பாகவோ அல்லது வெற்றுச் சிரிப்பாகவோ இருக்கும். அதன் மீது அனுதாபம் காட்ட எடுக்கும் முயற்சிகட்கும், அது எந்த விதமான கணிப்பையும் வழங்க மாட்டாது.


அக்குழந்தை பேசப்படுகின்ற போதும் அது மற்றவர்களுடன் பேசுவதில் ஆர்வமற்றிருக்கிறது. பேசும்போதும் கூட சம்பந்தா சம்பந்தமற்ற விதத்தில் நிலைமைக்குச் சற்றும் பொருத்தமில்லாததாக சொற்றொடர்களைப் பாவிக்கும். நேரடியாகக் கேள்வி கேட்கப்படும் போது குழந்தை கிளிப்பிள்ளையைப்போல கேள்வியைத் திரும்பத் திரும்பச் சொல்வதாகவே இருக்கும். அல்லது அந்தப் பேச்சுக்களையும் பேசாததாய் எந்தவித தூண்டுதல்கட்கும் எந்த எதிர் வினையையும் வெளிப்படுத்தாததாக இருக்கக்கூடும்.

(வரும்)

## வகைமாதிரியற்ற குழந்தை!

டொக்டர் ஜெயிம் ஜி ஜினோல்ட் தமிழில். அருண்





## எட்டாவது பேய்

என் அயலவரே என் அயலவரே
தொப்பி முட்டாக்குள் சுடர்ந்த ஞாயிறுகளே
மண் விளையாடி மகிழ்ந்த நிலாக்களே
தொட்டில்கள் தோறும் சிரித்த விண்மீன்களே
பல்லின மலர்களால் பின்னப்பட்ட
எங்கள் ஈழத்தமிழ் மண் கிழிந்து
புண்பட உம்மை பிய்த் தெறிந்தனரே
வழி தவறி எமது பிள்ளைகள்.

அன்று நாங்கள் மௌனமாய் இருந்தோம்.
முதல் நாள் குதூகலமும்
இறுதி நாளின் இரத்தக் கண்ணீரும்
ஒட்டியிருந்த உங்கள் தெருக்களில்
மறுநாள் நரிகளைப் போல நாம் நுளைந்தோம்
உங்கள் வீட்டையே திருடிக் கொண்டோம்.
உங்கள் பிள்ளைகளின் உணவைப் புசித்தோம்.
உங்கள் தொழுகைப் பாயில் புணர்ந்தோம்.
மீசான் கட்டையில் அடுப்பு மூட்டினோம்
எச்சில் கைகளைத் துடைப்பதற்காக
உங்கள் புனித நூல்களைக் கிழித்தோம்.
பாங்கொலியின்றி விடிந்த அவ்விரவில்
தேவதைகள் தொலைந்து போயின
பன்னிரு கைகளை வீசிய படிக்கு
ஏழுபேய்கள் அதன் பின் வந்தன

தொடர்ந்து வந்த ஏழு பேய்களுள்
ஆறாவது பேய் எம்மீது பாய்ந்தது
நீங்கள் அல்லல்பட்டு ஆற்றாது
அழுது கண்ணீர் பெய்த
பாதைகள் தோறும் நாங்களும் ஓடினோம்
அறுவடை செய்த முட்களைச் சுமந்து.

இதொ வருகிறது எட்டாவது பேய்
இது நமது முடித் தலைகளை உருட்டு முன்
இது நமது இளவரசர்களின்
புதை குழிகளிலே மண் அள்ளிப் போடுமுன்
இது நமது கவிதையை அழித்து
ஒப்பாரிகளை காற்றில் எழுதுமுன்
இது நமது காவியப் பெருமையை
காலத்தின் குப்பைக் கூடையுள் வீசுமுன்...
மன்றாடுகிறேன்...
எம் அயலவரே எம் அயலவரே
ஆறு வேளைப் பாங்கொலியோடு
திரும்பி வந்தெமைக் காப்பாற்றுங்கள்.

வ.ஐ.ச. ஜெயபாலன்

www.tamilarangam.net





# மங்களவின் இனவாதமும், பெண்நிலை எதிர்ப்பும்!

வெள்ளிப் பதக்க வீராங்கனை சுசந்திக்கா தொடர்பு சாதனங்களில் வெளியிட்டு வரும் தகவல்கள் விளையாட்டு துறை அமைச்சை கதிகலங்க வைத்துள்ளன. விளையாட்டுத்துறை அமைச்சின் உயரதிகாரிகள் அவரை பாலியல் ரீதியான இம்சைகட்கு உள்ளாக்கியிருப்பதாகவும், அமைச்சின் உயரதிகாரி ஒருவர் தன்னைத் திருமணம் செய்யுமாறு வற்புறுத்தியதாகவும், அவர் அதை மறுத்ததன் காரணமாக அவருக்கும், அவரது கணவருக்கும் எதிராகப் பரவலான அவமானப் படுத்தும் தாக்குதல்கள் வெளியிடப்பட்டு வருவதாகவும் கூறியுள்ளார். 1993ல் நடந்த கொலை ஒன்று சம்பந்தமாக குற்றம் சாட்டப்பட்டிருந்தவர்களில் ஒருவரான சுசந்திக்காவின் கணவர் தம்மிக்க நந்தசிறி மீது திடீரெனப் பாணந்துறை நீதிமன்றத்தின் கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது. அவர் சுசந்திக்காவுடன் புறுணைக்கு சென்று விடக் கூடும் என்ற பொலிசாரின் சந்தேகம் காரணமாக அவரது கடவுச்சீட்டு நீதிமன்றத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

நந்தசிறியை விவாகரத்துச் செய்து விட்டு தன்னைத் திருமணம் செய்யுமாறு கோரிய விளையாட்டுத்துறை உயர்மட்டத்தவரது கோரிக்கையை அவர் மறுத்ததே அவரது பல பிரச்சினைகட்குக் காரணமாக இருந்ததென்று கூறினார் சுசந்திக்கா.

''இவளுடன் பாலியலுறவு வைத்திருக்க யார் தான் விரும்பியிருக்கப் போகிறார்கள்? ஏனென்றால் இவள் ஒரு தென்னாபிரிக்க கறுப்பனைப் போலல்லவா இருக்கிறாள்'' என்று இந்த விவகாரம் தொடர்பாக கருத்து வெளியிட்டிருக்கிறார் அமைச்சர் மங்கள சமரவீர. அமைச்சர் ஒருவர் இவ்வாறான கீழ்த்தரமான விதத்தில் இனவெறி நிறைந்த கருத்தொன்றை தெரிவித்தது முழு நாட்டுக்குமே அவமானகரமான ஒரு விடயமாகும் என்று பதிலடி கொடுத்திருக்கிறார் சுசந்திக்கா.

என்ன தான் வெளியிலே சொல்லிக் கொள்ளத் தயங்கினாலும் அமைச்சரிடம் உள்ளுக்கு இருப்பது இனவாத வெறிதான் என்பதை இவை வெளிக்காட்டியுள்ளன!

அமைச்சர் தான் ஒரு 'வெள்ளையன்' என்று நினைக்கிறாரோ தெரியவில்லை. தென்னாபிரிக்காவில் இன ஒதுக்கல் வெள்ளையர் ஆட்சி மாறி கறுப்பினத் தலைவர் நெல்சன் மண்டேலாவின் தலைமையில் ஆட்சி நடந்து கொண்டிருக்கும் இந்த நிலையிலும் கூட அமைச்சரிடம் இவ்வாறான வெறியுணர்வு மாறவில்லை என்றால், இந்த அரசினால் தமிழ் மக்களின் இனப்பிரச்சினை தீர்க்கப்படும் என்பதனை எப்படி நம்புவது?

இதில் இன்னொரு விடயம் உள்ளடங்கியிருக்கிறது. அமைச்சரின் வார்த்தைகளை மீளக் கவனியுங்கள்; ''இவள் ஒரு தென்னாபிரிக்கக் கறுப்பனைப் போலல்லவா இருக்கிறாள். அதாவது கறுப்பு ஆணைப் போலவே இருக்கிறாள். கறுப்புப் பெண்ணைப் போல் அல்ல. அவலட்சணமான (?) கறுப்பு மட்டுமல்ல, பணிவு, அடக்கம், இணங்கிப் போகாமை போன்ற பெண்மைத் தன்மை (?)யும் - அற்றவள் என்று சொல்லாமல் சொல்லி விடுகிறார்.

இந்த தாராளவாத முற்போக்கு அரசாங்கம் பதவியேற வாக்களித்த பெண்நிலைவாதிகளுக்கும், பெண்களுக்கும், அமைச்சர் விடுத்த செய்தி பணிவாக, அடக்கமாக, கேள்வி கேட்காமல் இணங்கிப்போங்கள் என்று எடுக்கலாமா?

அவ்வாறு தான் என்றால் பெண்நிலைவாதிகளின் பதில் எப்படிஇருக்கப் போகிறது?

# பாதுகாப்பு பாதுகாப்பு பாதுகாப்பு பாதுகாப்பு பாதுகாப்பு

கொழும்பு பாதுகாப்பு குறித்து அதிக அக்கறை செலுத்த வேண்டும் என்ற கருத்து புதியதொன்றல்ல வேடிக்கையென்னவென்றால் கொழும்பில் ஏதாவது தாக்குதல் நடத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் தான் திடீரென்று நித்திரையை விட்டு எழும்பியவர்களைப் போல் "சே, பாதுகாப்பு நிலைமை மோசமாக இருக்கிறது. பலப்படுத்த வேண்டும்" எனச் சொல்வதும் "பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது" என்று அறிக்கை வெளியிடுவதும் ஒரு வழமையாகிப் போய்விட்டது.

ஜனாதிபதிக்கான வாசஸ்தலமாக கோட்டையில் அமைந்துள்ள ஜனாதிபதி மாளிகையை அரசு வழங்கியிருக்கிற போதும் அந்த ஜனாதிபதி மாளிகை தனது ராசிக்கு பொருத்தமில்லையெனக் கூறி பிரதமருக்கென இத்தனை காலம் வழங்கி வந்த வாசஸ்தலமான கொள்ளுபிட்டியிலுள்ள அலரி மாளிகையை தனது வாசஸ்தலமாகப் பாவிக்கத் தொடங்கினார் ஜனாதிபதி சந்திரிகா. பதவியில் அமர்ந்தவுடனேயே ஜனாதிபதி மாளிகையை நிராகரித்த சந்திரிகா அலரி மாளிகையைப் பயன்படுத்துவதில் சிக்கலெதுவும் ஏற்படாததற்குக் காரணம் பிரதமர் - தனது தாய்- இவ்விடயத்தில் அவருக்கு விட்டுக் கொடுத்ததே.

பிரச்சினையென்னவென்றால் அந்த அலரி மாளிகைக்கு அவர்குடி போனது தொடக்கம் பொதுமக்கள் அனுபவித்து வரும் இன்னல்கள் கொஞ்சம் நஞ்சமல்ல. அலரி மாளிகையைப் பாதுகாக்கவென காலிமுகத் திடலிலிருந்து கொள்ளுப்பிட்டி சந்தி வரை காலிப் பெருவீதி மூடப்பட்டுள்ளது. இவ்வீதி மூடப்பட்டமையானது பெருவீதியில் போக்குவரத்து செய்துகொண்டிருந்த வண்டிகள் பெருஞ் சுற்றுச் சுற்றி கொள்ளுப்பிட்டி சந்தியை அடைய நேரிட்டுள்ளது யாவரும் அறிந்த விடயம். இவ்வாறான பாதை மூடல் கொழும்பு பொருளாதார இயந்திரத்தை பாதித்து வருவதாக பல பொருளியல் வல்லுனர்கள் அவ்வப்போது கருத்தும் தெரிவித்து வந்திருக்கின்றனர். பாதுகாப்பு பிரச்சினை தான் பாதைமூடலுக்கு காரணமாயின் ஜனாதிபதி மாளிகையை விட அலரி மாளிகையில் பாதுகாப்பு இருப்பதாக கருதுவது மூடத்தனம் என்றும் அவர்கள் தெரிவித்து வந்திருக்கின்றனர்.

எந்த நேரத்திலும் அலரி மாளிகை தாக்கப்படலாம். வெடிகுண்டுகள் வைக்கப்பட்டோ, தற்கொலைத் தாக்குதலோ, லோஞ்சர் தாக்குதலோ ஏன் விமானம் மூலமான தாக்குதலுக்கு கூட வழியிருப்பதாக பாதுகாப்பு படையினர் அஞ்சி வருகின்றனர்.

3வது ஈழ யுத்தம் தொடங்கிய சந்தர்ப்பத்தில் வடக்கில் முதற் தடவையாக விமான எதிர்ப்பு ஏவுகணைகள் மூலம் விமானங்கள் தாக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் புலிகளிடம் விமானப்படையும் இருக்கக் கூடும் எனும் எதிர்பார்ப்பும் வாடகைக்கு சிறு விமானங்களை அமர்த்திக் கொண்டு கூட தற்கொலைத் தாக்குதல் நடத்தலாம் என்றும் பாதுகாப்பு படையினர் அஞ்சியதில் பல உல்லாச ஹோட்டல்களில் விமானங்கள் வாடகைக்கு அளித்து வந்ததைக் கூட தடை செய்தனர். அது மட்டுமன்றி அலரி மாளிகையில் விமான எதிர்ப்பு பீரங்கிகள் அவசர அவசரமாகப் பொருத்தப்பட்டன. இன்று அலரி மாளிகையைச் சுற்றியுள்ள பல மாடிக்கட்டிடங்களின் மேற்தளங்களை பாதுகாப்பு படையினருக்கு வழங்க வேண்டுமென்றும், அவற்றை தாமே கட்டுப்படுத்துவர் என்றும் பாதுகாப்புப் படையினர் பல கட்டிடங்களின் உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தினர். இன்று அலரி மாளிகையைச் சுற்றியுள்ள ஏறத்தாழ 15க்கு குறையாத கட்டிடங்களின் மேற்தளங்களின் விமான எதிர்ப்பு பீரங்கி, நீண்ட தூர சுடுதுப்பாக்கி என்பன பொருத்தப்பட்டு ஒவ்வொரு கட்டிடதத்திலும் ஏறத்தாழ 10க்கும் 15க்கும் இடையிலான படையினரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அண்மையில் லிபர்ட்டி சினிமா திரையரங்குக்கு அண்மையில் திறக்கப்பட்டிருக்கிற இலங்கை வங்கிக்குச் சொந்தமான 18 மாடிக் கட்டிடத்தின் 18வது மாடியையும் இவ்வாறு படையினர் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளது.

கொழும்பில் நடத்தப்பட்டுவரும் தேடுதல் வேட்டைகள், தடையரண்கள் மற்றும் மேற்சொன்ன நடவடிக்கைகள் என்பன கொழும்பு பாதுகாப்பை பலப்படுத்திவிடும் என்பது வெறும் கனாவென இன்று பலர் நேரடியாகவே அரசை திட்டி வருவதைக் காணக் கூடியதாக இருக்கிறது.

# பள்ளிவாசலைப் பராமரித்த தமிழர்!

செப்டம்பர் 6ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு முஸ்லிம்கள் வந்தனர். பஸ் நிலையத்தில் வரவேற்பு அளிக்கப்பட்டது. பல தமிழ் நண்பர்கள், வர்த்தகர்கள் கட்டித்தழுவினர். குளிர்பானங்கள் வழங்கினர்.

முஸ்லிம்களின் வீடுகளில் தற்போது குடியிருப்பவர்கள் அவற்றை விடத்தயார் என்றனர். அதேபோல் முஸ்லிம்களின் சில கடைகளில் இருப்பவர்களும் (புலிகள் மூலம் எடுத்தவர்கள்) திருப்பிக்கொடுக்க முன்வந்தனர்.

பெரியகடையில் உள்ள ஜும்மா பள்ளிவாசலை சிரமதான மூலம் திருத்தி தொழுகைக்கு பயன் படுத்துகின்றனர். மீண்டும் தமது வியாபார நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளனர். மன்னாரிலும் முஸ்லிம்கள் மீண்டும் வந்து தமது பணிகளை ஆரம்பித்துள்ளனர்.

யாழ் வந்த முஸ்லிம்களில் அதிகமானோர் வசதி படைத்தவர்களே. வசதியில்லாத சிறுசிறு தொழில் புரிந்தவர்கள் விமானமூலம் வர முடியாது! கூடவே, வந்து தமது தொழிலை ஆரம்பிக்க முதல் உதவி தேவை.

விடுதலைப்புலிகளின் சம்மதத்துடனேயே நாம் இங்கு வந்து குடியிருக்க வேண்டும். சம்மதம் தருவார்கள் என நம்புகிறோம் - என்றார் ஒரு பிரமுகர்.

தொன்று தொட்டு யாழ்ப்பாணத்தில் முஸ்லிம்களும் - தமிழரும் உடன்பிறப்பு போல வாழ்ந்து வந்தோம். கிழக்கில் பல தடவைகள் தமிழ் முஸ்லிம் கலவரங்கள் இடம்பெற்றுள்ளன. ஆனால் யாழ்ப்பாணத்தில் அப்படியொன்றுமே இடம்பெறவில்லை என்றார், யாழ் மாநகர சபை முன்னாள் உறுப்பினர் ஒருவர்.

இந்திய - இராணுவ நடவடிக்கை, கோட்டை இராணுவ முகாம் பிரச்சினை போன்றவற்றில் நாமும் பாதிக்கப்பட்டோம். இடம்பெயர்வு இன்று எல்லோருக்குமே ஏற்பட்டுள்ளது.

நாட்டில் போர் நின்று, அமைதி சமாதானம் ஏற்பட்டு எல்லோரும் நிம்மதியாக இருக்கும் காலம் வரவேண்டும் - அல்லாஹ் வழிவிடுவான் என்று பலரும் சொன்னார்கள்.

வேலணையில், வெள்ளை மணல் கடற்கரையில் உள்ள பள்ளிவாசலுக்கும் சென்றனர். அப்பள்ளிவாசல் போர்த்துக்கீசர் வருகைக்கு முன்னரே கட்டப்பட்டதாம்.

1990இல் தீவுப்பகுதியில் படை நடவடிக்கை இடம்பெற்றபோது வெளியேறாமல் இருந்து வரும் சிங்கம் என்ற ஒரு தமிழர் இப்பள்ளிவாசலை பராமரித்து விளக்கு ஏற்றிவருகிறார்.


இப்பள்ளிவாசல் அதேமாதிரி எதுவித சேதமும் இன்றி காணப்படுவது எமக்கு ஒரு மகிழ்ச்சி. நாம் இதனை எதிர்பார்க்கவில்லை என்றனர்.

மருன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# இயக்கத்திற்குப் போனவர்கள்

எம்.கே.எம். ஷகீப்...

அந்தப் படத்தில் தலைவருக்குப் பக்கத்தில் இரண்டு பேர் நிற்கிறார்கள். அதில் வலப்புறமாக நிற்பவன் கோபியேதான். ஆனால் இடப்புறமாக நிற்பவனின் கீழ்தான் கோபி என்று எழுதியுள்ளார்கள். எனினும் அவன் கோபியாக இருக்க மாட்டான். எனக்கு கோபியின் முகம் அச்சொட்டாக அப்படியே தெரியும். இயக்கத்தில் உள்ளவர்கள் தங்கள் சொந்தப் பெயரைப் பாவிப்பதே இல்லையாம். எனவே பெயரை மாற்றியிருப்பார்கள். எனினும் எனக்குத் தெரிந்த கோபி இவனேதான்.

எட்டாம் வகுப்பில் படித்துக் கொண்டிருக்கையிலேயே இயக்கத்துக்குப் போய்விட்டான். எந்த இயக்கம் என்றெல்லாம் எனக்குத் தெரியவில்லை. அப்போது பரபரப்பாக பேசுவார்கள். அடிக்கடி ஒவ்வொருவரும் காணாமல் போவார்கள். வகுப்பில் முதலாவதாக வருவதும் இவன்தான். மொனிட்டராகவும் இருந்தான். காலையில் நேரத்துக்கு வந்துவிடுவான். தார் ரோட்டில் மஞ்சள் கடவைக் கோடுகள் போட்டது மாதிரி மூன்று திருநீர்க் கோடுகள் நெற்றியிலிருக்கும். ஸ்கூலுக்கு அடுத்த வீடுகள் மாதிரி இரண்டு கோயில்கள். காளி கோயிலும், பிள்ளையார் கோயிலும். எந்தக் கோயிலுக்கு போவானென்று தெரியாது. கோயில் போய் விட்டுத் தான் ஸ்கூலுக்குள் நுழைவான்.

அந்த வகுப்பில் நாங்கள் மூன்று பேர்தான் முஸ்லிம்கள். நானா, காக்கா, முக்கால் என்று எப்படித்தான் நக்கலாகக் கதைத்தாலும் எந்தப் பேதங்களையும் நாங்கள் உணர்வதில்லை. நாங்களும் ஏதாவது சொல்லி நக்கலடிப்போம். என் சிவந்த ஊதிப்போன கன்னங்களுக்கு சிவலோக நாதன் பிரின்ஸிபல் தக்காளி என்று பெயர் வைத்திருந்தார். அடிக்கடி கிள்ளியும் பார்ப்பார். அதுவே என் பட்டப் பெயராய்ப் போனது. தக்காளி, தக்காளி என்று அதிகமாய் என்னைக் கூப்பிடுவது கோபிதான். விளையாடப் போனால் என்னைத் தோளில் உப்புக் கட்டிச் சுற்றுவான். ''டீம்'' பிரிப்பான். 'பெக்' நிற்பான். விளையாடுவோம், படிப்போம். அவன் எப்போதும் முதலாவதே வருகின்ற வகுப்பில் நான் ஆறாவதிலிருந்து பின்னுக்குப் பின்னுக்குப் போய் ஓ.லெவலும் கூட ஒழுங்காகப் பாஸ் பண்ணவில்லை.

ஒரு கிழமையாக கோபி வரவில்லை. ஸ்கூலில் பலரும் இவ்வாறு வராமலிருந்தார்கள். வராதவர்கள், வீட்டிலும் இல்லையென்று தெரிந்த போதுதான், அவர்களெல்லாம் இயக்கத்திற்கு ஓடி விட்டதாக கதைக்கத் தொடங்கினார்கள். குழப்படி பண்ணுபவர்கள் தான் ஓடிப் போவார்கள் என்று சொல்வார்கள். இவன் அப்படி குழப்பம் செய்து ஓடிப் போகிற தறுதலையல்ல. ஏன் போனான்/போனார்கள் என்பதெல்லாம் அப்போது ஒரு வரலாற்றுத் தேவையாகியிருந்தது என்பது இப்போதுதான் எனக்குப் புரிகிறது. அவனும் இப்போது ஒரு வரலாறாகியல்லவா போயிருக்கிறான். இல்லாவிட்டால் இன்றுவரை போராடிக் கொண்டிருக்கிற அந்த இயக்கத்தின் தலைவருக்குப் பக்கத்தில், கழுத்தில் தொங்குகிற சயனைட் குப்பியுடன், அவனைவிடக் கறுப்பான சீருடையணிந்து போஸ் கொடுத்திருப்பானா? செத்துப் போவதென்று முடிவான பின்னரே இவ்வாறெல்லாம் படம் பிடிப்பார்கள் என்பது இப்போதெல்லாம் எல்லோருக்கும் தெரிந்த சங்கதி. இவன் செத்துப் போய்விட்டான் என்று முன்பும் கேள்விப்பட்டேன். ஆனால் நம்ப முடியவில்லை. மிக இளவயதில் செத்துப் போவது மிகுந்த சோகம் தரும் எனக்கு.

என்னோடு படித்த நண்பர்களைக் காணும் போதெல்லாம் கோபி பற்றிக் கேட்பேன். நேவிக் கப்பலொன்றை தண்ணீருக்கடியால் சென்று தகர்க்க முயன்றபோது கதிர்பாய்ச்சிக் கொன்றுவிட்டார்கள் என்று சிலர் சொன்னார்கள். நீருக்கடியில் அவன் பலமணி நேரம் நிற்பானாம். அந்த இயக்கத்தின் விஷேட கடற்படைப் பிரிவில் முதலாவது தியாகியாய்ப் போனது இவன்தானாம். படத்தில்இவனோடு கூட இருப்பவனும் இவனைப் போலத்தான் செத்திருப்பான். என்னமாய்ச் சிரித்துக் கொண்டு நிற்கிறார்கள். செத்த பிறகு தான் எல்லோரும் ஒருவனின் திறமையை புகழ்கிறார்கள். வகுப்பு நாட்களூடே அவனை நினைக்கும் போது கவலை கவலையாய் வரும்.

சக்தி ஊருக்குள் வந்த போதும் கோபியைப் பற்றிக் கேட்டேன். இவனும் கோபி மாதிரித் தான் இயக்கத்துக்குப் போனவன். வேறு பள்ளிக்கூடத்தில்தான் படித்தாலும் நல்ல நண்பர்கள். வெள்ளைக்காரன் சின்னப் பெடியன்களை வைத்து உருவாக்கிய 'புட்போல்' டீமில் இவன் கீப்பர். இப்போதெல்லாம் வெள்ளைக்காரன்களை_ சிறுவர்களோடு கண்டால் வேறு மாதிரியே நினைக்கத் தோன்றுகிறது. இந்த வெள்ளைக்காரன் அப்போது புட்போல் விளையாடியது மட்டுமே தெரியும். நன்றாகப் பிடிப்பான். விளையாட்டில் நண்பர்களானோம். இவன் கோபிக்குப் பிறகுதான் இயக்கத்துக்குப் போனான். இவனின் திறமையாலோ என்னவோ பொறுப்பான பதவியிலும் இருந்தான். இருந்தது ஓர் அமைதிக் காலத்தில் ஊருக்குள் ஆர்ப்பாட்டமாய் வந்த போது தெரிந்தது.

இயக்கங்களெல்லாம் ஒரு காலத்தில் நீதிமன்றங்களாயிருந்தன. தாய் பிள்ளைக்கும், கணவன், மனைவிக்கும் அடிக்கப் பயப்பட்டார்கள். உள்வீட்டுப் பிரச்சினைக்கெல்லாம் இயக்கங்கள் தீர்வு சொல்லின. தீர்வு என்பது அவர்கள் ஒருமுறை வாகனத்தில் ஆயுதங்களுடன் வந்து இறங்குவதாகவே பெரும்பாலும் இருக்கும். சிலபோதுகளில் இயக்க அலுவலகங்களுக்குள் அடிவாங்கிய கணவன்கள், தந்தைகளும் உண்டு.

எங்கள் வீட்டின் பின் வளவுக்குள் நடந்த ஒரு குடும்பச் சண்டையைத் தீர்த்துவைக்க பொறுப்பாளர் என்ற வகையில் சக்தி இன்னொருவனுடன் வந்திருந்தார். சக்தியை நிஸாம் என்ற முஸ்லிம் பெயராலேயே கூப்பிட்டார்கள். எம் ஊரின் நகரப் பகுதியின் பொறுப்பாளர் நிஸாம் என்று முன்பு கேள்விப்பட்டிருந்தேன். ஓர் முஸ்லிமை நியமித்திருப்பதாக உவகை கொண்டேன். பின்புதான் தெரிந்தது நிஸாம் என்பது சக்தி என்று. அதுவும் எப்போதுமே புன்னகைத்துக் கொண்டிருக்கிற எனது நண்பனென்று. முஸ்லிம் நாடுகளுக்கு இயக்கத்தவர்கள் பயிற்சிக்காகச் சென்ற போது முஸ்லிம் பெயர்களாலேயே சென்றார்களாம். அதுவே அவர்களின் பெயராகவும் இருந்தது, எல்லா வகையான மாறுதல்களுக்கும் முன்பு.

இப்போதெல்லாம் அப்போதிருந்த உணர்வு எவரிடமும் இல்லை. ஒருவனில் ஏறி இன்னொருவனை மிதித்து வரலாற்றைக் கடத்திக் கொண்டுபோகிறார்கள் எல்லோரும். எனக்கும் சக்தியைக் கண்டபோது அளவிலா மகிழ்ச்சி. என் வயதொத்தவனென்றாலும் ஒரு ஹீரோ போல் தான் இருந்தான். பழைய நட்புடன் பேசினான். எனக்குத்தான் அவ்வாறு பேச முடியவில்லை. அவனின் உடையும், ஆயுதமும் ஓர் அந்நியத்தை ஏற்படுத்தியிருந்தது. அப்படி ஓர் அந்நியப்படுகிற வரலாறு யாருக்குமே ஏற்பட்டிருக்கக்கூடாது. என்னமாய் இருந்த காலங்கள் அது!

இவர்கள் ஊருக்குள் வந்தபோது எப்படி சந்தோஷப்பட்டார்கள் தெரியுமா மக்கள். சந்திக்குச் சந்தி பாடல்களும் தோரணங்களும்... கொடிகளும்... ஒரு உற்சவத்தின் கோலாகலமாய் ஊரே திரண்டிருந்தது. அரசடிச் சந்தியில் நின்ற மின்கம்பத்தில் தடாலடியென ஏறி 'பெனர்' கட்டிய இரண்டு இயக்கப் பெட்டைகளைப் பார்த்து வியந்து போனேன். புரட்சியான மாறுதல்கள் என்போன்றோருக்கு அப்போது புதினமாய்த்தான் இருந்தது. ஊருக்குள் 'பிக்அப்கள்' ஓடின. 'பிக்அப்'பில் இருந்த இயக்கத்தவர்களை பார்க்கவென்று வியர்க்க வியர்க்க சைக்கிளை மிதித்துக் கொண்டு போனது எதற்காக என்றெல்லாம் இப்போதுதான் கேள்வியாகிப் போய்விட்டது. காணாமல் போன பிள்ளைகள் கௌரவமாய் வந்து தங்கள் சொந்தங்களைச் சந்தித்துக் கொண்டிருந்தார்கள்.

கோபி இவ்வாறு வந்திருக்கமாட்டானா? 'இன்றைய வித்துக்கள் நாளைய விருட்சங்கள்' என அவனுக்கு அவனில்லாத ஒரு கல்லறை கட்டப்பட்டிருக்கும்! கடலுக்கடியில் செத்துப் போனவனின் உடலை மீன்கள் சாப்பிட்டிருக்குமோ? கதிர்வீச்சும் கரண்டைப் போல் ஒன்றா? இதெல்லாம் கோபியை நினைக்கையில் வருகின்றவையாயினும் தேவையற்றது.

சண்டைபிடித்த குடும்பத்தவர்களை ஒபீசுக்கு வரச்சொன்னார்கள். இவனைச் சந்திக்க வேண்டுமென்பதற்காக நானும் போனேன். குளிர்ப் பிரதேசத்திலேயே அதிகம் செழிப்பாக வளர்கிற ஊசியிலை மரங்களையும், கூடவே அசோக மரங்களையும் கஷ்டப்பட்டு வளர்த்து வைத்திருந்த ஓர் அழகான வீட்டில் ஒபீஸ் இருந்தது. ஆயுதங்களுடன் எனதும், எனக்கு இளமையானதும், முதுமையானதுமான பெண்பிள்ளைகள் அதிகம் இருந்தார்கள். சீருடையில் அழகாயிருந்தார்கள். அழகானவர்களும் இருந்தார்கள். கிரிஷாந்தியும் அழகானவள் தானே அவளும் இந்த இயக்கமா?

என்னுடன் நல்லா இருந்தவர்களுக்கும், இயல்பிலேயே நல்லாயிருந்தவர்களுக்கும் இயக்கத்திற்குப் போவதென்று விதியாய் இருந்ததா அப்போது?

கிரிஷாந்தி இந்தப் பெண்களிடை நீ இருக்கிறாயா? இல்லை என் மனதுக்குள் முதல் முதலாய் விழுந்தவளைப்போலதான் இன்னும் கிடக்கிறாயா?

துடிப்பும், அழகும், அறிவும் என்றுதான் அவளும் இருந்தாள். எனக்கதில் பிடித்தது, அவளின் அதீத அழகு. அல்லது அழகுமட்டுமே பிடித்ததுக்குள்ளாகிற மீசை எழும்பத் துடிக்கிற வாலிபப் பருவத்தில் நான் இருந்தேன்.

சின்ன வகுப்பில் இருந்தே ஆண்களுக்கான தனியான பாடசாலையில் படித்து வந்த எனக்கு கலவன் டியூசன் தான் கிளுகிளுப்பூட்டியது. அங்குதான் அவளும் படித்தாள். நான் அவளைப் படிப்பேன். கணக்கெடுக்கவே மாட்டாள். அழகுத் திமிர் என்றெல்லாம் நினைக்கத்தோன்றாது. என் கண்களுக்கு எதுவுமே தோன்றாது. என்னுடையது மாதிரி பல கண்கள் அவளை மொய்த்தன. அவள் அவள்பாட்டிலேயே இருந்தாள். நாங்கள் 'காதலித்துப்பார்' என்று தொடங்குகிற வைரமுத்துவின் கவிதைகளில் வருபவர்களாக இருந்தோம்.

பேக்கரி ஒன்றின் பக்கத்து வீட்டில் அவளின் குடும்பம் இருந்தது. அவள் வீட்டு வீதி ஒருவர் தெரியாமல் ஒருவருக்கான 'சுழட்டல்' ஏரியாவாய் இருந்தது. சைக்கிள் டயர்கள் தேய்ந்து போனதுதான் மிச்சம். யாருக்குமே இல்லாமல் திடீரென்று அவள் காணாமல் போய்விட்டாள்.

ஒரு தேவதை பற்றிய மனசின் கனவு வீணாய்ப் போனது. சும்மாவே ஏறாத விஞ்ஞானமும், கணக்கும் அவள் இல்லாமல் அறவே பிடிபடவில்லை. பெட்டைகளின் முன்னால் குறிப்பாக அவளின் முன்னால் 'பிளக்போர்டில்' கணக்குச் செய்து காட்டவேண்டும் என்பதற்காகவேணும் பாடமாக்கியதெல்லாம் இப்போது தேவையற்றதாகியது. நண்பர்கள் பலர் டியூசனுக்கு வராமல் நின்று போனார்கள்.

மனசில் நிரப்பப்படாத பக்கங்களில் ஒரு கீறலாய் அவள் விழுந்து போனாள். பார்க்கப் பயமாய் இருக்கிறது. இயக்க அலுவலகத்துக்குள் இயக்கப்பெட்டைகளுக்கு ஜொள்ளு விடுகிறான் என்று நினைக்கப்போகிறார்கள். நினைக்கட்டும். நான் கிருஷாந்தியைத்தானே தேடுகிறேன். நட்பான தேடல்களுக்கு இயக்கங்களில் இடமில்லையா? தோற்றுப்போனதன் பின் எல்லாமே நட்பாகத்தான் இருக்குமோ?

அக்கூட்டத்தில் கிருஷாந்தி இல்லை. அவள் ஏதாவது பெரிய பொறுப்பில் எங்காவது இருப்பாள். சிலவேளைகளில் பெண் பிரிவின் முக்கியஸ்தையாகவும் இருப்பாள். அதற்கான தகுதிகள் யாவும் அவளுக்கு அப்போதே இருந்தன.

→

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒற்றைக் கண்ணைச் சிமிட்டி குறி பார்த்துச் சுடுகின்ற போட்டோவில் இருந்ததும் அவள் மாதிரித்தான் இருந்தது. கிட்டத்தில் தான் அந்தப்படம் ஒரு பேப்பரில் பிரசுரமாகியிருந்தது. ஒ.எல் காலத்துக் கிருஷாந்தியை உரித்துவைக்கிற மாதிரியான படம். அவளா அது? அவள் இன்னும் இயக்கத்தில் தான் இருக்கிறாளா? செத்து விட்டாளா? பெண்கள் அதிகம் போகிற போர் முனைகளில் இவளும் களப்பலியாகியிருப்பாளா? 'எங்கள் ஆட்கள்' பஸ்களிலும், வயல்களிலும், பள்ளிவாசல்களிலும் என்று இவளாளும் கொல்லப்பட்டு இருப்பார்களா?

எது நடந்தாலும் இவளை நினைக்கையில் எல்லாம் மறந்து போகிறது. வரிசைகளில் கிடத்தப்பட்ட மையத்துகளில் அழிக்கவொண்ணா வடுக்களை பதித்து ஏன் முரண்பட்டார்கள்?

கிருஷாந்தி நீ அமைதியானவள், நல்லவள் தானே. உன் கைகளும் எம் இனத்து இரத்தக் கறை பட்டு சிவந்து போயினவா?

சக்தி உள்ளே கூட்டிப்போய் நட்புடன் கதைத்தான். நண்பர்கள் பற்றிக்கேட்டான். எனக்கு அவனிடம் கேள்விகள் கேட்க முடியவில்லை. அங்கும் இங்கும் திரிந்து கொண்டிருந்த போராளிகளில் எனக்குத் தெரிந்த எவராவது இருப்பார்களா எனத்தேடினேன். மரநிழலின் கீழ் கதைத்துக்கொண்டிந்தவர்களில் அவள் இருந்தாள். அவளைத் தெரிந்திருந்த அளவுக்கு அவள் பெயர் யாருக்குமே தெரியாது. ஒரு டியூசன் அல்லது வேறு எங்காவது அறிமுகமாகிற இடங்களில் இருந்திருந்தால் யாரின் மூலமாவது பெயரை அறிந்திருக்கலாம் அல்லது நேரிலேயே கேட்டிருக்கலாம். அவள் அறிந்துகொள்ளப் படமுடியாதவளாக நடந்தாள்.

இவர்கள் ஊருக்கு வர முதல் என் வீட்டு முன் 'கேட்'டால் இவள் போகாத நாளும் இல்லை. நாங்கள் இவளைப்பார்க்காத நாளும் இல்லை அமைதி நடை, வெள்ளை உடை, கையில் பைபிள் போன்ற ஒன்று அல்லது பைபிளேதான். கன்னியாஸ்திரிக்குரிய இலட்சணம். எப்போதுமே தவழ்கிற புன்னகை. இவளுக்குப்பின்னாலும் பலர் திரிந்தார்கள். நக்கல் அடித்தார்கள். கையால் உரசினார்கள். என்னவெல்லாமோ செய்தும் அவள் அவள் பாட்டிலேயே இருந்தாள். நண்பன் ஒருவன் இவனுக்கு கடிதம் கொடுக்க எண்ணியிருந்த நாட்களில் ஊர் கொண்டாடிக்கொண்டிருந்தது. பெருந்தலைவர்கள் வந்தார்கள். பவனி போனார்கள். கூட்டம் வைத்தார்கள். தேனிசை வழங்கினார்கள். கூட்டத்தோடு வாய் பார்க்கப் போயிருந்தோம். கையசைத்து புன்னகை புரிந்து கொண்டிருந்த இன்றில்லாத அந்தத் தலைவர். ஆயுதந்தாங்கி வரிசையாக நின்றது போராளிப்படை. ஆணும், பெண்ணும் நிகர் எனக்கண்டோம். 47கள் முன்னால் தொங்க யார் யாரோ யாரின் பிள்ளைகளோ..... அந்த வரிசையின் இடையில்.... நாம் நினைத்து ப் பார்த்திராத அந்த பைபிள் பெண்... எமக்கு வியர்க்கத்தொடங்கியது. கூட்டத்துக்குள் அமுங்கினோம். கர்த்தர் எப்போது இவள் கையில் ''கன்''னைக்கொடுத்தார்? கச்சேரி கூட பார்க்காது நழுவினோம். இந்த வியப்பான பயம் தணிய பல நாள் எடுத்தது.

இவள் மற்றவர்களைப்போல் நெருக்கமானவள் இல்லை. சும்மா வீதியில் திரிகிற பெட்டைகளில் ஒருத்தியாய்த்தான் இருந்தாள். இருந்தும் என்னவோ இவளைப்பற்றிய ஞாபகம் ஓர் இனம் புரியா அன்னியோன்னியத்துடன் இன்னும் ஏற்படுகிறது.

கதைத்து முடித்து வெளியில் வந்தோம். பிரச்சினைப்பட்டவர்கள், சுமுகமாக வந்தார்கள். எல்லாவற்றையும் சந்தோசமாய் நினைத்துப் பார்க்கிற பின்னாட்களில் சுமுகமாக இருக்க வேண்டியவர்கள் பிளவுண்டு போனார்கள். வரலாறு எல்லாம் துண்டு துண்டாய் சின்னாபின்னப்பட்டுப் போனது.

அவர்களையெல்லாம் எப்போதாவது காண நேரிட்டால், ஆயிரம் ஆயிரம் கேள்விகளால் துளைக்கவேண்டும் போல் இருக்கிறது. ○




## உலகத் திரைப்பட விழா, டொரன்ரோ -'97

# போர் நிலத்தின் திரைப்படங்கள

ஒவ்வொரு ஆண்டும் செப்ரெம்பர் மாதம் கனடாவின் தொறன்ரோ மாநகரில் இடம்பெறும் உலகத் திரைப்படவிழா, அளவிலும் தரத்திலும் உலக அளவில் முக்கியத்துவம் பெற்ற ஒரு விழர்வாகும். சிறந்த திரைப்படங்களுக்கான பரிசுகளோ அல்லது வேறெவ்வகையான போட்டிகளோ இடம் பெறாவிட்டாலம், இந்த முக்கியத்துவத்துக்குக் காரணம் அதிகளவில் லத்தீன் அமெரிக்க, ஆசிய ஆபிரிக்க நாடுகளின் படங்கள் இடம்பெறுவதும், இந்த நாடுகளின் படங்களுக்கான விற்பனை வசதிகளும் வாய்ப்புக்களும் ஏற்படுத்தப்படுவதுமாகும். விழாவின் இன்னொரு முக்கியமான அம்சம் - ஹொலிவூட் மற்றும் அமெரிக்கத் திரைப்பட மேலாதிக்கத்திற்கு எதிராக மிகுந்த சிரமத்துடன் சீரிய திரைப்படத்துறையைப் பேண முயலும் கனடியப் படங்களுக்கு வழங்கப்படுகிற வாய்ப்புக்களும் முக்கியத்துவமுமாகும்.

இம்முறையும் செப்ரெம்பர் நான்காம் திகதியிலிருந்து பதினான்காம் திகதிவரை இடம்பெற்ற விழாவில் 281 திரைப்படங்கள் திரையிடப்பட்டன. இந்தியாவிலிருந்து வந்த ஒரேயொரு படம், மணிரத்தினத்தின் 'இருவர்' பல்வேறுபட்ட, பல்வேறு தரத்திலான திரைப் படங்களும் இடம்பெறுவதன் மூலம் திரைப்பட விழாக்களின் வருமானத்தையும் கொஞ்சம் அதிகரிக்கலாம் என்பதாலோ, என்னவோ ஹொலிவூட்டிலிருந்தும் பிரபலமான பல திரைப் படங்கள் வந்திருந்தன. தொறன்ரோ விழா அமைப்புக் குழுவினருக்கு மணிரத்தினத்தின் படங்களிலும் ஒரு ஆர்வம் இருக்கிறது. ஆழமற்றவை எனினும் பாட்டும் படமும் சேரும் கோலாகலத்தின் நேர்த்தியானதும் எடுப்பானதுமான ஒரு வகைப்படங்கள் அவருடையவை அதனால்தான் என்னவோ மணிரத்தினத்தின் பெரும்பாலான படங்கள் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு சிறப்புப் பிரிவில் திரையிடப்பட்டன.

இம்முறை விழாவின் சிறப்பம்சமாக பொஸ்னியா, குரோஷியா, ஸேர்பியா ஆகிய யுத்த பூமிகளிலிருந்து வெளியான திரைப் படங்கள் இடம்பெற்றன. இப்படங்களுடன் ஹங்கேரிய, ரோமானிய படங்கள் சிலவற்றையும் சேர்த்து பால்கன் சினிமா (Balcan Cinema) எனும் தலைப்பில் பால்கன் பிரதேசத்து அரசியல் வாழ்வைப்பெரும்பாலும் சாதாரண மனிதர்களுக்கூடாகச் சித்திரிக்கும் தரமான படங்கள் 19 இடம்பெற்றன. இப்படங்களை பார்த்த போது நம்நாட்டின் வடக்கு கிழக்கிலிருந்தும் அப்பிரதேசத்து வாழ்வு சுதந்திரமான முறையில் படம்பிடிக்கப்பட்டால் இத்தகைய படங்கள் தான் வெளியாகியிருக்குமோ என்று தோன்றிற்று.

1990இல் யூகோஸ்லாவியாவில் யுத்தம் ஆரம்பமாகுவதற்கு முன் 900 படங்கள் தயாரிக்கப்பட்டன. சென்ற வருடம் 6 படங்கள் மட்டுமே வெளியாகியிருந்தன. ''எம்மிடமிருந்த எல்லாப் பணத்தையும் யுத்தத்தில் செலவிட்டு விட்டோம். எனவே திரைப்படம் தயாரிக்க எதுவுமே இருக்கவில்லை'' என்று கசப்புடன் தெரிவிக்கிறார் நெறியாளர் **மோமா மிர்ட்கோவிஷ்** ஒவ்வொரு படமும் ஒவ்வொரு அதிசயமாகவே எனக்குத் தோன்றிற்று.

தங்களுடைய திரைப்படங்களை அறிமுகம் செய்வதற்காகவும் அவை பற்றிய விமர்சனங்கள், கலந்துரையாடல்களில் ஈடுபடுவதற்காகவும் நெறியாளர்கள் போரோ ட்ராஸ்கோவிச் (Boro Draskovic), டூசன் மக்கவேயவ் (Dusn Makaveyev), ஸோரான் ஸோலமன் (Zpran Solomaun), நேநாட் டிஸ்தரோவிச் (Nenad Dizdarevic) ஆகியோர் பத்திரிகையாளர்களையும் திரைவிமர்சகர்களையும் சந்தித்தனர். நெடுநேரமாக இடம்பெற்ற கலந்துரையாடலில் சினிமாவின் வர்த்தக ரீதியான தொழிற்பாடு, வெளிநாட்டு உதவிகளைப்பெறுவதிலுள்ள சாதகமான , பாதகமான மற்றும் தார்மீகப் பிரச்சினைகள், யுத்த நிலைமைகள் மற்றும் நெருக்கடி நிலைமைகளில் சினிமாவினதும் நெறியாளரதும் பங்கு போன்ற பல விஷயங்கள் பேசப் பட்டன.

''நாங்கள் அரசியல்வாதிகளோ, போர்வீரர்களோ அல்லர். எங்களுடைய ஒரே ஆயுதம் கமெராதான்'' என்று திருப்பித் திருப்பிச் சொன்னார் போரோ ட்ராஸ் கோவிச். ''எங்களுடைய நாட்டு யுத்த யதார்த்தத்துக்கு நாங்கள் எங்களுடைய சினிமா மொழியில் பதில் சொல்கிறோம். அது எல்லா நேரமும் எல்லோரையும் சந்தோஷப்படுத்தாது; பலரைத் திருப்திப் படுத்தாமல் கூடப்போகலாம்'' என்று மேலும் கூறுகிறார் அவர்.

அரசியல்வாதிகளையும், ஆயுததாரிகளையும் அந்த மாதிரி வெறுக்கும் போரோ உரையாடலுக்கு ஒரு சுவாரசியமான மனிதர். ''நான் அரைவாசி ஸேர்பியன்; அரைவாசி குரோஷியன். முன்பென்றாலும் யூகோஸ்லாவியன் என்று சொல்லலாம் இப்போ என்ன சொல்வது என்று எனக்குத்தெரியாது. அது எனக்கு ஒரு பிரச்சினையே அல்ல. ஆனால் மற்றவர்களுக்குத்தான் பெரிய பிரச்சினையாக இருக்கிறது'' என்று சிரித்துக்கொண்டே என்னிடம் சொல்கிறார்.

வுக்கோவார் (Vukovar) என்னும் இடத்தில் படப்பிடிப்பில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது படுகாயமடைந்தார். யுத்தம் வெடித்த பிற்பாடு முதன் முதலில் அழிக்கப்பட்ட கிராமம் வுக்கோவார் என்று சொல்லிய போரோ அழிக்கப்பட்ட தன்னுடைய கிராமத்தின் படங்களைக் காட்டுகிறபோது தவிர்க்க முடியாமல் எங்களூர் ஞாபகமும் எனக்குள் வேதனையோ மேலெழுகிறது.

"Musteries of the Organism" எனும் என்னுடைய படம் பதினாறு வருடங்களாகத் தடைசெய்யப்பட்டிருந்தது'' என்கிறார் டூசன் மெக்கவேயஸ் சுற்றிச் சுற்றி உள்ளூர் விஷயங்களைப் பேசிக் கொண்டிருப்பதில் எவ்வித அர்த்தமுமில்லை என்று கருதும் டூசன், நேரடியான பிரச்சாரம் தூக்கலாகத் தெரியக்கூடிய படங்களைத்தான் தயாரிக்க விரும்புகிறார்.

Awkward Age என்ற படத்தின் நெறியாளர் பொஸ்னியாவிலிருந்து வெளியேறிய அகதிகள் பற்றிய அவருடைய Tired Conmpanions என்ற படம் திரைப்படவிழாவில் கலந்து கொண்ட படங்களுள் மிகவும் பலம் வாய்ந்த ஒன்றாக அமைந்தது.

சேரன் ○

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சமீஹ் அல் காசிம் எட்டுக் கவிதைகள்

சமீஹ் அல் காசீம் (1939-) மிகப் பிரசித்திப்பெற்ற பலஸ்தீன அரபுக் கவிஞர்களுள் ஒருவர். ஜோர்தானில் உள்ள சர்கா என்ற ஊரில் பிறந்த இவர்: றமா, நசறத் ஆகிய இஸ்ரேல் நகரங்களில் கல்வி பயின்றார். சில காலம் இஸ்ரேல் பாடசாலை ஒன்றில் ஆசிரியராகவும் பணிபுரிந்தார். ஆயினும் இவரது அரசியல் கொள்கை காரணமாக இவர் பதவிநீக்கம் செய்யப்பட்டார். இஸ்ரேல் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினரான இவர் தனது கவிதைகள், அரசியல் நடவடிக்கைகள் காரணமாக பலமுறை வீட்டுக்காவலிலும், சிறையிலும் வைக்கப்பட்டுள்ளார். 1960களின் இறுதியளவில் (அதாவது அவரது முப்பதாவது வயதில்) அவரது ஆறு கவிதைத் தொகுதிகள் வெளிவந்திருந்தன. அரபு உலகெங்கும் அவை விரும்பிப் படிக்கப்பட்டன. இதுவரை அவரது இருபத்தைந்து கவிதைத் தொகுதிகள் வெளிவந்துள்ளதாக அப்துல்லா - அல் - உதாரி (1986) கூறுகிறார். நவீன பலஸ்தீன இலக்கியத் தொகுதியொன்றை ஆங்கிலத்தில் வெளியிட்ட சல்மா கத்ரா கய்யூசி (1992) அவரது தொகுதிகள் பன்னிரண்டுக்கு அதிகம் என்று கூறுகிறார். எது சரியான எண்ணிக்கை என்று தெரியவில்லை. கவிதைத் தொகுதிகளுக்குப் புறம்பாக இவரது சுயசரிதைப் பாங்கான ஒரு நாவலும், நாடகமும், நாட்குறிப்பு ஒன்றும் நூலாக வெளிவந்துள்ளன.

சமீஹ் அல் - காசிமின் சில கவிதைகள் ஏற்கெனவே தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. 1982ல் வெளிவந்த 'பலஸ்தீனக் கவிதைகள்' தொகுதியில், முருகையனின் மொழிபெயர்ப்பில் இவரது ஏழு கவிதைகள் இடம் பெற்றுள்ளன. சிவசேகரத்தின் 'பணிதல் மறுத்தவர்' தொகுப்பில் இவரது பத்து சிறிய கவிதைகள் இடம்பெற்றுள்ளன. பண்ணாமத்துக் கவிராயரின் 'காற்றின் மௌனம்' தொகுப்பிலும் இவரது கவிதை ஒன்று இடம்பெற்றுள்ளது. இக்கவிதை முருகையனாலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

இங்கு இடம் பெறும் சமீஹ் அல் காசீமின் எட்டுக் கவிதைகளும் சல்மா கத்ரா கய்யூசி (1992) பதிப்பித்த Anthology of Modern Palastinian Literature, அப்துல்லா அல் உதாரி (1986) பதிப்பித்த Modern Poetry of the Arab World என்னும் நூல்களில் இருந்து தமிழாக்கம் செய்யப்பட்டன. இங்கு இடம்பெறும் போரின் புதல்வர்கள், சுவர்க் கடிகாரம் என்பன சிவசேகரத்தாலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. மொழிபெயர்ப்பு வேறுபாடு கவனிக்கத்தக்கது. ஆங்கில மொழி பெயர்ப்புகளிலும் பல வேறுபாடுகள் உள்ளன.

*எம்.ஏ.நுஃமான்*

## காதல் கவிதைகள்

1

நான் சனங்களை கடந்து செல்கையில்
என் குசுகுசுப்பையும் சிரிப்பையும்
அவர்கள் கேலிசெய்கின்றனர்
பைத்தியக் காரத்தனமாய்
தன் இளமையை விரயம் செய்யும்
அன்னியனுக்காக அவர்கள்
அனுதாபப்படுகின்றனர்.

அன்பே, அவர்களை
மன்னித்துவிடுவோம்
நீ என் அருகே நடந்துவருவதை
அவர்கள் காணவில்லை
அவர்களை மன்னித்துவிடுவோம்.

2

நீ என் உள்ளே இருப்பதால்
உன்னை எப்படிப்பார்ப்பது என்பதை
எனக்குச் சொல்லித்தா

நான் உனக்கு உள்ளே இருப்பதால்
உன்னை எப்படித் தழுவிக்கொள்வது
என்பதை
எனக்குச் சொல்லித்தா

உன் துன்பங்களை
நான் எவ்வாறு மகிழ்ச்சியாக
மாற்றுவேன்?
எல்லா ஆசீர்வாதங்களும்
உனக்காகட்டும்
உன்னை நோக்கி
ஒரு நதிபோல் பெருகிவரும்
என் கைகளைப் பற்றிக்கொள்
உயர்ந்த காதல் ஒரு தெய்வீக
வார்த்தைதான்.

3

என் காலத்தையெல்லாம்
குருதியாகச் சிந்தினேன்
என் குருதி கொந்தளிப்பாய் இருந்தது
என் இடத்தையெல்லாம்
குருதியாகச் சிந்தினேன்
என் குருதி குழப்ப நிலையில் இருந்தது
இன்னும் என் பெருமை என்னுடனே
உள்ளது
ஏனெனில், என் இரங்கற் பாக்களில்
நீயும் பங்குகொண்டாய்
என் பாடல்களை ஆசீர்வதித்தாய்

4

நான் உன்னைக் காதலிக்கிறேன்
உன் காதுக்குள் குசுகுசுத்தேன்:
''நான் உன்னைக் காதலிக்கிறேன்''
உரத்த குரலில் கத்தினேன்:
''நான் உன்னைக் காதலிக்கிறேன்''
காலத்தின் தொடக்கமாய் இரு
எல்லா வெளியினதும் முடிவுமாய் இரு.

5

உன் கை என் கையில்
உன் கண்கள் என் கண்களில்
தாய் நாடு ஒரு புகைவண்டி
ஒரு புழுதிச் சுழலையும்
செய்தித்தாள் கிழிசல்களையும்
பின்னால்விட்டு
இடிந்து விழுந்த
காலத்தின் எல்லையின் பின்னால்
அது மறைந்து போகிறது
துன்பமும் காத்திருப்பும் நிறைந்த
பயணப் பெட்டிகளால்
சூழப்பட்டு
திரும்பிவரும் ஒரு ஆணையும்
பெண்ணையும்
பின்னால் விட்டு
அது மறைந்து போகிறது.

## 2. அறியப்படாத மனிதனின் கதை

பாதையின் முடிவில், ஆம்
பாதையின் முடிவில் அவன் நின்றான்
ஒரு முந்திரித் தோட்டத்து வெருளிபோல.
பாதையின் முடிவில் அவன் நின்றான்
பச்சை வீதிவிளக்கெதிர் நிற்பன் போல.
ஒரு பழைய கோர்ட்டை அணிந்து
கொண்டு
பாதையின் முடிவில் அவன் நின்றான்.

அவனது பெயர் 'அறியப்படாத மனிதன்'
வெள்ளை மாளிகைகள் அவன் எதிரே
கதவுகளை அடித்து மூடின.
மல்லிகைச் செடிகள் மட்டும்
காதல், வெறுப்பு இரண்டின் நிழலும்
படிந்த
அவனது முகத்தை விரும்பின.

அவனது பெயர்:
'அறியப்படாத மனிதன்'
அவனது தேசம்:
நாசப் பூச்சிகள், துயரம் என்பவற்றின்
சுமையின் கீழ் நசுங்கிக் கிடந்தது.

ஒரு நாள் அவன் குரல்
வெள்ளை மாளிகைகளின் சதுக்கத்தில்
ஒலித்தது
ஆண்கள், பெண்கள், பிள்ளைகள் எல்லாம்
வெள்ளை மாளிகைகளின் சதுக்கத்தில்
கூடினர்
அவன் தன் பழைய கோர்ட்டை
எரிப்பதைக் கண்டனர்
(அவனிடம் ஒரு பழைய கோர்ட்
இருந்தது)

வானம் ஒரு பச்சை முகிலால்
வீங்கித் தடித்தது
ஒரு வெள்ளை முகிலால்
ஒரு கறுப்பு முகிலால்
ஒரு சிகப்பு முகிலால்
நிறமற்ற ஓர் அபூர்வ முகிலால்
வானம் வீங்கித் தடித்தது.

அன்று
வானம் மின்னி முழங்கிற்று
மழை பொழிந்தது
மழை பொழிந்தது

அவனது பெயர் 'அறியப்படாத மனிதன்'
மல்லிகைச் செடிகள் மட்டும்
காதல், வெறுப்பு இரண்டின் நிழலும்
படிந்த
அவனது முகத்தை விரும்பின
வெள்ளை மாளிகைகளும்
இப்போது அவனை விரும்பின.



## வவ்வால்கள்

என் ஜன்னலில் வவ்வால்கள்
என் வார்த்தைகளை உறிஞ்சுகின்றன.
என் வீட்டு வாயிலில் வவ்வால்கள்.
பத்திரிகைகளின் பின்னால், மூலைகளில்
என் தலையின் ஒவ்வொரு அசைவையும்
கண்காணித்வாறு
என் காலடிகளைத் தொடர்கின்றன.

கதிரையின் பின்னால் இருந்து
வவ்வால்கள் என்னைக்
கண்காணிக்கின்றன
புத்தகங்களில், இளம்பெண்களின்
கால்களில்
என் கண்கள் தரிப்பதைக் கவனித்தவாறு
பாதைகளில் என்னைப்
பின்தொடர்கின்றன
அவை கண்காணிக்கின்றன;
தொடர்ந்தும் கண்காணிக்கின்றன.

என் அயலவரின் மாடியில் வவ்வால்கள்.
சுவர்களில் இலத்திரன் கருவிகள்
மறைத்து வைக்கப்பட்டுள்ளன.
இப்போது வவ்வால்கள்
தற்கொலை செய்யும் நிலையில் உள்ளன.

நான் பகல் ஒளியை நோக்கி
ஒரு பாதையைக் கிண்டுகிறேன்.

## 4 தளபதியின் சொத்து ஏரியல் ஷரோனுக்கு

தளபதியின் மேசையில் ஒரு பூச்சாடி
அந்தச் சாடியில் ஐந்து ரோஜாப்பூக்கள்
தளபதியின் டாங்கிக்கு ஐந்து வாய்கள்
அந்த டாங்கிகள் கீழே
ஒரு ஐந்து வயதுச் சிறுவன், ஒரு
ரோஜாப்பூ.
ஒரு சிறுவனும் ஐந்து நட்சத்திரங்களும்
தளபதியின் தோளுக்கு அலங்காரம்.
அவரது பூச்சாடியில் ஐந்து சிறுவர்களும்
ஒரு ரோஜாவும்
அவரது டாங்கியின் கீழ்
ஐந்து சிறுவர்களும் ஐந்து
ரோஜாப்பூக்களும்
அந்த டாங்கிக்கு எண்ணற்ற வாய்கள்

## 5. போதை

பல கடல்கள்
ஆனால் ஒரே ஒரு படகோட்டி -
தாயே என்னை ஆசீர்வதி.

ஒரே ஒரு பதாகை
அதற்கெதிராகப் பல காற்றுகள் -
என் சகோதரி, எனக்காக அழு.

ஒரே ஒரு உயிர் ஆனால் பல மரணங்கள்
என் அன்பே,
என்னை மறந்துவிடு.

## 6. நான் உன்னைக் குற்றம் சாட்டவில்லை

இந்தப் புயலுக்கு உன் இறக்கைகள்
சிறியன -
நான் உன்னைக் குற்றம் சாட்டவில்லை.
நீ நல்லவள், அச்சமுற்றுள்ளாய்
மேலும், நான் தான் சூறாவளி
புயலில் போராடும் ஒரு இயற்கையாக
இருந்து
பழக்கம் எனக்கு
பின்னர் நானே புயலாக மாறினேன்.

வெளிச்சம் அற்ற, நிழல்களற்ற
அல்லது புத்திசாதுரியமான
ஒரு மொழியற்ற புயலாக மாறினேன்

இப்போது நான் ஒப்புக்கொள்கிறேன்
நான் ஓர் இழந்த உலகத்தைச் சுற்றும்
ஓர் இழந்த கோள் என்பதை.

நான் உன்னைக் குற்றம் சாட்டவில்லை
ஒரு சிறு பூண்டுக்குப் புயலோடு என்ன
வேலை?

## 7. போரின் புதல்வர்கள்

அவனது திருமண இரவில்
அவர்கள் அவனைப்
போருக்கு இட்டுச் சென்றனர்

கடினமான ஐந்து வருடங்கள்

சிகப்புத் தள்ளுவண்டி ஒன்றில்
படுத்தவாறு
ஒருநாள் அவன் நாடு திரும்பினான்
அவனது மூன்று புதல்வர்கள்
அவனைத் துறைமுகத்தில் சந்தித்தனர்.

## 8. சுவர்க் கடிகாரம்

எனது நகரம் எதிரியிடம் வீழ்ந்தது
எனினும் கடிகாரம் இன்னும்
சுவரில் ஓடிக்கொண்டிருந்தது.

எனது சுற்றாடல் வீழ்ந்தது
எனது பாதையும் வீழ்ந்தது
எனினும் கடிகாரம் இன்னும்
சுவரில் ஓடிக்கொண்டே இருந்தது.

எனது வீடும் வீழ்ந்து நொருங்கிற்று
எனினும் கடிகாரம் இன்னும் சுவரில்
ஓடிக்கொண்டே இருந்தது.

பின்னர் சுவரும் வீழ்ந்தது
ஆயினும், கடிகாரம் தொடர்ந்தும்
டிக் டிக் என்று ஓடிக்கொண்டே இருந்தது. ●

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பனியும் பனையும்:


## உடையும் ஆன்மாவும் கருத்தியலும்!

பனியும் பனையும் எனும் இக்கதைத் தொகுதியில் (9 நாடுகளில் வாழும் 39 எழுத்தாளர்களின் கதைகள்) எழுதியவர்கள் ஒருவருமே முழுநேர எழுத்தாளர்கள் அல்ல. எழுத வேண்டும் என்ற தீவிர இலட்சியங்களோடு எழுத்தாளர்கள் என்ற தகுதிக்காக எழுதுபவர்களும் அல்ல. பல்வேறு வாழ்க்கைப்பிரச்சினைகள் பொறுப்புக்கள், ஐரோப்பாவின் இயந்திர மயமான வேகமான வாழ்க்கை ஜீவியத்துக்கான கடின உழைப்பு என்பவற்றுக்கிடையில் எப்போதாவது நேரங்கிடைக்கிற போது ஆத்ம சுகத்துக்காக எழுதுபவர்கள். அப்படியிருந்தும் தொகுபபிலிருக்கிற ஐரோப்பிய அமெரிக்கச் சிறுகதைகளைப் பார்க்கிற போது அதில் பெரும்பாலான வர்களுக்கு நல்ல அத்திவாரமும் சிறுகதை பற்றிய .சரியான புரிதலும் இருப்பது தெரிகிறது. ஆக உலக இலக்கியத் தரத்துக்கு இவர்களின் படைப்புக்கள் எட்டுவதற்கு இவர்களிடமிருந்து வேண்டிநிற்பது இத்துறையில் இவர்களின் கடின உழைப்பு மட்டுமே.

இவ்வாறான ஒரு ஆரோக்கியமான சூழல் 30களில் ஈழத்துத் தமிழ்ச்சிறுகதைத் துறையிலும் இருந்தது. ஈழத்துச் சிறுகதை மூலவர்களான சி. வைத்தியலிங்கம், சம்பந்தன், அ.செ.முருகானந்தன் ஆகிய மூவரினாலும் பண்படுத்தப்பட்ட இவ்வாரோக்கியமான ஆரம்பத்தை பிந்நாளில் சிதறடித்த 'பெருமை' விமர்சகர்களான கைலாசபதி, சிவத்தம்பி ஆகியோரையும், அரசியலில் குளிர்காய்ந்த இலக்கிய இயக்கமான இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தையுமே சாரும். அரசியல் கருத்துக்களைச் சொல்லுவதற்கான பிரச்சார சாதனமாகவே இலக்கியங்களை அவர்கள் பார்த்தனர். உருவம், உள்ளடக்கம் இரண்டினதும் சரியான இணைவே உயர்ந்த இலக்கியங்கள் என்பதை அவர்கள் பார்க்கத் தவறினர். தங்களது கருத்துக்களைச் சொல்லும் உள்ளடக்கத்திற்கு மட்டும் அதிக முக்கியத்துவம் கொடுத்தனர். உதாரணத்துக்கும் ஆதாரத்துக்கும் கைலாசபதி, சுபத்திரனை மட்டுமே தனது காலத்தின் கவிஞராக சிலாகித்ததைக் கூறலாம். சுபத்திரன் பொதுவுடமைக் கருத்துக்களை தனது கவிதைகளுக்கூடாகச் சொன்னார். பொதுவுடமைக் கருத்துக்களை பிரச்சாரமாகச் சொல்லாமலும் பொதுவுடமை அணிசாராமலும் கவிதை எழுதிய மஹாகவியை இருட்டடிப்புச் செய்தார். இவர்களில் எவரின் கவிதைகள் உலக இலக்கியங்களை நோக்கி இருந்தன என்பதை நான் சொல்லத் தேவையில்லை. சிவத்தம்பி கூட மிக அண்மைக்காலம் வரையில் (1989) இவ்வாறான ஒரு நிலையிலேயே இருந்தார் என்பதற்கு தெணியானுடைய நாவல் ஒன்றை தமிழில் வந்த சிறந்த நாவல் என சிலாகித்துச் சொன்னதை ஆதாரமாகத் தரலாம். இந்த விமர்சகர்களுடைய கடந்த கால வினைகளின் பயனைத்தான் இன்றும் நாம் பல ''முக்கிய எழுத்தாளர்களின்'' படைப்புக்களுக்கூடாக அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். 20ம் நூற்றாண்டின் குழந்தையாக அதன் முன்னரைப் பகுதியில் இருந்த சிறுகதை இன்று நடின் கோடிமர் (Nadine Godimer) முதலியவர்களின் வெற்றிகரமான பரிசோதனைகளின் பின்னர் எவ்வளவு புதிய புதிய சாத்தியங்களையெல்லாம் உருவாக்கி விட்டுள்ளது. இவை பற்றி எந்தவித புரிதலும் இன்றி, தமிழில் உள்ள சிறப்பான சிறுகதைகள் பற்றிய புரிதல்கள் கூட இன்றி மிகப்பலவீனமானதும் மோசமானதுமான ஒரு மொழியில் எழுதிக் கொண்டிருக்கின்றனர். உதாரணத்துக்கு பெனடிக்ற் பாலன், ராஜ சிறீகாந்தன், புலோலியூர் ஆ. இரத்தினவேலோன் முதலியோரைத் தரலாம். காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள வேண்டும் என்பதற்கான பாரம்பரிய கம்யூனிசக் கட்சிகளும் வால்பிடிக்கும் ஒரு அரசாங்கம் அரச கட்டிலேறிய சமயமாகிய இப்போது பல சிறுகதைப் புத்தகங்களை எழுதிக் குவிக்கின்றனர்.

தொகுப்பிலிருக்கிற பெரும்பாலான சிறுகதைகள் தமிழில் இன்று எழுதப்படுகின்ற உயர்ந்த சிறுகதைகள் அளவுக்கு தரத்தில் இல்லாவிட்டாலும் சில சிறுகதைகள் அதற்கு அண்மையில் வந்துவிட்டன எனச் சொல்லலாம். அதைவிட முக்கியமானது எனக்கு இக்கட்டுரையை எழுத உந்துதலைத்தந்தது, யாழ்ப்பாணத்து சாமானிய (Mainstream) கருத்தியலை ஆதர்சமாகக் கொண்ட ஈழத்தமிழர்களில் கருத்தியல், இச்சிறுகதைகளில் சிலவற்றினூடாக உடைக்கப்பட்டிருக்கிறது என்பதுதான். இந்த கருத்தியலில் உடைவு இது காலவரையான ஈழத்துச் சிறுகதைகள் எதிலும் வரவில்லை. ஏனெனில் உடைவுக்கு ஆதாரமான வாழ்நிலையில் தலைகீழான மாற்றம் எதுவும் நடைபெறவில்லை. புலம்பெயர்ந்தவர்களின் வாழ்நிலையில் இவ்வாறான தலைகீழான மாற்றம் நிகழ்ந்த போதுதான் இது சாத்தியமாகிறது. ஆரவாரமற்றதாக, சந்தடியற்றதாக நிகழுகின்ற இவ்வுடைவு மிருதுவானது எனினும் மிக உறுதியானது; இனியொருமுறை முன்னைய கருத்தியலுக்கு மீளமுடியாதது.

ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் லண்டன் 'அரங்கேற்றங்கள்', கலைச்செல்வனுடைய (பிரான்ஸ்) 'கூடுகளும்...', சுசீந்திரனுடைய (ஜேர்மனி) 'புருஷ வீதிகளில்', சக்கரவர்த்தியினுடைய (கனடா) 'மனசு', பவானுடைய (கனடா) 'முகமிழந்த மனிதர்கள்' ஆகிய சிறுகதைகளில் கற்பு, சாதி, ஆணாதிக்கத்தின் சில கூறுகள் ஆகியவை பற்றியதான கருத்தியலின் உடைவு மிகக்கலாபூர்வமாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. உடைவுக்கூடாக நிகழ்காலத்தில் பின்வரும் புதிய கருத்தியல்கள் வழக்கத்துக்கு வருகின்றன.




(அ) கற்பு உடைபட பெண்கள் திருமணத்துக்கு முன்னரேயே உறவும், உடலுறவும் கொள்ளுதல் வழக்கமாதல் திருமணம் ஆயிரங்காலத்துப் பயிரல்ல: (கூடுகளும்...')

(ஆ) சாதிகளின் உடைவு (முகமிழந்த மனிதர்கள்)

(இ) விபச்சாரி அல்லாத பெண்களுடனான, ஆண்களின் உறவு நட்பைப் போல சாதாரணமாதல். (விபச்சாரிகளுடனான ஆண்களின் உறவு, யாழ்ப்பாண கருத்தியலுள் 'ஏற்றுக் கொள்ளப் பட்டிருந்தது'. சாதி அடிப்படையிலும் விபச்சாரம் இந்நூற்றாண்டின் முன்னரைப் பகுதியில் யாழ்ப்பாண கலாசாரத்தில் இருந்தது. படைப்புக்களிலும் இது பிரதிபலித்தது). (உ+ம் புருஷ வீதிகளில்)

கலைச்செல்வனுடைய 'கூடுகளும்...' என்ற கதையில் யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற பெற்றோருக்கு பிரான்சில் பிறந்த பெண் குழந்தை மொழியாலும் கலாசாரத்தாலும் தனது பெற்றோருக்கே அந்நியமாகிறது. அந்த அந்நியம் முழுமையடைந்து மகள் தங்களை பிரிந்துவிடுவாள் என்ற அச்சத்தில் தனக்கான முடிவுகளை அவளையே எடுக்க அனுமதிக்கின்றனர். அவள் தனது 16 வயதில் தனது ஆண்நண்பனோடு போய் வாழ்கிறாள். பெற்றோர் மீதான பாசத்தையும் வைத்திருக்கிறாள். தொகுப்பில் என்னை மிகவும் பாதித்த சிறுகதை.

ராஜேஸ்வரியினுடைய 'அரங்கேற்றங்கள்' லண்டனில் குடியேறிய மிக இறுக்கமான யாழ்ப்பாண குடும்பமொன்றிலுள்ள இளம் பெண்ணூடாக யாழ்ப்பாணக் கலாசார போலித்தனங்கள் வெளிப்படுத்தப் படுகிறது.

சுசீந்திரனுடைய 'புருஷவீதிகளில்' ஒரு யாழ்ப்பாண இளைஞன் இன்னொரு ஐரோப்பிய பெண்ணுடன் மது அருந்தி வீதியிலேயே புணருவதைச் சித்திரிக்கிறது.

சக்கரவர்த்தியினுடைய 'மனசு'இல் ஒரு வெள்ளைக்காரியை மணந்து கொண்ட யாழ்ப்பாண இளைஞனின் கதை. குடும்பம்பற்றிய வேறுபட்ட கருத்தியல்களைக் கொண்ட இருவருக்குமிடையில் வரும் முரண்பாடுகளைச் சித்திரிக்கிறது.

பவானின் முகமிழந்த மனிதர்களில் ஒரு யாழ்ப்பாண உடையார் குடும்பத்திலிருந்து சென்ற இரண்டு சகோதரர்கள் ஐரோப்பாவில் சீமான் வீட்டுவேலைக்காரர்களாய் இருக்கிறார்கள் என்பதைச் சித்திரிக்கிறது.

தொகுப்பில் அடுத்தபடியாக முக்கியத்துவம் பெறுபவர்கள் ஜீவமுரளி (ஜேர்மனி) ஜோர்ச் குருச்சேவ் (கனடா) சாள்ஸ் (ஒல்லாந்து) பொ.கருணாகரமூர்த்தி (ஜேர்மனி) என்பவர்கள்.

ஜீவமுரளியின் '... பனியும்' என்ற கதை ஆசிய ஐரோப்பிய நாடுகளின் மீதான கடந்த கால நிகழ்கால காலனியாதிக்கத்தின் பின்னணியில் எழுதப்பட்ட உயர்ந்த கதை. இந்த அனுபவமும் முழுக்க முழுக்க தமிழுக்கு புதியது. இந்தத் தொகுதியிலிருக்கிறவற்றினுள் புதிய சாத்தியங்களை ஓரளவு உள்வாங்கிய செளந்தர்யமான ஒரு மொழியினாலும் அவற்றின் கலைத்தன்மையை உயர்த்திய்வை இரண்டு கதைகள். ஒன்று ஜீவமுரளியினுடையது. மற்றது ஜோர்ச் குருச்சேவின் 'Ex அலைகளில்' என்ற கதை (இது சரிநிகரில் மறுபிரசுரம் செய்யப்பட்டது)

புகலிடச் சூழலில் பிறந்த தமிழ்க் குழந்தைகளின் உளவியலின் பின்னணியில் எழுதப்பட்ட பொ. கருணாகரமூர்த்தியினது 'குழந்தை விசாரங்கள்' உம் சாள்சினுடைய 'இன்று...' என்ற கதையும் கூட தொகுப்பில் உயர்ந்து நிற்கின்றன.

சந்திரா தேவியினுடைய (நோர்வே) 'கலாசாரங்கள்', தேவகி ராமநாதனுடைய (நோர்வே) 'போயின', ஆனந்த பிரசாத்துடைய (கனடா) 'அவர் நான்', அ. கந்தசாமியினுடைய (கனடா) 'விடிவு தூரத்தில்'. தேவாவினுடைய (ஜேர்மனி) 'ஆண்பிள்ளை', முல்லையூரானுடைய (டென்மார்க்) சுழற்சி என்பனவும் சிறந்த கதைகளாகத் தொகுப்பில் உள்ளன.

பின்வருன சில சம்பவங்கள் அல்லது நிகழ்ச்சிகளின் பதிவுகள் என்பவற்றோடு முடிந்து விடுகின்ற கதைகள் எனினும் மோசமானவை அல்ல. புகலிடச் சூழலில் இவையும் நம்பிக்கையும் தருவன. அவையாவன. கலாமோகனின் 'குளிர்', சுகனின் 'மாலை மயக்கங்கள்', புவனின் 'அன்புள்ள நண்பனுக்கு', ஆதவனின் 'வரம்', க. நவத்தின் 'க. குழம்பும் க. முரண்பாடும்', வ.ந.கிரிதரனின் 'மா(நா)ட்டுப் பிரச்சினை' நிலா குகநாதனின் பிரசவம், லோகாவினுடைய 'அடுத்த தரிப்பு', செல்வ மதீந்திரனுடைய 'அகதி... அ...' என்பன கலாமோகனின் கதையும் இப்பகுதிக்குள் வருவது தொகுப்பாளர்களின் தவறே. இதைவிட எவ்வளவோ உயர்ந்த சில வேறுகதைகளை கலா மோகன் எழுதியுள்ளார்.

இத்தொகுப்பில் மோசமான சிறுகதைகள் எனத் தேறுபவை நாலே நாலு கதைகள் தான். முதலாவது கரவைதாசன் (டென்மார்க்) எழுதிய 'கதை தொடரும்' என்ற கதை. போராட்டப்பின்னணியில் சாதிப் பிரச்சினையை சொல்ல வருகிற இக்கதை உருவத்தைப்பற்றி எந்தவிதக் கவலையுமின்றி உள்ளடக்கத்தை மட்டுமே கருத்திற்கொண்டு எழுதப்பட்ட ஒரு காலத்தில் கைலாசபதியும் சிவத்தம்பியும் கைதூக்கிவிட்ட பிரச்சார மரபின் தொடர்ச்சிபாகவே வந்திருக்கிறது.

ப.வி. சிறீரங்கன் (ஜேர்மனி) இனது ஆவீன மழை, அளவெட்டி சிறீசுக்கந்தராஜா (கனடா)வினது 'மரபுகளும் உறவுகளும்' எம். அருட்குமாரனது (பிரித்தானியா) சபிக்கப்பட்டவர்கள் என்பனவும் மோசமான கதைகளே. இக்கதைகளின் பலவீனம் கரவைதாசனின் பலவீனத்திற்கு மறுதலையானது. அதாவது உள்ளடக்கத்தைப்பற்றிக் கவனத்திலெடாது உருவத்தின் ஒரு கூறாகிய மொழிக்கு அதீத முக்கியத்துவம் கொடுத்து ஒருவகையான அலங்கார நடைக்கும் அடிமையாகி அந்நடையின் போக்கில் எழுதிச் செல்வதுதான். இக்கதைகளின் பின்னணியில் குறிப்பான எந்தக் கருத்தியலும் இருக்காது. ஏனெனில் எழுதுபவர்கள் எல்லோரும் குறித்த நடைக்கு சோரம் போய்விட்டவர்கள். இந்த மரபின் பிதாமகர் சாட்சாத் எஸ். பொத்துன்னுரையே என்பதை 'நற்போக்கு' என்ற லேபல் (Label) கோசத்தை முன்வைத்த காலத்திலிருந்து இன்றுவரையுமான அவரது படைப்புக்களை (?) படித்தவர்கள் கண்டு கொள்வார்கள். அதிலும் குறிப்பாக 'மரபுகளும் உறவுகளும்' என்ற கதையில் அதிகம் எஸ்.பொவின் அலங்கார நடையின் பாதிப்பு அப்பட்டமாகவே தெரிகிறது. இது எஸ்.பொவே குறித்த நபருக்காக எழுதியதாகவோ அல்லது குறித்த கதையில் அதிகம் தனது மாற்றங்களை புகுத்தியதாகவோ கூட இருக்கலாம் என்று தோன்றுகிறது.

இறுதியாக இருப்பது என்.கே மஹாலிங்கத்தின் (கனடா) 'வெறுமை' என்ற கதை.

கனடாவில் இருந்தாலும் புங்குடுதீவு சர்வமத சங்க ஆதீன மரபு தவறாமலேயே எழுதியுள்ளார். மு.பொ. இது சிறுகதையல்ல மெய்யுள் என்று கூறக்கூடும். எனவே அதை விமர்சிப்பதைத் தவிர்த்து விடுகிறேன்.

பின்னிணைப்பாக இருப்பது வ.ஐ.ச ஜெயபாலனின் செக்குமாடு என்ற குறுநாவல். இந்நாவல் நோர்வேஜிய மொழியில் மொழி பெயர்க்கப்பட்டு ஜெயபாலனுக்கு நோர்வே எழுத்தாளர் சங்க விருதொன்றையும் பெற்றுக்கொடுத்தது. இதன் உயிர்ப்பான பகுதிகள் குமரனுக்கும், கமலிக்கும் இடையிலான உறவையும் உடலுறவையும் பற்றியவை. தூய்மைவாதிகளான வீரகேசரி ஆசிரிய பீடம் நாவலின் உயிர்ப்பான பகுதிகளை முறைகேடாக சுயதணிக்கை செய்து சக்கையை மட்டும் பிரசுரித்தது. எஸ்.பொ. இத்தொகுதியில் போட்டிருப்பதும் வீரகேசரியின் சக்கைப்பெயர்ப்பையே.

இறுதியாக இத்தொகுப்பிலிருக்கிற ஒஸ்திரேலியக் கதைகள் பற்றியும் சுருக்கமாகச் சொல்லியாக வேண்டும். ஐரோப்பாவிலோ, கனடாவிலோ இருக்கிற மாதிரியான செழுமையான புலம்பெயர் இலக்கியம் ஒஸ்திரேலியாவில் இல்லை. ஒஸ்திரேலியாவுக்கு புலம் பெயர்ந்துவந்த ஈழத்துத் தமிழர்களின் சாமானிய கருத்தியலாக இருப்பதும் அதே யாழ்ப்பாணிய பழைய கருத்தியல்தான்.

முருக பூபதியும் மாத்தளை சோமுவும் புலம்பெயர்வதற்கு முன்னமே எழுத்தாளர்களாக இனங்காணப்பட்டவர்கள். ஆனாலும் அவர்களின் சிறுகதை பற்றிய புரிதல் நவீன சிறுகதையின் சாத்தியங்களை உள்வாங்காததாகவோ உள்ளது. அப்படி உள்வாங்கியிருந்தாலும் அவற்றை தமது சிறுகதைகளில் பிரயோகிக்காதவர்களாகவே உள்ளனர். இன்னமும் அவர்கள் சிறுகதையில் கதைப்பின்னலுக்கு (Plot) மட்டுமே அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றனர். கதைப்பின்னலின் விறுவிறுப்பு மட்டுமே. ஒரு சிறு கதையின் வெற்றி தோல்வியை தீர்மானிக்கின்றது என்று கருதுகின்றனர் போலும்.

ஏனைய சில ஒஸ்திரேலிய கதைஞர்களின் சிறுகதை பற்றிய புரிதல் சரியாக இருக்கின்ற போதிலும் எழுத்துக்கள் மிக ஆரம்ப நிலையிலேயே இருக்கின்றன. மொத்தத்தில் ஐரோப்பிய கதைகளோடு ஒப்பிடுகிறபோது ஒஸ்திரேலியக் கதைகள் மிகுந்த ஏமாற்றமே தருகின்றன.

ஏறத்தாழ ஒரு தாசப்தத்திற்கு மேற்பட்ட வரலாற்றைக் கொண்டே புலம்பெயர் இலக்கியத்தில் இது ஒரு மைல் கல். ஆனால் புலம்பெயர் இலக்கியத்திற்கு விசுவாசமாக நடக்காமல் தனது நலனுக்காக எஸ்.பொ. இதனைப் பயன்படுத்திக்கொண்டு விட்டார் என்று தோன்றுகிறது. படைப்பாளிகள் அனைவருக்கும் கொடுக்கவேண்டிய பதிப்புரிமையை உரிமைப் பதிவு என்று மொட்டையாகப் போட்டதிலும் (வேண்டிய பொழுது வேண்டிய பதிப்புப்போட) சுஜாதாவிடமிருந்து ஒரு ஜனரஞ்சகமான முன்னுரை வாங்கியதிலிருந்தும், இதன் வியாபார நோக்கம் தெளிவாகவே தெரிகிறது. அதற்கு வசதியாக, தன்து முயற்சியை கேள்விக்குட்படுத்தாத இந்திரா பார்த்தசாரதியையும் தொகுப்பாளராகப் போட்டிருக்கிறார். எஸ்.பொ. (இ.பா.வுக்கும் புலம்பெயர் இலக்கியத்துக்கும் என்ன சம்பந்தம்) உண்மையில் இத்தொகுப்பாக உழைத்த வேறு சிலரை இருட்டடிப்புச் செய்துள்ளார் எஸ்.பொ. அப்படியிருந்தும் விபத்தாக புலம்பெயர் இலக்கியத்தின் சில உச்சங்கள் எனப்படுகிற சில நல்ல சிறுகதைகளும் ஐரோப்பிய, வட அமெரிக்கச் சிறுகதைகளும் வந்துவிடுகின்றன.

**நட்சத்திரன் செவ்விந்தியன்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# கிரிக்கெட்: சிங்கள பிற்போக்குத் தேசியத்தின் குறியீடு ?

துஷ்யந்தி

கடந்த மாதம் கொழும்பில் நடைபெற்ற இந்திய - இலங்கை கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான சர்வதேசப் போட்டிகளின் போது ஆச்சரிய மூட்டும், அதேநேரம் சிந்திக்க வைக்கும் ஒரு சம்பவம் நடைபெற்றது. '2வது டெஸ்ட்' போட்டியின் இறுதி நாளன்று, பகல் மதியபோசன இடைவேளையின் போது இராணுவ ஹெலிகொப்டர் ஒன்று விளையாட்டு மைதானத்தின்மேல் வட்டமடித்தது. தாழப்பதிந்த ஹெலிகொப்டரில் இருந்து நூலேணியில் மைதானத்தில் இறங்கினார் விசேட அதிரடிப்படையைச்சேர்ந்த ஒரு வீரர். தரையிறங்கிய அவர் தனது முதுகுப்பையிலிருந்து, அன்றைய தினம் வெற்றி பெறும் அணிக்கு வழங்கப்படும் வெற்றிக் கிண்ணத்தை (Trophy) பத்திரமாக வெளியிலெடுத்து 'இராணுவ பாணியில்' ஓடிச்சென்று கிரிக்கெட் சபைத் தலைவரிடம் கையளித்தார்.

அதிரடிப்படையினால் இராணுவ ஹெலிகொப்டரில் பாதுகாப்பாகக் கொண்டு வந்து கொடுக்குமளவுக்கு அக்கிண்ணம் ஒன்றும் பெறுமதிமிக்கதல்ல. ஆனால், இராணுவ கௌரவம் வழங்கப்படுமளவிற்கு 'கிரிக்கெட்' உயர்ந்துவிட்டுள்ளது என்பதையே இது வெளிப்படுத்துகிறது. இன்று சிங்களத்தேசத்தைப் (Sinhala Nation) பொறுத்தவரையில் அதன் அனைத்து கௌரவத்திற்கும், மரியாதைக்கும் பாத்திரமானதாய் விளங்குவது இராணுவமே. இந்த இராணுவமே 'சலாம்' போடுமளவிற்கு கிரிக்கெட் இருக்குமென்றால், இதை இனியும் வெறுமனே ஒரு விளையாட்டாக மாத்திரம் பார்க்க முடியாது. இதற்கு இன்னும் எத்தனை முகங்கள் உள்ளன. அவை கட்டமைக்க முயலும் சமூக உளவியல் என்ன? அது மொத்த சமூகத்தையும் எதை நோக்கிக் கொண்டு போகப் போகிறது என்பதை இச்சந்தர்ப்பத்தில் நாம் மதிப்பிட்டேயாக வேண்டியுள்ளது.

### கிரிகெட்டின் சமூக உளவியல்

ஒரு நூற்றாண்டுக்கும் மேலான வரலாற்றைக்கொண்டது கிரிக்கெட் விளையாட்டு. ஆரம்பத்தில் இது மேலைத்தேய 'வெள்ளைப் பிரபுக்களின்' விளையாட்டாகவே இருந்து வந்தது. இலங்கையிலும் காலனிய ஆட்சி செய்தவர்களாலேயே கிரிக்கெட் விளையாட்டு அறிமுகப்படுத்தி வைக்கப் பட்டது. அதன் பின்னர், வெள்ளையரைப்போல், பாவனை பண்ணிய உள்நாட்டு தமிழ் - சிங்கள பிரபுக்களினால் இவ்விளையாட்டு தொடர்ந்து விளையாடப்பட்டு வந்தது. அப்பொழுதெல்லாம் சாதாரண மக்களுக்கு இது பற்றி எதுவும் தெரியாது. கிரிக்கெட், குறிப்பாக தென்னாசியாவின் சாதாரண மக்களது விளையாட்டாக எக்காலப்பகுதியில் மாறியது?

இது பற்றி ஜனக பியன்வில (Pravada Feb/March 1996) இவ்வாறு கூறுகிறார். ''கிரிக்கெட் எவ்வாறு தென்னாசியாவில் இந்தளவுக்கு வெகுஜனத் தன்மையுடையதாகியது? கடந்த காலத்தில் வெள்ளைக் காலனித்துவ வாதிகளுக்காயிருந்த விளையாட்டு இந்தளவு வெகுஜன பங்குபற்றலை எப்படி அடைந்தது? தென்னாசிய பிராந்தியத்தின் மாற்றம் பெறும் பொருளாதார அரசியல் இயக்கப் போக்குடனும், வெகுஜனத் தொடர்பூடகத்தினூடாகவும் (Mass Media) நடைபெறும் கலாசார சர்வமயமாதலின் (Cultural Globalization) இயக்கப்போக்குடனும் இது நடைபெற வேண்டியேற்பட்டது. சர்வமயமாதல் இயக்கப்போக்கானது (Globalization Process) உலகப்பொருளாதார மற்றும் அரசியல் கட்டமைப்பின் வரலாற்று வழியில் உருப்பெற்றதாகும். தொழில்நுட்ப முன்னேற்றமானது, - குறிப்பாக தொடர்பூடகங்களிலான (Communications) முன்னேற்றம், - முதலாளித்துவ உலகப் பொருளாதாரத்தின் கலாசார விளைவுகளை சர்வமயப்படுத்தியது. இப்படியாக உலகச்சந்தைக்காக எல்லைகளைத் தகர்த்த முதலாளித்துவம் பல விடயங்களையும், சர்வமயப்படுத்தியது போல் கிரிக்கெட்டையும் சர்வமயப்படுத்தியது.

இலங்கையில் 1977இல் ஆட்சிக்கு வந்த ஜே.ஆர் அரசாங்கம் திறந்த பொருளாதாரக் கொள்கையைப் பிரகடனப்படுத்தியது. அதையொட்டி, பல்வேறு துறைகளும் முதலாளித்துவ நலன்களைக் காக்கும் நோக்கில் வளர்ச்சி பெற்றன. ''கோமான்களின் விளையாட்டான' கிரிக்கெட் முதலாளித்துவத்தின் குறியீடாகும், என ஜனக பியன்வில குறிப்பிடும் இவ்விளையாட்டு இலங்கையில் வளர்த்தெடுக்கப்பட்டது, முதலாளித்துவத்தின் குறியீடாக மாத்திரமல்ல, இலங்கையில் மேலாதிக்கம் செய்யும் சிங்களப் பிற்போக்கு தேசிய வாதத்தின்/ இனவெறியின் குறியீடாகவும் தான்.

ஜே.ஆரின் காலகட்டமானது இலங்கையின் பொருளாதாரம் மற்றும் அரசியல், குறிப்பாக தேசிய பிரச்சினையில் தீர்க்கமான திருப்புமுனைகளை ஏற்படுத்திய காலகட்டமாகும். ஆட்சிக்கு வந்ததும் ஜே.ஆர் தன்னை நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக ஆக்கிக்கொண்டார். முன்னாள் பிரதமரின் குடியுரிமையைப் பறித்தார், 80'இல் மாபெரும் பொது வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட ஆயிரக்கணக்கான அரச ஊழியர்களை வேலை நீக்கம் செய்தார். அது வரை உழைக்கும் மக்களின், மாணவர்களின் கிளர்ச்சிகளை அடக்குவதற்கு பொலிசும், இராணுவமுமே அனுப்பப்பட்டு வந்தன. ஆனால் ஜே.ஆர். குண்டர் கூட்டங்களை உருவாக்கி இவற்றை ஒடுக்கினார். இவ்வாறு ஜே.ஆர் குண்டர் கூட்டங்களை, இலங்கை அரசியலின் பொது நீரோட்டத்தில் முக்கிய பாத்திரம் வகிக்கும் திரைமறைவு சக்திகளாக்கினார். 82'ல் நடைபெற வேண்டிய பொதுத் தேர்தலை நடத்தாததோடு 'மக்கள் விருப்பம்' எனும் பெயரில் ஒரு நாடகத்தை ஆடி மீள ஆட்சியை உறுதிப்படுத்திக்கொண்டார். 83' ஜூலையில் திட்டமிட்டு தமிழர் மீது வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டார். இதில் 1500இற்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். 1,50,000இற்கு மேற்பட்டோர் வீடிழந்தனர். இது தொடர்பாக ஜே.ஆர் நாட்டு மக்களுக்கு விடுத்த செய்தியில் ''சிங்கள மக்கள் தமது தேசிய அபிலாஷைகளை வெளிப்படுத்தினர்'' எனக்கூறினார். (இச்செய்தி வானொலியில் ஒலிபரப்பாகையில் கொல்லப்பட்ட தமிழர் சடலங்கள் வீதிகளில் பாதி எரியுண்ட நிலையில் கிடந்தன; புகலிடமற்ற நிலையில் உயிரைப் பாதுகாத்துக் கொள்ள தமிழர் பரிதவித்துத் திரிந்துகொண்டிருந்தனர்...) பிற்காலத்தில் பாராளுமன்றத்தில் கெடுபிடியேற்பட்ட போது, திகதியிடப்படாத ராஜினாமாக் கடிதங்களை மந்திரிமார் மற்றும், பா.உ.க்களிடமிருந்து நிர்ப்பந்தமாக கேட்டுப்பெற்றார். இப்படியாக ஒரு எதேச்சாதிகாரவாதியாக இனவெறி கொண்டவராக ஜே.ஆர் செயற்பட்டார்.

இவரது காலத்திலேயே வெகுஜனப் பங்குபற்றலுடன் கூடிய கிரிக்கெட் விளையாட்டை வளர்த்தெடுப்பதற்கான ஆரம்பப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

''சிங்களவருக்கு இலங்கையை விட்டால் வேறு நாடு கிடையாது'' எனும் சிந்தனையை சமகால சிங்கள தேசிய அரசியலில் ஆழப்பதித்தவரும் ஜே.ஆரே. அதைவிட எதற்கெடுத்தாலும் இந்தியாவுடன் இலங்கையைத் தொடர்புபடுத்தி, இந்தியாவைவிட தமது நிலை உயர்ந்துவிடும் எனும் கருத்தைக் கற்பனைத் தனமாக மக்கள் மத்தியில் விதைத்தவரும் இவரே. ''எதிர்காலத்தில் நாம் தென் ஆசியாவுக்கே உணவு வழங்குவோம். 2000ம் ஆண்டில் இலங்கையில் உற்பத்தியாகும் மின்சாரத்தை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்வோம். தென்னிந்தியாவில் விவசாயம் தொடங்குவதற்கு முன்னரே இலங்கையில் நீர்ப்பாசன முறையில் பயிர்ச்செய்கை தொடங்கிவிட்டது... போன்ற பல ''பொன்மொழிகளும்'' இவர் காலத்தவையே. இது ஒரு வித தாழ்வுச் சிக்கலின் இயலாமையின் பிரதிபலிப்பாகும். இத்தாழ்வுச் சிக்கலானது, அனைத்தையும் மேலிட வேண்டும் எனும் எதிர்க்கோடி நிலைக்கு/ வெறித்தனமான உணர்வுக்கு இட்டுச் செல்கிறது. பிற்போக்கு சிங்களத் தேசியவாதம் இப்போக்கை வெளிப்படையாகவே காட்டிக் கொள்கிறது என்றால் அது மிகையாகாது.

### இன மற்றும் கலாசார மேலாதிக்கம்

முதலாம் உலக யுத்தத்திற்கு பிந்திய ஜெர்மானிய உளவியலை தாழ்வுச் சிக்கலுடன் தொடர்புபடுத்திக்காட்டும் சமூகவியலாளர்கள், ஆரிய இன உணர்வு/ உலகையே தமக்குக் கீழ்ப்படுத்திட முயன்ற வெறி ஆகிய வற்றிற்கு தாழ்வுச்சிக்கலையும் ஒரு காரணமாய்க் கூறுவர். ஜெர்மன் நாசிகளுக்கு, பாசிசத்தைக் கட்டியமைப்பதற்கான பின்புலமாய் பிற்போக்குத் தேசியவாதம்/ ஆரியஇன வெறி இருந்தது. ஜெர்மன் பிற்போக்குத் தேசியவாதத்தைக் கட்டியமைக்கும் போக்குகளில் ஒன்றாக அவர்கள் விளையாட்டுக்களை உபயோகித்துக்கொண்டனர். இது பற்றி 'Cats Eyes பகுதி (Sunday Island Aug.17,1997) இவ்வாறு விபரிக்கிறது. ''..ஹிட்லரின் ஜெர்மனியில், விளையாட்டுக்கள் ஜெர்மன் பாசிசத்தின் வெற்றியைக் கொண்டாடும் விழாக்களாயிருந்தன. 1936பெர்லினில் நடைபெற்ற ஒலிம்பிக்கில் பலபோட்டிகளிலும் வெற்றிபெற்ற கறுப்பு அமெரிக்க ஓட்டவீரரான Jesse Owensஐ ஹிட்லர் இழிவுபடுத்தினார். பாசிசவாதிகளுக்கு இன மற்றும் கலாசார மேலாதிக்கத்தை நிறுவுவதற்கான முயற்சிகளிலொன்றாக விளையாட்டுக்கள் உள்ளன'' இவை ஆழமான கவனத்தை வேண்டி நிற்கும் வரிகள். இனவெறி மற்றும் தேசிய, கலாசார மேலாதிக்கம் ஆகியவற்றின் அருகாமையில் விளையாட்டுக்கள் வந்து கொண்டிருப்பதற்கு ஒலிம்பிக் வரலாறே சான்று.

1982இல் இலங்கைக் கிரிக்கெட் அணி சர்வதேசப் போட்டிகளில் பங்கு பற்றும் அந்தஸ்தைப் பெற்றது. இதற்காக உத்தியோகபூர்வமாக நடைபெற்ற அங்குரார்ப்பண போட்டியில் இலங்கை அணி இந்தியாவுடன் விளையாடியது. போட்டிகளில் கலந்து கொள்வதற்காக இந்திய அணி இலங்கை வந்திருந்தது. சிங்கள இனவெறி மூர்க்கமாக வளர்ச்சி பெற்று வெளிப்படத் தொடங்கியிருந்த காலகட்டம் அது. ''தமிழர் என்றால் இந்தியா; இந்தியா என்றால் தமிழ்'' என்றே பார்த்துப் பழகிவிட்ட சிங்கள மக்கள் இலங்கை வந்திருந்த இந்திய அணியை பகைமையுடன் பார்த்தனர். வர்க்க, பாலின, மத, எல்லைகளைக் கடந்து இப்பார்வை அவர்களிடமிருந்து பகிரங்கமாக வெளிப்பட்டது. வளர்ச்சி பெற்று வந்த தமது இனவெறி உணர்வுகளை வெளிப்படுத்திக்கொள்ள முடியாதிருந்த அவர்கள் அதற்கான களமாக கிரிக்கெட் களத்தைக் கண்டனர். உடனே அதைப் பற்றிப் பிடித்துக்கொண்டனர். இந்திய அணி விளையாடும் போது காடையர் கூட்டம் கல்லெறிந்தது, ஊளையிட்டது, தோசை, சாம்பார் எனக்கத்தியது. சில நேரங்களில் மைதானத்திற்குள்ளும் இறங்கி விடும்... அப்போட்டியில் இலங்கை வெற்றி பெற்றது. வெற்றியைக் கொண்டாட ஜே.ஆர் தாமே நேரில் மைதானத்திற்கு வந்தார். சொற்பொழிவாற்றினார். மறுநாள் வேலை நாள். தனது மகிழ்ச்சியைத் தெரிவிக்க அந்நாளை பொது விடுமுறை நாளாக்கினார். இப்படியாக ஜே.ஆரின் காலத்திலேயே கிரிக்கெட் விளையாட்டு சிங்கள பிற்போக்கு தேசிய அரசியலில் கலப்பதற்கு அத்திவாரமிடப்பட்டுவிட்டது.

### கிரிகெட்டும் சிங்கள தேசமும்

கிரிக்கெட்டை சிங்களத் தேசத்துடன் இனம் காணும் உளவியலுக்கு எதிர்நிலையாக இன்னுமொரு உளவியலும் உருவாகி வந்தது. அது தான் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் உளவியல். சிங்கள இனவெறியினால் ஓரங்கட்டப்பட்ட இம்மக்கள், தமது அரசியல் அபிலாஷைகளை மாத்திரமல்ல, குறைந்த பட்சம் ஒரு விளையாட்டினூடாகக் கிடைக்கும் வெற்றிக் களிப்பைக் கூட அனுபவிப்பதற்கான வாய்ப்புகள் மறுக்கப்பட்டவர்களாயிருந்தனர். முற்றும் சிங்கள விளையாட்டு வீரர்களாலான சிங்களத் தேசத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அணியை இம்மக்களால் தமது பிரதிநிதியாய் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அவர்களும் அதைத் தமது அரசியலின் எதிர்நிலையாகவே பார்த்தனர்.

அதனால் இந்திய மற்றும் பாகிஸ்தான் அணிகளில் தம்மை இனங்கண்டனர். இந்தியாவுக்கு தமிழர்களும், பாகிஸ்தானுக்கு முஸ்லிம்களும் முன்னுரிமையளித்தனர். அதேபோல், தமிழர்கள் பாகிஸ்தானுக்கு இந்தியாவுக்கு அடுத்த இடத்தையும், முஸ்லிம்கள் இந்தியாவுக்கு பாகிஸ்தானுக்கு அடுத்த இடத்தையும் வழங்கினர். இவ்விரு தேசங்களை (Nations) சார்ந்த மக்களுமே இலங்கையின் தோல்வியை இரகசியமாக வரவேற்றனர்.

இப்படியாக, சிங்கள தேச உளவியல் மற்றும் அதற்கு வெளியேயிருக்கும், அதனால் ஒடுக்கப்படும் தேசங்களின் உளவியல் ஆகியவற்றை வெளிப்படையாகவே நாடிபிடித்துக்கூறிடும் களமாய் கிரிக்கெட் வளர்ந்து.

சிங்கள மக்களின் உளவியலை ஆட்சிசெய்யும் பிற்போக்கு தேசியவாத/இனவெறி உணர்வுகளை பலப்படுத்தும் காரணிகளிலொன்றாய் கிரிக்கெட் இருப்பதைக் கண்டு கொண்ட ஆட்சியாளர்கள், கிரிக்கெட்டை மேலும் ஊக்குவிப்பதன் மூலம் மக்களது பிற்போக்கு தேசியவாத உணர்வுகளை மேலும் ஆழப்படுத்தி அதன் மூலமும் அரசியல் நடத்த முடியுமென்பதைக் கண்டு கொண்டனர்.

இதை நன்கு விளங்கிக்கொண்ட பிரேமதாச அதற்காக நிறையவே செலவளித்தார். அரசியல் தவறுகளை மறைத்து மக்களின் கவனத்தைத் திசைதிருப்புவதற்கான கவசமாக கிரிக்கெட் பாவிக்கப்படத்தொடங்கியது- இவரது காலத்திலேயே. தான் மேற்கொண்ட இனவாத யுத்தத்தின் தோல்விகளை கிரிகெக்கட்டைக் கொண்டு நன்றாகவே மறைத்துக் கொண்டார். அதேபோல், இனக்கலவரங்கள்; ஏற்படக்கூடிய அளவிற்கு சிங்கள மக்கள் மத்தியில் இனவாத கொந்தளிப்பு ஏற்படும் சந்தர்ப்பங்களிலெல்லாம், கிரிக்கெட்டைப் பாவித்து அவ்வுணர்வுகளை வழிந்தோடச் செய்தார். இதற்கேற்றாற்போலவே கிரிக்கெட் அணியின் உளவியலும் கட்டியமைக்கப்பட்டு வந்தது. அதன் உச்ச 'பலன்' தற்போதே வெளிப்படத் தொடங்கியுள்ளது.




அடுத்த இதழில் முடியும்..

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# ஆசிரியர் சேவை சீராக்கப்படுமா?

ஆசிரியர் சேவை 06.10.1994 ஸ்தாபிக்கப்பட்டு 01.01.1995 முதல் அமுலுக்கு வந்ததை அனைவரும் அறிவர். சுமார் 2 3/4 வருடங்கள் கடந்து விட்ட போதிலும் கல்வி அமைச்சு குழப்பநிலையிலேயே இருந்து வருகின்றது. ஆசிரிய சேவை ஏற்படுத்தப்பட்டமை மிகுந்த வரவேற்பைத் தந்தது போலவே முற்றுப் பெறாத போராட்டங்களையும், ஆசிரியர்களிடையே ஏற்படுத்தி விட்டது. தொழிற்சங்க நடவடிக்கை எடுக்குமளவுக்கு பிரச்சினை வளர்ந்து விட்டது. புதிய சேவைக்கு ஆசிரியர்களை உள்வாங்கிய போது நீதியான நெறிமுறை கடைப்பிடிக்கப்படவில்லை. வெறுமனே சேவைக்காலத்தை மட்டுமே கொண்டு ஆசிரியர் தரம் வகுக்கப்பட்டமையால், அது ஒருவகையில் சேவையில் இருந்து நீங்கும் வயதெல்லை உடையவர்களைக் கௌரவிப்பதாகவே இருந்தது. 06.10.1994 இற்கு முதல் நாள் ஓய்வு பெற்றவருக்கும், மறுதினம் ஓய்வு பெற்றவருக்கும் சுமார் 4000/= சம்பள வித்தியாசத்தை ஏற்படுத்தியது. உண்மையில் சேவையில் இருப்போரை கவனத்தில் கொண்டதாக ஆசிரிய வகுப்புத் தரங்கள் அமையவில்லை. இனிவரவுள்ள கல்விச் சீர்திருத்தங்களுக்கு உதவ இருப்போருக்கு வேதனை தருமளவுக்கு சம்பளப்படி நிலைகள் முன்வைக்கப்பட்டமை பிரச்சினைக்கு வழி சமைத்தன. 1988ல் செய்யப்பட்ட சம்பள மீளாய்வின் போது சில ஆசிரியர்களின் சேவைக்காலத்தை குறைத்து குறைந்த சேவைக்காலம் உடையவர்களின் சம்பளத்துக்கு சமன் செய்யப்பட்டது. இந்த அநீதி இன்று வரை நீடித்துக் கொண்டே வருகின்றது. இது களையப்படவில்லை. 1996ல் க.பொ.த (உ/த) பரீட்சை வினாத்தாள் மதிப்பீட்டு வேலைகளைப் பகிஷ்கரித்ததன் மூலம் பட்டதாரி ஆசிரியர்கள் சிறந்த சம்பளத்தையும், சேவைத்தரத்தையும் பெற்றுக்கொண்டார்கள். 1997ல் விஞ்ஞானப் பட்டதாரிகள் தம்மை விசேட பாட பட்டதாரிகளாக ஏற்கவேண்டுமென க.பொ.த. (உ/த) பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணியினைப் பகிஷ்கரிப்பதன் மூலம் போராட்டத்தில் இறங்கி விட்டனர். ஆக மொத்தத்தில் சேவைத் தரங்களை எல்லைப்படுத்துவதிலும் சம்பள அமைப்பை வரையறுப்பதிலும் பெரிய முரண்பாடுகளைத் தோற்றுவித்துள்ளது எனக்கூறலாம்.

இவ்வாறே அதிபர் சேவையும் முடிவில்லாத திசையை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. பி.சி.பெரேரா ஆணைக்குழுவினால் கூட அதிபர் சேவையைப் புனரமைக்க முடியவில்லை. 06.10.1994ல் அதிபர் சேவை ஆரம்பிக்கப்படுமென கல்வியமைச்சு அளித்த உறுதிமொழி இன்று வரை நிறைவேற்றப்படவில்லை. அதிபர் சேவைக்கு புள்ளித்திட்ட அடிப்படையில் உள்வாங்கப்படுவார்கள் எனக் கூறப்பட்ட போதிலும் சிக்கலான நிலையே காணப்படுகின்றன. தரம் பெற்ற பதினொரு அதிபர் சங்கங்கள் ஒன்று கூடித் தயாரித்த பிரமாணங்களை வெளியிடுவதில் அமைச்சு காட்டி வரும் தயக்கம் ஏமாற்றத்தையே ஏற்படுத்தியுள்ளது. அதிபர் தரம் 111ஐச் சேர்ந்த சேவைமூப்புடைய ஆசிரியர்கள் உயர் நீதிமன்றத்தில் நிவாரணம் கோரியுள்ள போதிலும் அமைச்சு அதிகாரிகள் எதிர்மாறான போக்கையே காட்டுகின்றனர். ஒகஸ்ட் மாதம் 97/05 சுற்றறிக்கை மூலம் முதலாம் தர அதிபர்களின் சம்பளம் வெகுவாக அதிகரிக்கப்பட்டது. ஆயினும் 2ம், 3ம் தர அதிபர்களுக்கு எவ்வித அதிகரிப்பும் செய்யப்படவில்லை. இதனை நோக்கும் போது தீர்வுக்கான அடிப்படை எதுவும் இருப்பதாகக் கொள்ள முடியாது. ஆசிரிய சேவைக்கு நெருங்கிய வகையில் அதிபர் சேவையில் மாற்றம் கொண்டு வரப்படல் வேண்டும். இல்லையேல் எதிர்காலக் கல்விச் சீர்திருத்த முயற்சிகளுக்கு பெரும் இடையூறு ஏற்படலாம்.

கல்வி ஊழியம் சேவைப் புனரமைப்பின் போது உள்வாங்கல்களில் புள்ளி அடிப்படை பின்பற்றப்படாமை பெரும் ஏமாற்றத்தை உண்டு பண்ணிவிட்டது. மேற்கொள்ளப்பட்ட உள்வாங்கலின் போது சேவையில் இருப்பவர்களை விட ஓய்வு பெற்றுச் செல்லும் வயதினர்களுக்கே நன்மை கிட்டுமாறு பார்த்துக் கொள்ளப்பட்டமை பெரிய அநீதியாகும். எவ்வித திறமை தகைமைகளைக் கவனத்தில் கொள்ளாது சேவை மூப்பு மட்டும் சேவையின் கௌரவத்தைப் பேணாது. சேவை மூப்புடையவர்கள் அதிகரித்த சேவையைப் பாடசாலைகளுக்கு வழங்கினார்களா என்பது கேள்விக்குரியதே. இன்றும் கூட அதிகரித்த சம்பளம் பெறுபவர்களை விட குறைவான சம்பளம் பெறும் பயிலுனர் ஆசிரியர்கள் சிறந்த சேவையாற்றுகிறார்கள் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

06.10.1994இற்கு முதல் அமுலில் இருந்த சம்பளத்தில்' ஒரு விகிதாசார மாற்றத்தை ஏற்படுத்தியிருப்பின் இன்று ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கமாட்டாது.

எனவே சம்பள மீளாய்வுக் குழுக்களை ஏற்படுத்தி பிரச்சினைகளுக்குத் தீர்வு காண விளைவது காலத்தைக்கடத்தும் ஒரு தந்திரோபாயமாகவே தென்படுகிறது. சம்பள வேறுபாடு மிக அதிகரித்த அளவில் இருப்பதும் முன்னைய சம்பளச் சீர்திருத்தங்களின் போது அநீதி இழைக்கப்பட்டவர்களின் சேவைக்காலம் மீளாய்வு செய்யப்படாமையும் அரசியலில் சகாயத்தின் அடிப்படையில் அடிப்படைத் தகைமை அற்றவர்கள் அதிபர், நிருவாக உத்தியோகத்தர்களாக நியமனம் பெற்றமையும், முடிவில்லாத சிக்கலில் பொறிப்படுத்தியுள்ளமையைக் குறிப்பிட்டுக் கூறலாம். எனவே சிக்கல் தீர்க்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய தீர்வு கிட்டுமா?

**க. சிவநாதன், ஆரையம்பதி**

## திருமலை:
# வெளியான வினாத்தாள்கள்

திருகோணமலை நகரில் மாகாணக் கல்விப் பணிப்பாளர் செயலாளர் கல்வி அமைச்சு ஆகியன நிலைகொண்டு இருந்தும் திருகோணமலை நகரில் கோட்டக் கல்வி அதிகாரி மட்டத்தில் மாணவர்களுக்கு நடத்தும் 2ம்தவணைப் பரீட்சையில் மோசடிகளையும் ஊழல்களையும் தொடர்ச்சியாகத் தடுக்க முடியவில்லை. ஜூலை 23ம் திகதி நடைபெற்ற பரீட்சைகளின் வினாத்தாள்கள் பரீட்சைக்கு முன் கூட்டியே மாணவர்களின் கையில் கிடைத்து விட்டது. வினாக்களை தெரிவு செய்த ஆசிரியர்கள் இலாபத்திற்காகக் கல்வி புகட்டும் தனியார் கல்வி நிலையங்களில் அச்சீடு செய்யப்பட்ட வினாக்களையும் விடைகளையும் அள்ளி வழங்கியுள்ளனர். பாடசாலைகளில் ஆசிரியர்களின் குழந்தைச் செல்வங்கள் பாடசாலையில் கற்பிக்காத பாடவிதானத்துக்குரிய வினாக்களுக்கு விடை எழுதி அதிக புள்ளியும் பெற்றுள்ளனர். பெற்றோர்கள் பிள்ளைகளின் கல்விபாதிப்பு அடையும் என்ற நிலையில் உள்ளதென கவலை கொண்டுள்ளனர். இரு பாடசாலைகளில் ஜூலை 2ம்திகதி பரீட்சை ஆரம்பித்து வினாத்தாள்களும் வழங்கப்பட்டுள்ளன. இவ்விடத்தில் கல்வித் திணைக்களம் இரு பாடசாலை அதிபருக்கு எதிராக நடவடிக்கை மேற்கொண்டதாகத் தெரியவில்லை. அன்புவழிபுரம் கலைமகள் வித்தியாலயத்தில் 9ம் ஆண்டு சமூகக்கல்வி வினாத்தாள்கள் ஆசிரியரால் சீராக திருத்தப்படவில்லை. மாணவர்கள் வினாக்குரிய சரியான விடையை ஆசிரியரிடம் கூறியபோது தற்போது ஒன்றும் செய்யமுடியாது. புள்ளிகள் போட்டு முடிந்து விட்டது என்று கூறியுள்ளார். ஒருசில ஆசிரியர்கள் லாப நோக்கத்தில் இப்பரீட்சையை நடத்துகின்றார்கள் என்று அறிந்தும் மாகாண கல்விப்பணிப்பாளர் நடவடிக்கை மேற்கொள்ளாமல் இருப்பது வியப்புக்குரியதாகும்.

**சிப்பி, திருமலை**

# உருப்படியான விமர்சனமே தேவை

திரு. ஸ்பாட்டக்கஸ்தாசன், நான் அன்று சிறிமாவோவையும் இன்று, மாஓவையும் களங்கமற்றவர்களாகக் கண்டு வருகிறவனாக ரொம்ப டமாஸ் (வேடிக்கை, சரிநிகர் 132 ப.19) பண்ணியிருக்கிறார். அப்படி எங்கே, எப்போது செய்தேன் என்று அந்தப் புதினத்தை எனக்குத் தெரியத்தர முடியுமா? மூன்றாங்கை நாலாங்கையாகக் காதிலும் கண்ணிலும் படுகிறதையெல்லாம் நம்பக்கூடாது என்று எனக்கு ஒரு நம்பிக்கை. அது கிடக்க.

எஸ்.வி.ராஜதுரையின் எழுத்தை விமர்சிக்கும் 'லைசென்ஸ் ஆபீஸ்' எங்கே இருக்கிறது என்று திரு. ஸ. தெரிவித்தால் எல்லோருக்கும் உதவியாக இருக்கும்.

சரிநிகர் 133ம் இதழில் கோணேஸ்வரி பற்றிய கவிதை தொடர்பாக எனது கருத்துக்கள் பிரசுரமானமை என்னை வியக்கச் செய்தது. நான் இக்கவிதை தொடர்பாக சரிநிகர் அலுவலகத்தில் மூன்று மாதங்கள் முன்பு கதைத்ததையடுத்து, எழுதிய எனது கடிதமும், நட்சத்திரன் செவ்விந்தியன் எழுதிய கடிதமும் ஒரே விதமானவை என்பதால் எனது கடிதத்தைப் பிரசுரிக்காது விடுவதாக ஆசிரியர் குழு நண்பர் ஒருவர் சொன்ன போது, வேறுபாடாக என் மடலில் உள்ளதை விரும்பினால் பிரசுரிக்கலாம் என்று சொன்னேன். விவாதம் அன்று வளர்ந்தபோது பிரசுரமாகாத கடிதம், இவ்வளவு காலம் தாழ்த்தி முழுதாகவே பிரசுரமானமை ஏனென விளங்கவில்லை. நான் கூறிய கருத்துக்களில் என்னளவில் மாற்றம் இல்லாதபோதும், இவ்வளவு தூரம் பல்வேறு கருத்துக்கள் கூறப்பட்ட பின்னர் கடிதம் பிரசுரமாகும் போது, அதிற் சில பகுதிகள் வேறு முறையில் எழுதப்படவும் புதிய சில எண்ணங்கள் சேர்க்கப்படவும் தேவை உண்டு என்று ஆசிரியர் குழுவினர் எண்ணாதது கவலைக்குரியது. முக்கியமாகக் கடிதம் பிரசுரமாகாது என்று சொல்லப்பட்ட பின்பு, அம்முடிவில் ஏற்பட்ட மாற்றம் பற்றி எழுதியவர்க்குத் தெரியப்படுத்தும் பொறுப்பு ஏட்டின் ஆசிரியர்கட்கு உண்டு. இவ்வாறான தவறுகளும் அனாவசியமாகத் தனிமனிதர்கள் மீது ஏவப்படும் நிந்தனைகளும் சரிநிகருக்கு அவசியந்தானா என்று பரிசீலனை செய்வது நல்லது.

சரிநிகரில் எஸ்.வி.ராஜதுரையின் நூல் விமர்சனம் பற்றிய என் குறிப்புக்கள் அவரது கற்பனையை மேலும் தூண்டியுள்ளது பற்றி (சரிநிகர் 134) என்ன சொல்வது! எழுதப்பட்ட கேள்விகளைத் தட்டிக்கழிக்கப் பிரச்சினைகளைத் திசைதிருப்புவதில் அவரது அபரிதமான ஆற்றல் மீண்டும் புலனாகியுள்ளது. அதைவிட முக்கியமாக, இலங்கை அரசியல் பற்றிய அவரது ஆழமான அறிவு என்னை அசர வைக்கிறது. அவரது எழுத்து நடை தமிழகத்தின் அதி நவீனத்து மகா வித்துவான்களது சிறப்பு. இத்தனைக்கும் பின்பு அவரது எழுத்திலிருந்து அடியேனால் ஒரே ஒரு பயனுள்ள முடிவுக்கே வரமுடிந்தது. அதாவது, முத்துலிங்கத்தின் நூலுக்கு எவராவது உருப்படியான ஒரு விமர்சனம் எழுதினால் நன்று என்பது தான். மற்றப்படி முன்பு கேட்ட ஒரு கதை நினைவுக்கு வந்தது.

காந்தியைக் கடுமையாக நிந்தித்து அவருக்கு ஒரு நீண்ட மடலை ஒரு வெள்ளையர் எழுதினார். காந்தி அதைப்படித்து விட்டுக் குப்பை கூடையுட் போட்டதைக் கண்ட ஒருவர் ''அதிலே பயனுள்ளது எதுவுமே இல்லையா?'' என்று காந்தியிடம் கேட்டார். சிரித்துக் கொண்டே, தாள்களைப் பிணைத்த குண்டூசியைக் காட்டி ''அதைத்தான் ஏற்கெனவே எடுத்துக் கொண்டேனே'' என்று காந்தி சொன்னார்.

ராஜதுரையின் எழுத்தில் உபயோகமாக என்ன இருந்தது என்று கேட்கிறீர்களா? அதைத் தான் ஏற்கெனவே சொல்லி விட்டேனே.

**சிவசேகரம்**
**கொழும்பு**

# மண்ணின் மைந்தர்களின் மமதை

கிழக்கைச் சேர்ந்த பதினைந்துக்கு மேற்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் அநேகமாக வாரத்திற்கு ஒரு தடவையேனும் உதவி உளவுக் கட்டுப்பாட்டாளர் அலுவலகத்துடன் தொடர்புகளை மேற்கொள்ளுகின்றன. ஆனால் இவ் அலுவலகத்தில் கூட்டுறவுச்சங்கங்கள் மூன்றாம் தரப் பிரஜைகளாக நடாத்தப்பட்டு வருகின்றன. முன்பு கச்சேரி நேரடி நிர்வாகத்தின் கீழ் செயற்பட்ட போது முக்கிய மூன்று உணவுப்பொருள் விநியோகம் நடைபெற்ற போது கூட கூட்டுறவுச்சங்களுக்கான விநியோகக் கட்டளைகள் (எப்பொருளாயினும்) நேரம் காலம் இன்றி துரிதமாகவும் நிறைந்த புரிந்துணர்வோடும், இங்குள்ள ஆளணி அளவைக் கொண்டே வழங்கப்பட்டு வந்தன. வேகமாகவும், உண்மையான விருப்புடனும் பொறுப்புணர்ச்சியுடனும் செயற்பட்ட தகுதிவாய்ந்த அதிகாரிகளால் அது சாத்தியமாயிற்று.

இத்தனைக்கும் இப்போது தகுதிவாய்ந்த அதிகாரிகளாகச் செயற்படுவோர் கிழக்கு மண்ணின் மைந்தர்கள். அதிகார மமதை மட்டும் அதிகளவு காட்டிச் செயற்படுபவர்கள். கச்சேரியில் இதே அலுவலகத்திற்குப் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களாகச் செயற்பட்டவர்கள் வெளிமாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். பெயர் சொல்லும்படி பெருந்தன்மையுடனும், பரந்த மனப்பான்மையுடனும், பொறுப்புணர்ச்சியுடனும் அவசிய மேற்பட்ட போதெல்லாம் தங்கள் சொந்த இருப்பிடங்களைக்கூட காரியாலயமாக்கி, கருமமாற்றியவர்கள்.

இப்போதிருக்கும் தகுதிவாய்ந்தவர்களின் பெயர் சொன்னாலேயே முகம் சுழிக்காத கூட்டுறவுச் சங்கங்களே இல்லையெனலாம். இந்த முகம் சுழிப்பிற்கான இரகசியம் என்னவென்று தகவல்கள் திரட்டியபோது பின்வரும் உண்மைகள் தலைகாட்டின.

✱ சங்கத்தின் பியோன் ஒருவர் விநியோகக்கட்டளைப் பெறச் சென்ற போது இவன் என் கதிரைக்கு முன்னால் இருக்கத் தகுதியா? இலிகிதர் ஒருவரை அனுப்புங்கள் என்று சங்கத்திற்கு அழைப்பு விட்டமை.

✱ இங்கு பணிபுரியும் பியோனின் அக்கறையும் சுறு சுறுப்பும் மூத்த இலிகிதரைத் தவிர பதவி நிலை உத்தியோகத்தரிடம் கூட காணப்படாமை.

✱ முன் வந்த மா முன் செல்ல வேண்டுமென்ற முன் யோசனை இல்லாமல் ஆறு மாதங்களுக்கு முன் முடக்கிய மாவை, பழுதடைந்தது தெரிந்தும், சங்கங்கள் தலையில் கட்டித்தான் ஆகவேண்டும் என்று நிர்ப்பந்தித்தல். இதற்கான தண்டப் பணம் அவர்களிடம் அல்லவா அறவிட்டிருக்க வேண்டும். மா பழுதடைந்து விட்டது என்று பிரஸ்தாபித்தால், சுகாதாரப் பரிசோதகரா? எனப் பரிகாசித்தல்.

✱ தகுதி வாய்ந்த உத்தியோகத்தர்களின் நிர்ப்பந்தங்களுக்கு தலை சாய்க்காத சங்கங்களுக்கு தந்திரமாக தண்டப் பணம் அறவிடுதல். முன்னறிவித்தல் எதுவும் இன்றி வழக்கமான நடைமுறை விநியோகக் கட்டளைகளை வழங்க மறுத்தல்.

என்று அடுக்கிக் கொண்டே போகலாம்.

மண்ணின் மைந்தர்களே! உங்கள் மமதை மறைவது எப்போது? சங்கம் முகம் மலர்வது எப்போது? மக்களை மனம் குளிர வைப்பது எப்போது?

**உளவன், கல்லாறு**

www.tamilarangam.net

Registered as a newspaper in Sri Lanka

# மீன் வியாபாரி அடித்துக் கொலை!

அண்மையில் பாலமுனையில் முஸ்லிம் மீனவர்களுக்கு சொந்தமான படகுகள், வலைகள் எரித்து சூறையாடப்பட்ட சம்பவம் எதுவித விசாரணைகளுமின்றி அப்படியே இருக்க....

நவம்பர் 10ம்திகதி மட்டக்களப்பு பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த போது மரணமுற்ற ஆரையம்பதியைச் சேர்ந்த கே. அழகையா எனும் மீன் வியாபாரியின் மரணம் மட்டு நகரின் நிலைமையைக் கோடிட்டுக் காட்டுகின்றது.

இவ் மீன் வியாபாரியிடம் ஆரையம்பதியிலுள்ள ரெலோ இயக்கத்தினர் பல தடவைகள் கடனுக்கு மீன் வாங்கியுள்ளனர். அழகையாவிடம் மீனைக் குறைந்த விலையிலும், கடனுக்கும் கேட்டு வாக்குவாதப்பட்ட ரெலோ இயக்கத்தினர் 6ம்திகதி இவரை பிடித்துக் கொண்டு போய் ரெலோ முகாமிலும் பின்னர் காங்கேயனோடை படைமுகாமிலும் தடுத்து வைத்து கடுமையாகத் தாக்கியுள்ளார்கள்.

கடும் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்ட அழகையா 7ம்திகதி ஆரையம்பதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இங்கு இவரின் உடல்நிலை மோசமடையவே 8ம்திகதி இங்கிருந்து அம்புலன்ஸ் வண்டி மூலம் மட்டக்களப்பு பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு பொது வைத்தியசாலையில் 10ம்திகதி 2 மணியளவில் இவர் மரணமுற்றுள்ளார் இவரின் சிறுநீரகம் தாக்குதலினால் பாதிக்கப்பட்டுள்ளதாலேயே மரணமானதாகத் தெரியவருகிறது.

படையினருடன் சேர்ந்து ஒவ்வொரு மீனவரிடமும் இரண்டு மீன்கள் வீதம் பறித்தெடுப்பது, மீன் வியாபாரிகளிடம் குறைந்த விலையில் மீன்களை எடுப்பது, எடுத்த மீன்களுக்கு காசு கொடுக்காமல் விடுவது என்பன போன்ற இங்குள்ள ஏழை மீனவர்களின் வயிற்றில் கை வைக்கின்ற வேலைகளை ஜனநாயக வழிக்கு வந்த ரெலோ தலைமை கண்டும் காணாமல் இருப்பது ஜனநாயக வழியை உறுதிப்படுத்த ஒரு போதும் உதவாது!

# பத்தாயிரம் மாணவர்கள் விசாரணை!

நவம்பர் 17ம்திகதி காலை மட்டக்களப்பு நகருக்குள்ளும் நகரை அண்டிய பகுதிகளிலுள்ள பாடசாலைகள், கல்லூரிகளை பொலிசாரும் படையினரும் முற்றுகையிட்டனர்.

பாடசாலைகளைச் சுற்றி வளைத்தும் உள்ளே அத்துமீறியும் நுழைந்த பெருந்திரளான படையினரைக் கண்டதும் மாணவர்களும், ஆசிரியர்களும், அதிபர்களும் பெரும் பதற்றத்துக்குள்ளானார்கள்.

அரசடிச்சந்தி இந்துக்கல்லூரி, மகாஜனக்கல்லூரி ஆகியவற்றின் மாணவர்கள் அரசடிச்சந்திக்கு கூட்டிவரப்பட்டும், நகரிலுள்ள ஏனைய பாடசாலை மாணவர்கள், வெபர் மைதானத்துக்கு கூட்டிச் செல்லப்பட்டு தனித்தனியாக விசாரிக்கப்பட்டார்கள்.

சிவானந்தா வித்தியாலயம் மற்றும் கல்லடி பகுதிகளிலுள்ள ஏனைய பாடசாலை மாணவர்கள் அந்தப் பகுதி பாடசாலை வளவுகளுக்குள் வைத்து விசாரிக்கப்பட்டார்கள்.

இச்சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது பாலர் வகுப்பு முதல் உயர்தர வகுப்பு மாணவர்கள் வரை படையினராலும், பொலிசாராலும் விசாரிக்கப்பட்டார்கள்.

பாடசாலை மாணவர்களின் புத்தகங்கள், உறைகள், புத்தகப்பைகள் பாடசாலையின் மேசை, கதிரை, சுற்றாடல் வகுப்பறை என்பனவும் சோதனையிடப்பட்டுள்ளன.

பாடசாலைகளைச்சுற்றி வளைத்து மாணவர்களை பாடசாலைகளிலிருந்து படையினர் விசாரணைக்காக அழைத்துச்சென்றதை கேள்விப்பட்ட பெற்றோர்கள் கலங்கியபடி பள்ளிக்கூடங்களை நோக்கி படையெடுத்ததை அவதானிக்க முடிந்தது.

வெபர் அரங்கில் மட்டும் பத்தாயிரத்துக்கும் அதிகமான மாணவர்கள் கூட்டிச் செல்லப்பட்டு விசாரிக்கப்பட்டார்கள். பாடசாலை ஆரம்பமாவது தாமதமானதால் இது தொடர்பாக அங்கு விசாரணையில் ஈடுபட்ட பாதுகாப்புப் படை உயர் அதிகாரிகளிடம் ஒரு அதிபர் கேட்டபோது இது மேலிடத்து உத்தரவு என்றாராம். அவ்வதிபர் உடனே மட்டக்களப்பு பிரிகேடியரிடமஇது தொடர்பாகக் கேட்ட போது அவரும் இது தனக்கு வந்த மேலிடத்து உத்தரவு என்றாராம்.

# ஊழலுக்கு எதிராகப் போர்க் கொடி

பத்திரிகைகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ள ஊழல், துஷ்பிரயோகங்கள், கொள்ளை போன்ற சம்பவங்கள் தொடர்பாக அரசும், சட்டத்துறையும் எந்த வித நடவடிக்கையும் எடுக்காததன் காரணமாக, சுதந்திர பத்திரிகை ஊடக இயக்கம் ஆர்ப்பாட்டமொன்றை நடாத்த திட்டமிட்டுள்ளது.

ஊழல், துஷ்பிரயோகங்கள் தொடர்பாக தொடர்ச்சியாக பத்திரிகைகள் செய்தி வெளியிட்டு வந்தபோதிலும், அவை தொடர்பாக பாராமுகமாக நடந்து கொள்வதன் மூலம், அச்சம்பவங்களை மறக்கக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளதென சுதந்திர பத்திரிகை ஊடக இயக்கத்தின் நிறைவேற்றுக்குழு தெரிவித்துள்ளது.

இதன் முதலாவது நடவடிக்கையாக, சமீப காலமாக பத்திரிகைகளில் வெளிப்படுத்தப்பட்ட சம்பவங்கள் தொடர்பாக, லஞ்ச, ஊழல் ஆணைக்குழு, பொலிஸ், வரித்திணைக்களம் ஆகியவற்றுக்கு பத்திரிகைகளின் ஆசிரியர்களின் கையொப்பத்துடன் முறையீடு செய்யப்படவுள்ளது.

எயார் லங்கா தலைவர் ஹரி ஜயவர்தன அவர்களின் ஸ்டெசன்ஸ் நிறுவனத்தின் வரி ஏய்ப்பு நடவடிக்கை, டிஸ்டிலரிஸ் நிறுவனத்தினால் தரம் குறைந்த சாராய உற்பத்தி, டெய்லி நிறுவனத்தினால் முதலீட்டுச் சபை ஒப்பந்தம் மீறப்பட்டு வரிச்சுமை குறைக்கப்பட்டமை, நுவரெலியா கிழங்கு விவசாயிகளிடம் தரகுப் பணம் பெற்றுக் கொண்ட ரூபவாஹினி கூட்டுத்தான தலைவர் டபிள்யூ. டி. ஜயசிங்க அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்காமை, மஹவ மாஜிஸ்திரேட்டுக்கு எதிரான பாலியல் வல்லுறவு குற்றச்சாட்டு போன்ற சம்பவங்கள் தொடர்பாக முறையீடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன எனத் தெரியவருகின்றது.

-யுக்திய

# செஞ்சிலுவைச் சங்கம் புலிக்கு உதவி – ராவய

விடுதலைப் புலிகளினால் கொழும்பில் மேற்கொள்ளப்படும் தாக்குதல்களுக்குத் தேவையான கரும்புலிகளை கொழும்புக்கு அழைத்து வரவும், முல்லைத்தீவு பிரதேசத்திற்கு தேவையான வைத்தியர்கள், சிங்களமொழி ஆலோசகர்கள் ஆகியோரை அழைத்துச் செல்லவும் செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியை நேரடியாக பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கின்றது என, தற்போது பாதுகாப்பு படைகளின் பாதுகாப்பில் இருக்கும் புலிகள் அமைப்பின் லெப்டினன்ட் கேர்ணலான ராஜரத்னம் சுபகரன் எனும் பார்த்திபன் வெளிப்படுத்தியுள்ளதாக பாதுகாப்பு அறிக்கைகளை மேற்கோள்காட்டி ராவய பத்திரிகை எழுதியுள்ளது. தெரிவிக்கின்றன.

விடுதலைப்புலிகளின் கரும்புலிகள் எனப்படும் தற்கொலைப் பிரிவின் உறுப்பினர் எனக்கூறப்படும் சத்தியலிங்கம் எனும் நபர் செஞ்சிலுவைச் சங்க ஓட்டுனராக சேவை புரிந்து கொண்டு கொழும்பு - முல்லைத்தீவு பிரதேசங்களில் போக்குவரத்திற்கு உதவி வருவதாகவும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

கடந்த ஐந்து வருட காலமாக, புலிகள் மேற்கொண்ட பல தாக்குதல்களில் தொடர்பு கொண்டு, பல முகாம்களுக்கு பொறுப்பாகவிருந்த கேர்ணல் சுபாகரன் இலங்கை இராணுவத்தின் 51 வது படைப்பிரிவின் உளவுப்பிரிவினரால் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வரும் சந்தர்ப்பத்தில், அவர் செஞ்சிலுவைச் சங்கத்திற்கும் புலிகளுக்கும் இடையிலான தொடர்புகள் பலவற்றை வெளிப்படுத்தியுள்ளதாகவும் அது தெரிவிக்கிறது.

# பொலிசுக்கு பாதுகாப்பு இல்லையாம்!

செப்டம்பர் 23ஆம் திகதி சென்றல் கேம்ப் 4ஆம் கொலனி கிராம மக்கள் மீதான சென்றல் கேம்ப் பொலிஸார் நடத்திய காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை யாரும் இலகுவில் மறந்திருக்க மாட்டார்கள்.

கொலை செய்யப்பட்டவர்களினது உறவினர்களும், துப்பாக்கிச் சூட்டினால் படுகாயமடைந்த வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றவர்களாளும் தாக்குதல் நடாத்திய பொலிஸாரை அடையாள அணிவகுப்பின் மூலம் அடையாளம் காட்டுவதற்காக, கல்முனை நீதிமன்ற நீதிபதி அன்டன் பாலசிங்கம் (புலிகளின் அரசியல் ஆலோசகர் அல்ல) சென்றல் கேம்ப் பொலிஸாரை நீதிமன்றில் ஆஜராகும்படி உத்தரவிட்டிருந்தார்.

ஆனால் நவம்பர் 7ஆம் திகதி கல்முனை நீதிமன்றில் ஆஜராகிய பொலிஸ் அதிகாரி ஒருவர் பாதுகாப்பு காரணங்களக்காக கல்முனை நீதிமன்றுக்கு வரமுடியாது என்றும் அம்பாறை நீதிமன்றுக்கு வழக்கை மாற்றும் படியும் கேட்டார்.

அதனை நிராகரித்த கல்முனை நீதிபதி மீண்டும் நவம்பர் 17ஆம் திகதிக்கு வழக்கை ஒத்தி வைத்தார். நவம்பர் 17ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகிய சென்றல் கேம்ப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எச்.ஜினசேன கல்முனை நீதிமன்றத்துக்கு வருவதற்கு பொலிசார் பயப்படுகிறார்கள் எனவே அம்பாறை நீதிமன்றுக்கு மார்றித்தருமாறு கேட்டார்.

இவ்வேளை சாட்சிகளின் நலன்களைக் கவனிக்கும் சட்டத்தரணி பேரின்பராஜா குறுக்கிட்டு மயிலந்தனை சம்பவத்தை நினைவூட்டினார்.

மயிலந்தனை அப்பாவி கிராமவாசிகள் மீதான படுகொலையை புரிந்த படையினரின் வழக்கை மட்டக்களப்பிலிருந்து பொலன்னறுவைக்கு திட்டமிட்டு மாற்றியதன் மூலம் சாட்சிகள் அங்கு பயத்தினால் செல்ல முடியாததால் அவ்வழக்கு அப்படியே மறைந்து போயுள்ளது.

சென்றல் காம்ப் பொலிஸார் மீதான வழக்கையும் அம்பாறைக்கு மாற்றுவதன் மூலமும் கொலைகாரப் பொலிஸாரை தப்பிக்க வைக்கவே முடியும் என்பதை கடந்தகால சம்பவங்கள் காட்டுகின்றன.

ஆனால் கல்முனை நீதிமன்ற நீதிபதி பொலிஸாரின் கூற்றை நிராகரித்து மீண்டும் டிசம்பர் 1ஆம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்துள்ளார்.

ஏலவே கல்முனை நீதிமன்றில் சாட்சியமளிக்க வந்த சாட்சிகள் கல்முனையில் வைத்தே பொலிஸாரால் கொலை மிரட்டல் விடப்பட்ட சம்பவங்கள் நிகழ்ந்திருக்க அம்பாறைக்கு சென்றால் எப்படியிருக்கும்...? சொல்லித் தெரிவதில்லை அரச படையினரின் கொடுரம்.

# எச்சரிக்கை!

அரசின் மிக முக்கிய பல நிறுவனங்களில், குறிப்பாக ஆறு நிறுவனங்களில் புலிகள் இயக்கத்துக்கு உளவுச் சேவை புரியும் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் சேவை புரிவதாக இராணுவ, பொலிஸ் தகவல் பிரிவுக்கு தெரிய வந்துள்ளதாக நவ.16ம் திகதிய ராவய பத்திரிகை தெரிவித்துள்ளது.

இவ் அதிகாரிகள், இலங்கை மின்சார சபையின் பிரதான அலுவலகம், கொலன்னாவை எண்ணெய் தாங்கி நிலையம், மக்கள் வங்கி தலைமையலுவலகம், வீடமைப்பு அதிகார சபை தலைமைப்பீடம், தேசிய ரூபவாஹினி கூட்டுத்தாபனம், பெற்றோலிய கூட்டுத்தாபனம் ஆகியவற்றில் உயர் பதவிகளில் வகிப்போராகவும் இன்டர்நெட் மற்றும் தொலை மடல் போன்ற ஊடகங்கள் மூலம் புலிகள் இயக்கத்துக்கு செய்தி வழங்குவதாகவும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

இச்சந்தேகத்துக்கு இடமான அதிகாரிகளை கைது செய்ய இராணுவப்பிரிவு நடவடிக்கை எடுத்து வருகின்றது என்றும் ராவய தெரிவித்துள்ளது.

# இலக்கியப் போட்டி

பேராதனைப் பல்கலைக்கழக சங்கீத நாட்டிய சங்கம் இலக்கியப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளது. படைப்புகள் சொந்த ஆக்கங்களாகவும், முன்னர் பிரசுரிக்கப்படாதவையாகவும் இருத்தல் வேண்டும். படைப்புகள் தாளின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதப்பட்டு 16.12.97க்கு முன்னர் அனுப்பி வைக்கப்படவேண்டும்.

**சிறுகதை:**

காலத்தை பிரதிபலிப்பதாகவும் யதார்த்த பூர்வமானதாகவும் அல்லது விஞ்ஞான விந்தைகள் – விஞ்ஞான விந்தைகளின் மா[illegible]க்கத்தினை மையமாகக் கொண்டதாகவுமிருத்தல் வேண்டும்.

**கவிதை:**

| | |
|---|---|
| பாடசாலை மட்டம் – | 1. நல்லதோர் வீணை செய்தே |
| | 2. உதயம் எப்போது |
| பல்கலைக்கழக மட்டம்: | 1. வாழ்வு |
| | 2. ஒளி எங்கே? |
| ஏனையோர் | 1. காணி நிலம் வேண்டும். |
| | 2. மனிதம் |

மரபுக் கவிதை 40 வரி, புதுக்கவிதை 80 வரிகளுக்குள் அடங்குதல் வேண்டும்.

**கட்டுரை:**

பாடசாலை

1. முதியோர் பேணுகை
2. விந்தைகள் புரி விஞ்ஞானம்

(350 சொற்களுக்கு மேற்படாது.)

பல்கலைக்கழகம்

1. வளாக நட்பும் மன நிலையும்
2. இலத்திரனியற் புரட்சி.

(600 சொற்களுக்கு மேற்படாது)

ஏனையோர்

1. சிறுவர் துஷ்பிரயோகம்
2. 21ஆம் நூற்றாண்டை நோக்கி

(600 சொற்களுக்கு மேற்படாது)

அனுப்ப வேண்டிய முகவரி
**கீதம் இலக்கிய போட்டி**
தமிழ்துறை
சங்கீத நாட்டிய சங்கம்
பேராதனைப் பல்கலைக்கழகம்
பேராதனை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

வெளியிடுபவர் : ச. பாலகிருஷ்ணன், இல. 18/02, [illegible] 18. 11. 1997.